தென்மொழி

தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

இந்தியை மாற்றுக!

சிறையுட் புகுத்தியும், சிற்றுயிர் வெளவியும்
செந்தமிழ்ச்சீர்
மறையப் புகுத்திய இந்தியை மாற்றுக!
மாற்றிலிரேல்,
குறையக் கிடத்திய கொம்பொடு போகாக்
குவட்டெருமைக்(கு)
உறையுட் புகுத்திய வாளை உருவுதற்
கோர் நொடியே!

மீனம் (பங்குனி)
தி. பி. 1996.

தென்மொழி

தனித் தமிழ்
இலக்கியத் திங்களிதழ்

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை' எனவே தமிழர் தோளெழுந்தால்,
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

சுவடி 3 | பங்குனி தி. பி. 1996 (1965மார்ச்சு) | ஓலை 2

புயலும் அமைதியும்!

சில மாதங்களுக்குமுன் தமிழகத்தில் வீசிய பெரும்புயலை விட மிகக் கடுமையான–வரலாறு காணாத பெருங் கிளர்ச்சியால் தமிழகமே போர்க்கோலம் பூண்டுக் காட்சியளித்தது. இப் பெரும் மொழிப் புரட்சி கல்விகற்க வேண்டிய மாணவர்களால் நடத்திக் காட்டப் பெற்றது. வடவரின் விடாப்பிடியான மொழிக் கொள்கையே, தமிழக மாணவர்களையும் நடுநிலையான தமிழ் மக்களையும் இவ்வாறு பொங்கியெழச் செய்தது எனின் பொய்யன்று. தமிழகத்தில் என்றும் நடந்திராத இம் மொழிப் புரட்சியால் நூற்றுக்கணக்கான மாணவர்கள் அரசினரின் இரக்கமற்ற போக்கால் சுட்டுக் கொல்லப் பெற்றனர். பன்னூற்றுக் கணக்கான மாணவர்களும் பொதுமக்களும் படுகிடையாக அடித்து நொறுக்கப் பெற்றனர். ஆயிரக்கணக்கான சிறுவர்களும் இளைஞர்களும் சிறை புகுந்தனர். உரிமை வேட்கையாலும், பஞ்சத்தாலும் பட்டினியாலுமே பல நாடுகளில் மக்கள் கிளர்ந்தெழுந்து போராட்டம் நடத்திப் பெரும் புரட்சிகளை விளைவித்திருக்கின்றனர். ஆனால், தாங்கள் பேசுகின்ற மொழியின் காரணமாக இவ்வளவு பெரிய அளவில் மாணவர்களும் மக்களும்

சிறப்பாசிரியர்: புலவ, பண்டித ஞா. தேவநேயப் பாவாணர்.
பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.
உறுப்பாசிரியர்: தங்கப்பா, மு. சாத்தையா, செம்பியன்.
உரிமை, வெளியீடு: தாமரை, உலகமுதல்வி.

பொங்கியெழுந்ததுதான் உலக வரலாற்றிலேயே முதலாவதான மிகவும் புதுமையான நிகழ்ச்சியாகும். இம் மொழிப் புரட்சி தங்கள் தாய் மொழியைக் காத்துக் கொள்ளவும், பிறர் மொழி தாங்கள் விரும்பாமலேயே தங்கள் மேல் திணிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்தவுமே நடத்தப்பெற்றதெனின் எவரும் மறுக்கார். தாங்கள் பேசுகின்ற, பேச விரும்புகின்ற மொழிக்கென மக்கள் கிளர்ந்தெழுந்த இப் போராட்டத்தைப் பற்றிப் பலர் பலவகைக் கண்ணோட்டத்தோடு பல வகையான கருத்தறிவிக்கலாம். ஆளுங் கட்சியினர் இதனையோர் அரசியல் விரகெனக் கூறி, எதிர்க்கட்சிகளை மடக்குதற்கும் அடக்குதற்கும் இப்போராட்டத்தின் விளைவுகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். எதிர்க் கட்சிகள் ஆளுங் கட்சியினரைத் தாழ்த்துதற்கும் வீழ்த்துதற்கும் இந்தப் புரட்சியைத் தமக்கொரு துணையாகக் கருதிப் பேசலாம். அமைச்சர்களும் அவர்தம் அடிதாங்கிகளும் ‘இப் போராட்டம் உண்மைப் போராட்டமன்று; காலிகளாலும் மக்கள் பகைவர்களாலும் நடத்தப்பெற்ற போராட்டமே’ என்று வண்ணித்துப் பேசலாம். கட்சித் தலைவர்களும் பெரும் புள்ளிகளும் இதனைத் தங்கள் தங்கள் நலனுக்காகவும், ஊதியத்திற்காகவும் இணைத்துப் பேசலாம். ஆனால் எல்லாருமே இதன் உண்மை யெழுச்சியையும், அதற்கடிப்படையான உரிமை உணர்வையும் அவ்வளவு எளிதில் மறுத்துவிடவோ மறந்துவிடவோ முடியாது. அப்படி மறுப்பாரும் மறப்பாரும் இதனால் வரும் விளைவுகளைப் புறக்கணித்துவிடவும் முடியாது.

நடக்கவிருந்த இப் போராட்டம்பற்றிப் பலவாறுகப் பல முறை பலராலும் பேசப்பெற்று வந்தது. கூட்டங்கள் கூட்டியும் மாநாடு நடத்தியும், தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்று, இப் போராட்டத்திற்கு அடிப்படையாக இருந்த இந்தி, தென்னக மக்களின்மேல் வலிந்து அவர்களின் விருப்பத்திற்கு மாறுகத் திணிக்கப்படுவதை வன்மையாகக் கண்டிக்கும் வகையில் அரசினர்க்கு எடுத்துக் கூறப்பெற்றது. நாட்டில் உள்ள நூற்றுக் கணக்கான செய்தித் தாள்களும், கிழமை, மாத இதழ்களும் மக்களின் உள்ளுணர்வையும், அரசினர் நடந்துகொள்ள வேண்டிய முறைகளையும் தெள்ளத் தெளிவாய் விளக்கி எச்சரித்து வந்தன. தென்மொழி அரசியல் சாராத நடுநிலையாளர்களின் சார்பில், ஏறத்தாழ எழுபதினுயிரம் கையொப்பங்கள் பெற்று, நீண்ட மடலுடன் மாநில முதலமைச்சர்க்கும், தில்லித் தலைமையமைச்சர்க்கும் பதிவஞ்சல்கள் வழி விடுத்தது. உள் நாட்டிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான கண்டன மடல்கள் தீட்டுமாறு தமிழர் எல்லாரையும் தென்மொழி வேண்டிக் கொண்டதற் கேற்ப, பல்லாயிரக் கணக்கான மடல்கள் நாள்தோறும் சென்னையிலும் தில்லியிலும் குவிந்தன. இந்த மடல்களையும் கையொப்பங்களின் படிகளையும் ஒன்று

திரட்டி, விளக்கமான மடலுடன் உலகஒன்றிப்புக் கழகத்திற்கும் தென்மொழி விடுத்துள்ளது. இத்தனைப் பரபரப்பும் எச்சரிக்கையும் காட்டப் பெற்றிருந்தும், இவ் வலிந்த போராட்டங்கட்குப் பின், தலைமையமைச்சர் திரு. சாத்திரியாரும், முதலமைச்சர் திரு பக்தவத்சலமும் அவர்தம் அடிவருடிகளும், 'இப் போராட்டம் தேவையற்றது; வெறித்தனமானது; அமைதியான முறையில் பேசித் தீர்த்திருக்கலாமே!' என்று கூறித் தம்அறியாமையைப் புலப்படுத்தியிருக்கின்றனர். 'வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை, எரிமுன்னர் வைத்தாறுபோலக் கெடும்' என்பதறியாத இவர்கள், ஆட்சித் தலைமைக்கே தகுதியற்றவர்கள் என்பதே நம் கருத்து.

அமைச்சர்கள் தங்களின் அறியாமையாலும், தாம் என்றென்றைக்கும் பதவிகளில் நிலைத்திருத்தல் வேண்டும் என்ற பதவிப்பித்தாலும், தமக்கிருக்கும் அதிகாரத்தாலும் இக் கிளர்ச்சியை எளிதெனக் கருதி நாட்டை இத்தனை விளைவுகளுக்கும் உள்ளாக்கியுள்ளனர். இல்லெனின் தொடக்கத்திலேயே இதனை எண்ணி, இதுபற்றித் தாங்கள் கொண்டுள்ள கருத்தையும் முடிவையும் மாற்றியமைத்திருக்கலாம். இத்தகைய பெரும் போராட்டத்தையும் அதனுல் ஏற்பட்ட கடுமையான விளைவுகளையும் முன்பே எண்ணிப் பார்த்து அதற்குத் தக்கவாறு நடக்கத் தவறிவிட்ட தங்களின் அறியாமையைஒப்புக்கொண்டு. இனியாகிலும் இவ்வாறுன விளைவுகள் ஏற்படாமல் தடுக்கின்ற வகையில் ஒரு மாற்றத்தைச் செய்ய முற்படாமல், இன்னும் இப் போராட்டம் நடந்த முறையையும், விளைவையும், அதை எதிர்க் கட்சிகளே தூண்டிவிட்டன என்ற குறையையுமே கூறிக் கொண்டிருப்பது இவர்களின் அறியாமையை மேலும் விளக்கிக் காட்டுகின்றது. இப் போராட்டம் பெருமளவில் மாணவர்களாலேயே நடத்தப் பெற்றிருப்பதை யாவரும் அறிவர். எதிர்கால மக்களும், தலைவர்களும் அவர்களே என்பதாலும், இந்தித் திணிப்பால் தொல்லையும் துயரும் வாழ்க்கை வாய்ப்பிழப்பும் அடையப்போவது அவர்களே என்பதாலும், இப் போராட்டத்தை நடத்துவதற்கு மாணவரே அக்கறையும் உரிமையும் தகுதியும் உடையவர் என்பதை நாம் எல்லாரும் அறிவோம். இதனினும் இப் போராட்டத்தில் கொல்லப் பெற்றுரும், எரியூட்டிக் கொண்டாரும், அடிபட்டாரும், சிறைப்பட்டாரும் நூற்றுக்கு எண்பதின்மர் மாணவர்களே! அவ்வாறிருக்க இப் போராட்டம் "காலிகளாலும் மக்கள் பகைவர்களாலும் நடத்தப் பெற்றது; கள்ளக்கடத்தற்காரராலும் முதலாளிகளாலும் தூண்டிவிடப் பெற்றது" என்று தாறுமாருக வாய்க்கு வந்தவாறெல்லாம் பேசி இப் போராட்டத்திற்குள்ள பெருமையையும் வலிவையும் குறைக்கப் பொறுப்புள்ள அமைச்சர்கள் சிலர் முயன்றுவருகின்றனர். இவர்களின் பொய்யுரையும் போலியுரையும் மக்களால் உணரப்படு

மானுல் இவர்தம் பதவிக்கும் ஆட்சிக்கும் அதுவே இறுதி நிலை யாக ஆகும் என்பதை இவர்கள் அறிய வேண்டுகிறோம்! மேலும் இப் போராட்டத்தின் ஒரு பகுதி உண்மையிலேயே காலிகளா லும் கூலிகளாலும் நடத்தப் பெற்றிருக்குமானாலும் கூட, அக் காலிகளும் கூலிகளும் மக்கள்தாமே! அவர்களின் ஒப்போலைகள் தாமே இவர்களை அமைச்சராகவும் ஆட்சியினராகவும் ஆக்கி வைத்துள்ளன. அவர்களைப் புறக்கணித்துவிட்டு நல்லவர்களை மட்டுமே இவர்கள் ஆளவிரும்புவார்களானால் அந் நல்லவர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் எத்தனைப் பெயர் இருப்பர்? அவர் களை மட்டுமே ஆள விரும்புவார், அக் காலிகளுக்கும் கூலி களுக்கும் ஒப்போலை(வாக்கு)உரிமை வழங்கியது எதற்கு? என்றெல்லாம் உணர்தல் வேண்டும். மேலும் மக்கள் கிளர்ந் தெழும் எந்தப் போராட்டத்திலும் உண்மையானவர் பாங்கில் போலிகளும் தந்நலக்காரர்களும் சிறு அளவில் கலந்துதான் இருப்பர். அத்தகையவர் இக்கால் நடந்த போராட்டங்களில் மட்டும் கலக்கவில்லை என்று எவருமே கூற முன்வரார். ஆனால் நாம் போராட்டத்தின் தன்மையையும், அதன் அடிப்படைக் காரணங்களையும் உய்த்துணர்ந்து பார்க்கையில், அத்தகைய வரை விலக்கிவிட்டுப் போராட்டத்தின் வலிமையையும், விளை வையும் நாமே குறைத்து மதிப்பிட்டுக் கொள்வதால் எந்தப் பயனும் விளையப் போவதில்லை. அவ்வாறு நாம் கருதுவது காற்றடிக்கும் பக்கத்தை விட்டுவிட்டுப் பாய்மரத்தைக் கப்ப லுக்குக் குறுக்காகக் கட்டுவதைப் போன்றதாகும்.

நடந்த புரட்சிப் புயலின் கடுமையான தாக்குதலைப்பற்றியும் கொடுமையான விளைவுகளைப் பற்றியுமே நாம் பேசிக்கொண்டு காலத்தைப் போக்குவதால் பயனில்லை. மேலும் அத்தகைய புயல் உருவெடுக்கா வண்ணம் என்னென்ன செய்தல் வேண்டும் என்பதைப் பற்றியே எண்ணிப் பார்த்தல் வேண்டும். மாநில அமைச்சர்கள் இக்கால் நடந்துள்ள இந் நிகழ்ச்சிகளைப் பற்றிய ஒரு சிறு செய்தியையும்,அதன் அடிப்படையில் மின்னிக்கொண் டிருக்கும் ஒரு சிறு உண்மையையும் கூட நடுவணரசிலுள்ள அமைச்சர்களுக்கும் கட்சித் தலைவர்களுக்கும் எடுத்துக்கூறத் தவறிவிடக்கூடாது. போராட்டத்தால் நடந்த விளைவுகளை எதிர்காலத்தில் மேலும் நடக்கவிருப்பனவாகக் கருதிக்கொண்டு அவற்றிற்கான தீர்வு முறைகளை முன்னறிவுடனும், நடுநிலையுட னும் இன்றே செய்ய முனைதல் வேண்டும். எவ்வாற்றானும் காவலர்களைக் கொண்டோ, பட்டாளத்தார்களைக் கொண்டோ தம் அதிகாரத்தை நம்பியோ, குண்டுகளை நம்பியோ, இத்தகைய போராட்டம் மேலும் நடந்துவிடாதபடி தடுத்துவிடலாம் என்று நினைத்துவிடல் கூடாது அவ்வாறு நினைப்பதைப் போன்ற அரசியல் மடமை வேறொன்றுமில்லை. மாணவர்கள் அளவில் நடத்தப் பெற்ற இப் போராட்டம் பொதுமக்கள் அளவில் நடத்

தப்பெறுமானால், எத்தகைய கடுமையான விளைவுகள் நேரும் என்று அரசினர் எண்ணிப்பார்க்க வேண்டுகின்றோம். மாநில அமைச்சரவையின் தலைமை வடநாட்டுத் தலைவர்களால் பாராட்டிப் பேசப்பெறுவது அரசியல் சூழ்ச்சி! யானையால் யானை யாத்ததுபோலத் தமிழர்களின் மொழியுரிமைப் போராட்டத்தைத் தமிழரைக் கொண்டே அடக்கச் செய்யும் இத்தகைய அரசியல் விரகாண்மையை இனியேனும் பக்தவத்சலங்கள் புரிந்து கொள்ளட்டும். மாணவர்களின் உண்மை உணர்வைக்குறைத்து மதிப்பிட்டுப் பெரிய தீய விளைவுகளுக்குத் தங்களை இலக்காக்கிக் கொள்ளல் வேண்டா என்று பல்லாற்றானும் இடித்துரைக்க விரும்புகின்றோம்.

இறுதியாக மாணவர்களுக்கொன்று கூறிக்கொள்ள விரும்புகின்றோம். தூக்கிய வாளை உறையிலிடுங்கள்; தாக்குண்ட இந்தியெனும் காட்டெருமை மீண்டும் தமிழகத்திற்குள் கால்வைக்குமானால், தேக்கிய உணர்வெல்லாம் வலிவெல்லாம் கொண்டு மேலும் தாக்கிடுவோம். தன்மானத்தையும், உரிமையையும்விட வாழ்வும் உயிரும் நமக்கு ஒரு சிறிதும் பெரியன அல்ல. அறிவுக்கும், உலக அமைதிக்கும் கூட தன்மானமும் உரிமையுமே அடிப்படை. அவ்வுரிமையையும் மானத்தையும் நமக்குத் தேடித்தருவன மொழியும் பண்பாடுமே. மொழியையும் பண்பாட்டையும் விட்டுவிட்டு நாம் உயிருடன் இருக்கத் தேவையில்லை. நூற்றுக் கணக்கான மாணவ மணிகளைத் தமிழன்னை இழந்து தவிக்கின்றாள். அவர்களின் புன்னகை தவழ்ந்த பால் முகங்களில் பளிச்சிட்ட நம்பிக்கைகள் நமக்கு வலிவையும் பொலிவையும் தரட்டும். அவர்களின் தந்நலம் பேணாத ஈக உணர்வு எதிர்கால மக்களுக்கோர் உரிமைப் பட்டயத்தையும் விடுதலை ஆவணத்தையும் எழுதித் தரட்டும். பொய்மையும் போலியும் கலவாத மெய்ம்மையான வாழ்வில் நம்பிக்கை வைப்போம். அறமும் மறமும் நமக்குக் கிடைத்துள்ள கேடயமும் வாளுமாகும். அவற்றைக் கைக்கொண்டு பண்பாட்டு மாளிகை சமைப்போம். இத்தகைய நந் நோக்கங்களுக்கு ஊறு நேருங்கால் உயிர்கெடப் போராடுவோம். நடந்ததை நினையாதீர்கள்; நடப்பதை நினைமின்கள்! நாம் நடக்கும் வழிகள் நேர்மையானவை! நமக்கிருக்கும் இடர்களோ கூர்மையானவை! அவற்றிற்கென அஞ்சி அஞ்சி நம் குடியிருப்பைப் பிணக்குழி மேல் அமைத்துக் கொள்ள வேண்டுவதில்லை.

நன்மையும் தீமையும் எண்ணிப்பாராத ஆளுநர்களின் கொடுமையான பிடிக்குள் சிக்கி நாம் வெளிவர முயன்று கொண்டுள்ளோம். கைகளையும் நெஞ்சங்களையும் திறந்து போட்டுக்கொண்டு நாம் அவர்களிடம் அறங்கூற வந்திருக்கின்றோம். அவர்களை ஊறுபடுத்தும் ஓர் ஊசியையும் நாம் கைகளில்

(தொடர்ச்சி 8-ஆம் பக்கம்)

செந்தமிழ்த் தும்பை!

துரை-மாணிக்கம்

தும்பை சூடிலர்; இடைவாள் செருகிலர்;
வெண்கலை உடுத்திலர்; கொல்வேல் ஏந்திலர்;
தடமுர சார்த்திலர்; இடம்பொழு தமைத்திலர்!
வடம்பிணிப் பறுத்த மதக்களி றன்ன
தடம்பட நடந்த கால்கழல் பூண்டிலர்!
வேத்தவை நுழைந்திலர்; யாத்தநூல் அறிகிலர்!
பூத்த இளமுகத் தொளியுமிழ் கண்ணும்
முத்த வெய்துளி நுதலுஞ் சிவப்பக்
கொள்கை பொறித்த கொடிதோள் தாங்கி
வெல்கை யொன்றே வேண்டுவோ ராகி
வானம் அதிரச் சூழ்ந்துகோள் ஆர்த்து
மானங் காத்திட எழுந்தனர் இவரே!

புன்றலை முதிரா யாக்கையி னோரே!
முகமயிர் அரும்பா இளவயி னோரே!
பால்முகம் மாறுப் பசுமையோ ராகி
நூல்முகம் புகூஉம் பள்ளி யோரே!

செம்புது வெள்ளம் ஒப்போ ராகித்
தம்புதுக் கொள்கை தெருத்தொறும் முழக்கி
வைகறை தொடங்கிக் கதிரொடு நடந்தே
யாமமுந் துயிலாத் தறுக ணோரே!
மண்ணும் வேண்டிச் சூழ்ந்தனர் இலையே!
பொன்னும் விழைந்தனர் இலையே! பொருதும்
நோக்கும் அரும்பிலர்; நுண்கலை பயின்றிலர்;
கருவியுங் கொண்டிலர்; போர்முகம் கண்டிலர்;
சுவடியும் கோலுந் தூக்குவ தன்றிக்
கவடும் படையும் தாமறி கல்லார்!
படையும் மலைந்திலர்; நடையுந் தளர்ந்திலர்
இடையிடை நெகிழ்தலும் இறுதலும் இல்லார்!
விறலே அவர்தம் கோளே! விறற்கு
மறலே அவர்தாம் தூக்கிய படையே!
ஊண்தவிர் நோன்பொடும் உயிர்தீர் முயல்வொடும்

காண்குநர் கண்ணீர் கலுழக் காலமும்
நன்றுந் தீதும் நினையா ராகி
ஒன்றும் நெஞ்சொடு சென்றனர் உவந்தே!
தொல்லோர் மரபின் அரசரும் அல்லர்;
வல்லோர் வழியின் துறவோர் அல்லர்;
பொருளும் இன்பும் அறத்தொடு நடந்தே
இருள்தீர் வாழ்வும் விழையா ராகி
அற்றைத் தமிழ்த்தாய்க் கிற்றை மகரென
ஒற்றைத் தனிநீள் நினைவொடு சென்றூர்!
மூவா இளமை முதுமொழிக் கேய்ந்த
தாவாப் பெருந்துயர் தகர்ப்பா ராகி
நெய்யெரி புகுத்திய புகழோர் சிலரே!
மெய்யடி பட்ட மேலோர் சிலரே!
கடுஞ்சிறை தாங்கிய வல்லோர் சிலரே!
கொடுங்குறை யுறுப்பொடு நைந்தோர் சிலரே!
யாங்கன் உரைப்பலக் கொடுங்கோல் வினையே!
பூங்கண் மதிமுகப் புன்னகைச் செவ்வாய்
செந்தமிழ் வாழ்கெனச் செப்பிய உரைக்கே
ஈர்ந்தண் உலகமும் இருணீள் விசும்பும்
தாமுங் கொடுப்பினும் தகுநிறை வன்றே!
ஒன்றும் ஈயான் ஆகினும் ஒழிக;
கொன்றும் அடங்கிலாச் சாப்பசி கொண்டு
படையற நின்ற நடையி னேரை
விளையா நின்ற இளையோர் தம்மை
மலர்முகை சிதைத்துத் தழலிடற் போல
உலர்தீ நெஞ்சினன் உயிர்வாங் கினனே!

ஆடல் இளமகள் நல்லுயிர் அயின்ற
கேடுறு நன்னனும் இவன்வினை நாணும்!
மொழிக்கென வெழுந்தார் இவர்பிற ரிலரே!
பழிக்கென நின்றோன் இவன்பிற னிலனே!
மயர்தீர் கொள்கைச் சான்றோர் அழுங்க
உயர்செந் தமிழ்க்கே உறநின் றுரை
வெய்வேட் டெஃகம் விதிர்ப்பறத் தாங்கிக்
கொய்துயிர் துணித்தது கொலையோன் கோலே!
புன்றலைச் சிறுஅர் செந்நீர் ஆடியோன்
முந்நிற நெடுங்கொடி முன்றிலுஞ் சிதைக!
அன்னோன் தாங்கிய அரசுஞ் சிதைக!

முற்று இளவுயிர் தமிழ்க்கெனப் போக்கி
வற்று நெடும்புகழ் வழிவழிக் கொண்ட
இளையோர் காத்த எந்தமிழ்
கிளையுறப் பொலிக குலைவிலா தினியே!

*

புலிக்கு நாய் எந்த மூலை...?

பாவேந்தர் பாரதிதாசன்.

(அவர் நினைவாக)

தமிழர்க்குத் தமிழே–தாய்மொழி என்றோம்!
தமிழகம் தமிழர்க்குத் தாயகம் என்றோம்!
தமிழ்நாட்டில் அயலவர்க் கினிஎன்ன வேலை
தாவும் புலிக்கொரு நாய் எந்தமூலை?

தூங்கிய துண்டு தமிழர்கள் முன்பு–பகை
தூளாகும் அன்றோ எழுந்த பின்பு?
தீங்கு புரிகின்ற வடக்கரின், என்பு
சிதைந்திடச் செய்திடும் தமிழரின் வன்பு

சிங்கக் குகையில் நரிக்கிடம் தந்தோம்;
செந்தமிழ் நாட்டின் உரிமை இழந்தோம்;
பொங்கும் உணர்வால் எழுந்தமிழ் அரசு;
போர்தொடங் கிற்றுக் கொட்டடா முரசு!

பழந்தமிழ்க் குடிகள் வழிவந்த நாமே
பச்சைத் தமிழர்கள்; நமதிந்த நாடு!–நல்
உழுந்தள வேனும நமைப்பிறர் ஆள
உரிமையே இல்லை என்றுநீ பாடு!

(5–ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைத்திருக்கவில்லை. அவர்களை வீழ்த்தி, அவர்கள் அமர்ந்த பதவி நாற்காலிகளை நாம் எட்டிப் பிடித்துக் கொள்ளல்வேண்டும் என்ற கவடான எண்ணம் நம் நெஞ்சத்தின் எந்த மூலையிலு மில்லை. கருவி, கம்புகளற்ற நம் கைகளை அவர்கள் கட்டிப் போடுமளவிற்கு நாம் கொடுமை புரியவில்லை. தீது நினையா நம் நெஞ்சங்களைத்தொளைத்து ஊடுருவுமாறு, நம்மேல்கொடுமை யான குண்டுகளைப் பாய்ச்சுகின்ற அளவிற்கு நாம் எதனையும் தவறாகச் செய்துவிடவில்லை. நமக்குத்தராத பிறரின் உரிமைக்கு நாம் என்றும் அங்காததில்லை. நமக்குள்ள உரிமையை நாம் கேட்கின்றோம். சிறிதே அதட்டலுடன் தட்டிக் கேட்கின்றோம். நம் உணர்விலும் அறிவிலும் மலர்ந்து மணம் பரப்பும் உரிமையைத் தர இவர்கள் மறுத்துரைக்கின்ற பொழுது நாமும் இவர்களின் தலைமையை மறுத்துரைக்கின்றோம். இதில் தவ றென்றும் இருப்பதாக நமக்குப்படவில்லை. நமக்கென்று வாய்க் கப்பெற்ற நம் வாழ்வுரிமை தரப்பெறும் வரை நாம் கண்ணிமை களையும் மூடாது காத்திருப்போம்; கைகள் சாயாது முனைந்திருப் போம்; கால்கள் மாயாமல் நடந்துசெல்வோம்; வாய்கள் ஓயாது முழக்கமிடுவோம். உயிருக்கும் வாழ்வுக்கும் நடத்தப் பெறு கின்ற இந்தப் போராட்டங்களுக்காக அவ்வுயிரையும் வாழ்வை யுமே இழக்க நேரிடினும் சரியே! அணைக்கப்பெறும் சாவிற்காக உரிமையின் இன்ப முத்தத்தை இழப்பதா? மாணவ மணிகளே, தமிழன்பர்களே, அமைந்தெழுங்கள்! – பெருஞ்சித்திரன்.

அரசியல் பட்டறை...!

''சம்மட்டி''

1. ''பாராளுமன்ற உறுப்பினர்கள் புதிய வரவு செலவுத் திட்டப் பட்டியல் அறிக்கைகளைப் பெருஞ் சுமையாக எடுத்துச் செல்ல நேர்ந்தது. துணை யமைச்சர் ஒருவர் அவற்றைத் தலைச் சுமையாகக் கொண்டு சென்றார். அறிக்கைகள் ஆங்கிலத்திலும் இந்தியிலும் தரப்பட்டதன் விளைவே இது.'' – செய்தி.

○ தலைச் சுமையாக மட்டுமன்று, வரவு செலவுத் திட்டப் பட்டியலைச் சரக்குந்தில் (*Lorry*) போட்டுத் தூக்கிப் போவதானாலும் சரியே! அதற்கு எவ்வளவு உருபா செலவிடப் பெற்றாலும் சரியே! எப்படியாவது இந்தியை இந்தியாவின் ஆட்சிமொழியாக்கி, எல்லாருடைய வாய்களிலும் நடமாட விடவேண்டும் என்பதுதான் வடநாட்டான் ஒவ்வொருவனின் உள்ளம் நிறைந்த விருப்பம். இதற்கெத்தனை வகையான தடைகள் எவ்வுருவில் வந்தாலும் அவற்றை எப்படியாவது சமாளிக்கவேண்டும் என்பதுதான் அவர்களின் அரசியல் ஆட்சித்திறன். இந்தியாவையே இழக்க நேரினும் இந்தி ஆட்சிமொழியாகும் வாய்ப்பை இழந்துவிடக் கூடாது என்பதுதான் வடவர் எல்லாருடைய ஒருமுகக் கொள்கை. இதற்குத் துணைநின்று வயிற்றைக் கழுவிக் கொள்வதுதான் நம்மவரின் கொள்கை.

2. ''இன்னும் சிறிது காலத்துக்கு இந்தியுடன் ஆங்கிலமும் தேவை என்பது ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் இந்தி ஒருபொழுதும் ஆட்சி மொழியாதல் கூடாது என்பது எவ்வாறு சரியாகும்?... சிக்கலுக்குத் தீர்வுதான் இப்பொழுது தேவையே அன்றிக் கிளர்ச்சி அன்று!... இந்தி படிப்பது மாணவர்களுக்கு நல்லது. படிக்கும்படி யாரும் அவர்களைக் கட்டாயப் படுத்தவில்லை. இந்தி படிக்காவிடின் இங்குக் கிடைக்கும் வேலையோடு அவர்கள் நிறைவடைய வேண்டும். மொழிச் சிக்கலில் அவர்கள் அரசினர் கருத்தொடு மாறுபட்ட கருத்தைக் கொண்டிருந்தால், கல்லூரியை விட்டுவிட்டுக் கட்சித் தலைவராகப்போக வேண்டியதுதான். இந்தி அடியோடு கூடாதெனச் சொல்லுதல், இந்தி பேசும் மாநிலங்களின் மேல் ஆங்கிலத்தைத் திணிப்பது போலாகும்... இந்தியைத் தமிழகத்தில் 50 ஆயிரம் மாணவர்கள் படிப்பதிலிருந்தே இத் திட்டம் நன்கு செயல்படுவதைக் காணலாம்... நாட்டின் மிகப் பெரிய பதவிப் பொறுப்பாளரின் திட்டவட்டமான உறுதி மொழிகளை நம்புவதற்கில்லை என்பது அழகன்று; அது பெருமை தராது.'' –திரு. பக்தவத்சலம்.

○ திரு. பக்தவத்சலத்தை இதுவரை நன்கு புரிந்துகொள்ளாதவர்கள் அண்மையில் நடைபெற்ற இத்தகைய நிகழ்ச்சிகளின் பின்னாவது புரிந்து கொள்ளவில்லை என்றால், அவர்கள் அரசியலே தெரியாத

வர்கள் என்று திட்டவட்டமாகக் கூறிவிடலாம். மக்களுக்கு முழு உரிமைகள் வழங்கப்பட்டதாக எழுதி வைத்துக் கொண்டுள்ள இந்தியா போன்ற பெரிய குடியரசு நாட்டில், ஒரு பகுதி மக்களின் மொழியை இன்னொரு பகுதி மக்களின்மேல் புகுத்தும்பொழுது சிறிதே அளவு வெறுப்போ, விருப்பமின்மையோ இருந்தாலும் சரியே; அதனைச் செய்யாமலிருப்பதுதான் மாந்த உரிமைகள் வழங்கப்பெற்றுள்ளன என்பதற்கு அடிப்படை உண்மையாகும். அவ்வாறு நடக்காமல் ஒரு சாராரின் கருத்து மறுக்கப் பெற்றது எனின் மக்கள் உரிமைகள் வழங்கப்பட்டதற்கும், குடியரசு என்பதற்குமே பொருளில்லை. இதைவிட ஒரே கருத்தைக் கொண்ட முடியரசே நூறு மடங்கு மேலானதாகும். சிக்கலுக்குத் தீர்வுதான் தேவை என்கின்றார் பக்தவத்சலம். யார் இல்லை என்கிறார்கள்? அந்தத் தீர்வை யார் செய்து வைப்பது? நாமே செய்து கொள்வதெனின் அடிப்படை ஒப்பந்தங்களை யார் வகுப்பது? ஆட்சிக் கட்டிலில் ஏறிக்கொண்டு எப்படிப் பேசினாலும் மக்கள் கேட்டுத்தான் ஆகல்வேண்டும் என்று நினைப்பது, தமக்குத் தாமே குழிபறித்துக் கொள்வதாகும்... இந்தி படிக்காவிடில் கல்லூரியை விட்டுவிட்டுப் போய்விடல் வேண்டும் என்று வாய்க் கொழுப்போடு பேசித் திரியும் திரு. பக்தவத்சலம் எத்தனை நாட்களுக்கு அப்பதவியில் இருப்பதாக நினைக்கின்றாரோ தெரியவில்லை... இந்தி அடியோடு கூடாதென்பது எப்படி இந்தி பேசும் மாநிலங்கள் மேல் ஆங்கிலத்தைத் திணிப்பது போலாகும்? இந்தி எங்கட்குத்தான் வேண்டா என்றோமா, அவர்களை ஆங்கிலந்தான் படித்தல் வேண்டும் என்று சொன்னோமா? அவர்கள் ஆங்கிலத்தைப் படித்தால் என்ன? சீனத்தைப் படித்தால் எங்களுக்கென்ன? நாங்கள் கூறுவதெலாம் எங்கட்கு இந்தி வேண்டா என்பதும், ஆட்சிக்குத் தமிழும், பிற தொடர்புக்கு இதுவரை இருந்து வந்த ஆங்கிலமே போதுமென்பதும்தாம்... இந்தியை 50 ஆயிர மாணவர்கள் படிக்கின்றனர் என்பதற்காக அதைக் கொண்டுவந்தால், 100 ஆயிரம் மாணவர்கள் வெறுக்கின்றனர் என்பதற்காக அதனைத் தடுத்தல்லவோ நிறுத்தல்வேண்டும். பெரிய பொறுப்பான பதவியில் உள்ளவர்களின் திட்டவட்டமான உறுதிகளை நம்புதல் வேண்டும் என்பது அழகும் பெருமையும் ஆனால், சட்டங்கள் தாம் எதற்கு? அவற்றை எடுத்துவிடலாமே! வெடி குண்டுகளையும், பட்டாளத்தையும் தவிர்த்துவிட்டு உங்கள் உறுதிமொழிகளை மட்டுமே கூறுங்கள்; எவனாவது நம்புகின்றானா என்று பார்ப்போம். பக்தவத்சலத்திற்குப் புரியும் அழகும் பெருமையும் எங்கட்குப் புரியவில்லையா? எத்தனை அரசியல் சூழ்ச்சி கலந்த மொழிகள் இவை என்பதை அன்பர்கள் கூர்ந்து பார்ப்பாராக.

3. “குறைகளைத் தெரிவித்துக் கொள்வதற்காக வன்முறையை மேற்கொள்வதும், பொதுச் சொத்துகளை அழிவு செய்வதும் குடியாட்சி முறையையே வேரறுப்பதாகும். கருத்து வேறுபாடுகளை நேரிற் பேசியும் கருத்துப் பரிமாற்றத்தாலும் தீர்த்தல்தான் குடியாட்சி முறையாகும்”

–முதலமைச்சர் மாநாட்டில் பேச்சு.

○ குடியாட்சிக்கே இப்பொழுதுதான் இவர்கள்தாம் இலக்கணம் வகுக்கின்றனர் போலும்! இங்கு வாழ்பவர்கள் குடியாட்சி முறையையே அறியா மூடர்கள் போலும்! ஒன்றுமறியா மாணவர்கள்

மேல் வலிந்து கட்டாயமாகப் புகுத்துவதும், அவர்கள் குறிப்பாக அமைதியான முறையில் பல்லாயிர முறை எடுத்துச் சொல்லியும் அரசினர் செவிகொடாமற் போனதும் தாம் குடியாட்சி முறையோ? பட்டாளத்தைக் கொண்டு அவர்களைச் சுட்டுவீழ்த்துவதுதான் காந்தியக் குடியாட்சி முறையோ? கருத்துகளைத் துணிந்து வெளியிடுபவர்கள் எல்லாரையும் காவலர்களைவிட்டு மருட்டுவதும், அடிப்பதும் சிறையிடுவதுந்தாம் இவர்கள் கற்ற குடியாட்சி முறையோ? செய்திகளை வெளியிட்ட செய்தித்தாள்கள்மேல் கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதும், குண்டர் சட்டம் கொண்டு வருவதும்தாம் ஒழுங்கான குடியாட்சி போலும். குடியாட்சி போலவா நடக்கின்றது? குடியராட்சி போலவன்றோ நடக்கின்றது? கருத்துப் பரிமாற்றமாம்...! எத்தனை எத்தனை அறிக்கைகள்! கூட்டங்கள்! மாநாடுகள்! தீர்மானங்கள்! கையொப்பங்கள்! இவற்றிற்கெல்லாம் என்ன பொருள்?

•

4. ''தமிழ்நாடு பண்பாடும் நாகரிகமும் வாய்ந்தது என்று கூறிவந்துள்ளோம். ஆனால் நாம் இன்னும் காட்டுமிராண்டித் தனமான நிலையில்தான் இருந்து வருகின்றோம். வன்முறைச் செயல்களால் நம் நற்பெயர் கெட்டுவிட்டது. கருத்துகளைத் தெரிவிக்க எத்தனையோ வழிகள் இருக்க வன்முறையைப் பின்பற்றுவது, குடியாட்சியையும், ஒழுங்கான குமுகாயத்தையும் இல்லாமற் செய்துவிடும்'' –திரு. சி. சுப்பிரமணியம்.

○ பண்பாடு நாகரிகம் என்பவெல்லாம் அமைச்சர்களிடந்தாம் உள்ளனவாகத் திரு. சுப்பிரமணியம் கருதிக்கொண்டு பேசுகின்றாரோ? உரிமை பறிபோகையில் பண்பாடு நாகரிகம் மட்டுமல்ல நாடும் வீடும் கூடப் பெரியன அல்ல. இவர்கள் வெள்ளையனிடமிருந்து இந்தியாவை மீட்கையில் பண்பாட்டோடும் நாகரிகத்தோடும்தான் நடந்து கொண்டனரோ? உரிமைக்கு எங்கு விடுதலையளிக்கப் பெறுகின்றதோ அங்கு விளைவதுதான் பண்பாடு, நாகரிகம், ஒழுங்கு, சட்டம், அமைதி எல்லாம். எது காட்டு மிராண்டித்தனம்? ஒரு சாரார் விரும்பாத் ஒரு மொழியை வலிந்து திணிப்பது காட்டுமிராண்டித்தனமா? அதனை எதிர்ப்பது காட்டு மிராண்டித்தனமா? கயவனுக்கு வலுக்கட்டாயமாக மணம் செய்விக்கப்பெறும் ஒருத்தி தன் உரிமையைக் காத்துக் கொள்ளப் போராடுவதுபோல், இந்தி வல்லாட்சியினின்று தம்மை விடுவித்துக் கொள்ளப் போராடுவது எப்படிக் காட்டுமிராண்டித் தனமாகும்?என்ன கூறியும், எப்படிக்கூறியும், எவர் கூறியும் கேளாது அதிகாரமும், பட்டாளமும் தம் கைகளில் உள்ளனவென்று கண் மண் தெரியாமல் காட்டாட்சி நடத்துவது மட்டும மாந்தத்தனம்! அதை எதிர்த்து உரிமையையும் மானத்தையும் காத்துக்கொள்ளப் போராடுவது காட்டுமிராண்டித்தனமோ? அந்தக் காட்டுமிராண்டிகள் போட்ட ஒப்போலைகளைப் பெற்றுத்தானே ஆளுங்கட்சியினர் அதிகாரத்தில் உள்ளனர். ஆடுகளை அடிப்பதுபோலும், குருவிகளைச் சுடுவது போலும் காவலர்களை ஏவி மாணவர்களை அழிப்பதுமட்டும் காந்தியார் கற்றுக்கொடுத்த நாகரிகமோ?

5. இந்தி எதிர்ப்பு நடவடிக்கைகளைச் சமாளிக்க நாடெங்கும் வாய்ப்பூட்டுச் சட்டம் கொணர்தல் வேண்டும். இந்தி எதிர்ப்புப் பற்றி யாரையும் பேசவிடல் கூடாது. எல்லாச் செய்தித் தாள்களையும் தடை செய்தல் வேண்டும்.

—ஈ. வே. இரா.

○ கருத்துக்கு மதிப்பளிக்க வேண்டும் என்னும் பகுத்தறிவாளரின் (*Rationalist*) கூற்றுஇது. இந்திக்குப் பாடை தூக்கியாக இருந்த இவரே, இந்திக்குப் பல்லக்குத் தூக்கியாக இப்பொழுது இருக்கின்றரே என்பதால் நமக்கு வருத்தமோ, இழப்போ துளியும் இல்லை. ஆனல் கருத்துக்கும் பகுத்தறிவுக்கு மதிப்பளிக்க வேண்டிய இவரா, கருத்துகளுக்கும், செய்தித் தாட்களுக்கும் தடை போடச் சொல்கின்றர் என்பதே நம் வியப்பிற்குரியது! இவரின் நிலை இரங்கத்தக்கது. கொள்கை நிலையில் இவர்க்கு அரசியலில் தான் வீழ்ச்சி என்றிருந்தோம், இப்போழுது அறிவிலும் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கின்றது இப்பெரியவர்க்கு. இனி இவர் செல்லாக் காசு, அணிந்த தீப்பந்தம்; சப்பிய பனங்கொட்டை; துப்பிய வெற்றிலைத் தம்பலம்; பிழிந்த கருப்பஞ் சக்கை; வெடித்த வாணவெடி. இனி இவரால் தமிழர்க்கும் கேடில்லை; பிறர்க்கும் பயனில்லை: இவர் கருத்துப் பற்றி எவரும் கவல வேண்டுவதில்லை.

6. தமிழகத்தில் எழுந்துள்ள இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி பேராயக் கட்சியின் வலிவைக் குறைக்கும் நோக்கத்துடன் பிரிவினை முயற்சியில் ஈடுபட்டவர்களால் நடத்தப் பெறும் அரசியல் கிளர்ச்சி என்றே வடநாட்டார் கருதுகின்றனர்.

—காமராசர்.

வடநாட்டார் கருதுவது இருக்கட்டும் தாங்கள் என்ன கருதுகின்றீர்கள்? வடநாட்டார் கருதுவதுதான் கருத்து; அவர்கள் ஆள்வதுதான் ஆட்சி; அவர்கள் மொழிந்ததுதான் சட்டம் என்றெல்லாம் நினைப்பதுதான் உங்கள் கொள்கையா? அல்லது அதுதான் பேராயக்கட்சியின் கொள்கைகளா? பேராயக்கட்சியின் வலிவைக் குறைப்பதால் வடநாட்டார் மட்டுமே கவலையுருவதாலுல், அப் பேராயக்கட்சி அவர்களின் நலத்திற்காகவே இயங்குவதாக உங்கட்குப் படவில்லையா? மொழிக்கிளர்ச்சி அரசியல் கிளர்ச்சி ஆகாதா? இவ்வாறு பேசிப் பேசியே மக்களை இன்னும் குழப்பத்திற்குள்ளாக்கிக் கொண்டிருந்தால், பேராயக்கட்சி யாரும் எதிர்க்கப்படாமலேயே விரைவில் அழிந்து போவது உண்மை!

நன்றி.

கோவைத் தொழில் முனைவரும் அறிவியல் அறிஞருமாகிய உயர்திரு. கோ துரைசாமி அவர்கள் தென்மொழியின் வளர்ச்சிக்கு உருபா நூறு நன்கொடையாக அளித்துள்ளார். அன்னார்க்கு எம் உளமார்ந்த நன்றியும் வாழ்த்தும் உரியவாகுக.

—ஆசிரியர்.

பேரா. தெ. பொ. மீ. தமிழுக்கதிகாரியா?

மொழிப் பெரும் புலவர்
ஞா. தேவநேயப் பாவாணர் எம்.ஏ

8. ''சங்கம் என்பதை அப்படியே தள்ளிவிட முடியுமா?''
ஏன் தள்ளிவிட முடியாது? கழகம், மன்றம் முதலிய சொற்கள் இருக்கின்றனவே!

''கண்ணுதற்பெருங் கடவுளுங் கழகமோடமர்ந்து'' என்று பரஞ்சோதிமுனிவர் பாடியிருக்கின்றாரே! பிராமணர் வருகைக்கு முற்பட்ட முதலிரு கழகங்களிலும் சங்கம் என்னும் வடசொல் வழங்கியிருக்க முடியாதே!

மேலும், சங்க (Sangha) என்னும் வட சொல்லின் வேராகிய சம் (Sam) என்பது, கும் என்னும் தென் சொல்லின் திரிபே. கும்முதல் கூடுதல். கும் என்னும் முதனிலை ஆரிய மொழிகளில் ஒரு முன்னொட்டாகி, இலத்தீனில் Cum என்று இயல்பாயும்; ஆங்கிலத்தில், Com, Con, Co என்றும்; கிரேக்கத்தில் Sym, Syn என்றும்; வேத ஆரியத்திலும் சமற்கிருதத்திலும் சம் (Sam) என்றும் திரிந்தும் நிற்கும்.

கும் என்பதன் மூலம் உம் என்பதாம். உம்முதல் கூடுதல். இவ்வினை இன்று வழக்கற்றது. இது உகரத்தோடு கூடிவரும் க ச த ந ப ம என்னும் அறு மெய்களோடும் சேர்ந்து, கும், சும், தும், நும், பும், மும் என்னும் அறு வேறு வழியடிகளைப் பிறப்பிக்கும். இவற்றுட் சில அகர முதலாகவும் திரிந்துள்ளன. உகர முதற் சொற்கள் மோனைத்திரிபு கொண்டு வேறுசில சொற்களைத் தோற்றுவிக்கும். எடுத்துக்காட்டில்லாதன இறந்துபட்டனவென அறிக.

எ. டு: உம் உம்முதல் = கூடுதல், இப்பொருளிலேயே இச்சொல் எண்ணுப்பொருள் இடைச்சொல்லாகிய கூட்டிணைப்புச் சொல்லாய்வரும்.

எ. டு: அறமும் பொருளும் இன்பமும்
வந்தும் போயும்
உம்—அம். அம்முதல் = கூடுதல், நெருங்குதல்,
பொருந்துதல், கலத்தல், ஒத்தல்.

இதன்விரிவைச் செந்தமிழ்ச்செல்வி 39-ஆம் சிலம்பு, 4-ஆம் 5-ஆம் பரல்களிற் காண்க.

அம்–அந்து–அந்தி=இரவும் பகலும் கூடும் காலை, பகலும் இரவும் கூடும் மாலை.

''காலை யந்தியும் மாலை யந்தியும் (புறம். 34).

2. ஒரு தெருவோடு இன்னொரு தெருக்கூடுமிடம்

''அந்தியும் சதுக்கமும்'' (சிலப். 14, 213).

அந்தித்தல்=நெருங்குதல், கூடுதல், முடியிட்டுவைத்தல்.

அந்து–அத்து, அத்துதல்=சேர்த்துத்தைத்தல்.

கும் கும்முதல்=கூடுதல். கும்–கும்மல்–L. cumulus.

கும்–கம்–கமம். கம்முதல்=கூடுதல், நிறைதல்.

''கமம்நிறைந் தியலும்'' (தொல், உரி, 57).

கும்–குந்து–கொந்து. குந்து–குத்து–கொத்து.

கம்–கந்து=திரட்சி, திரண்ட தூண், சார்பு, பற்றுக்கோடு.

சும் சும்–சும்மை=தொகுதி.

சும்–சொம்=செல்வம். சொம்–Svam(S).

சொம்–சொந்து–சொந்தம்=உடன்கூடியது.

சொந்து–சொத்து.

சும்–சம்–சந்து=கூட்டு, பொருந்து.

சந்துசெய்தல்=இருபகைவரை ஒப்புரவாக்கிக் கூட்டிவைத்தல்.

சந்து–சந்தை=விற்பாரும் கொள்வாரும் கூடுமிடம்.

தும் தும்–துந்து–தொந்து–தொந்தம்=கூட்டு, தொடர்பு, புணர்ச்சி.

தொந்தம்–dvandva (S).

தொந்து–தொத்து=கொத்து, திரள், தொடர்பு.

நும் நும்–நம்–நந்து. நந்துதல்=வளர்தல், தழைத்தல், பெருத்தல்.

பும் பும்–(புந்து)–பொந்து–பொந்தன்=பருத்தவன்.

பொந்தன்–போந்தான்=பருத்த கோழி.

போந்து–போந்தி=யானைக்கால்.

பொந்து–பொத்து, பொத்துதல்=சேர்த்தல், சேர்த்துத் தைத்தல்.

பொத்து-பொத்தை = பருமையானது, பருமிளகாய்.

பொத்து-பொட்டு = பொருத்து. பொட்டு + அணம் = பொட்டணம் (சேர்த்துக்கட்டியது)

மும் மும்-முந்து-மொந்து-மொந்தன் = பருத்தவன், பருத்தது, பருத்த வாழைக்காய்.

மொந்து-மொந்தை = சோற்றுத்திரளை.

மொந்து-மொத்து-மொத்தம் = திரட்சி.

மொந்தை-மொத்தை = திரளை, பருமன்.

மொத்தை-மோத்தை = பருத்த ஆட்டுக்கடா.

9. "போதியார், இளம்போதியார் என்பனவற்றுள் போதி என்பது புத்தமதச் சொல்லல்லவா?"

ஆம்; புத்தமதத்தைச்சேர்ந்த வடசொல்தான். ஆயின், அது புத்தமதம் தென்னாட்டில் வந்து பரவியதைக் குறிக்கின்றதேயன்றி, தமிழுக்கு இன்றியமையாத சொல்லென்று எங்ஙனம் ஆகும்? அதற்குப் பகரமாக அறிவைக்குறித்தற்கு ஓதி என்னும் சொல்லும், மரத்தைக் குறித்தற்கு அரசு என்னும் சொல்லும் இருக்கின்றனவே!

10. "உலோச்சனார் – சைனமதத்தில் லோச்சு என்ற மயிர்கழிக்கும் நோன்பில் எழுந்த பெயரல்லவா? நமது நாட்டுப் பொருளை நீக்கமுடியாததுபோல இவற்றையும் தள்ளிவைக்க முடியாது."

லோச்சு என்பது லுஞ்ச் (lunc) அல்லது லுச் (luc) என்னும் வடசொற்றிரிவாகும். அதற்குப் பறித்தல் என்பது தான் பொருள். லுஞ்சித கேச (Luncitakesa) என்று சொன்னால்தான், தன்தலையினின்றும் (உடம்பினின்றும்) மயிரை ஒவ்வொன்றாய்ப் பறித்துள்ள சமணத்துறவியைக் குறிக்கும்.

உலோச்சனார் என்னும் சொல்லை, அக்காலத்திலேயே தமிழர் அல்லது தமிழ்ப்புலவர் பறிதலையர் என்று அழகாக மொழிபெயர்த்திருக்கின்றனரே!

"பறிதலையராற் சாலப் பழுதா மன்றே" (திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், 37,7).

11. "தமிழிற் புகுந்த வடசொற்களை எண்ணி முடியாது; இரண்டாயிரத்துக்குமேல் இருக்கும். தொடர்களை இங்கே கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை".

தமிழிற் புகுந்த வடசொற்கள் என்று சொல்வதைவிட, தமிழ்நூல்களிற் புகுத்தப்பட்ட வடசொற்கள் என்று சொல்வதே மிகப்பொருத்தமாகும். அவை ஈராயிரமாயிருந்தாலென்ன? இருபதினுயிரமாயிருந்தாலென்ன? அவை தமிழுக்குத் தேவையல்லவே! அவற்ருல் தமிழ்ச் சொற்கள் பொருளிழந்தும் வழக்கற்றும் இறந்து பட்டும் போனதன்றி வேறு என்ன கண்டோம்?

மேலும், வடசொற்கள் என்று பேராசிரியர் குறிக்கும் சொற்ருெகுதியுள், ஏறத்தாழ $\frac{1}{5}$ பகுதி தமிழ்ச்சொல்லும், $\frac{1}{5}$ பகுதி தமிழ்த்திரி சொல்லும், $\frac{1}{5}$ பகுதி தமிழ் வேர் கொண்ட சொல்லும், ஆகும் என்பதை அவர் அறியார் போலும்!

12. வடமொழி இந்த நாட்டிற்கு வருவதற்கு முன்னரும் 'முண்டா' இனத்து மொழிகள் இந்தியாவில் வழங்கியிருத்தல் வேண்டும் அம் மொழிகளைப் பேசுவாரோடு தொடர்புகொள்ள வந்தபொழுதெல்லாம் ஒரு சில சொற்களேனும் அவர்களிடமிருந்து தமிழில் நுழையாதிருக்க முடியுமா? வழுதுணங்காய், தவளைக்காய், மீசை முதலியன அத்தகையன என்று கருதுகிருர்கள். இளநீர் என்று சொல்லுகிருேமே, அந்தப் பெயரை எண்ணிப் பார்த்தோமா? இளந் தேங்காய் என்பதுதானே அதன் பொருள்? அப்படியாளுல் 'நீர்' என்பது தேங்காயையல்லவா குறிக்கவேண்டும். அப்படி, தேங்காய் என்ற பொருளிலேயே 'நீர்' என்ற சொல் 'முண்டா' மொழியில் வழங்குகிறது.''

இந்தியாவில் இன்று வழங்கும் மொழிகள், தமிழம் (திரவிடம்), முண்டா, மான்குமேர், திபேத்த சீனம், ஆரியம், சேமியம் என்னும் அறு குடும்பங்களாகவும், வகைப்படுத்தப் பெருத சிலவுமாக வகுக்கப் பெற்றிருக்கின்றன. நக்கவார மொழி மலையப்பாலினீசியக் குடும்பத்தைச் சேர்ந்ததாகும்.

இவற்றுள் முண்டா மொழிகள் வேதக் காலத்திலேயே, அதாவது கி. மு. 1500 ஆண்டுகட்கு முன்பே, வழங்கியிருக்கின்றன. இவை சோட்டா நாகப்பூர் என்னும் சின்ன நாகபுரியிலும், அதையடுத்துள்ள வங்க, ஒட்டர, சென்னை, நடுவண் (மத்திய) நாடுகளைச் சேர்ந்த மாவட்டங்களிலும், விதர்ப்ப (Berar) நாட்டிற்கு வடக்கிலுள்ள மகதேவ மலைத் தொடரிலும் பேசப்படுகின்றன. இவற்றிற்கும், நக்கவாரத்திலும் சில கிழக்கிந்தியத் திட்டுகளிலும் பேசப்படும் மான்குமேர்க் குடும்ப மொழிகட்கும் ஒரு பொதுக் கூறுண்டென்று, கிரையர்சன் கூறுகின்ருர் இவ்விரு குடும்பங்களும் முதலில் ஒன்ருயிருந்திருக்கலாம் என்பது அவரது உய்த்துணர்வு.

முண்டா மொழிகளைப் பேசும் மாந்தர் பெரும்பாலும் இந்தியாவின் கீழ்ப் பாகத்தையடுத்திருப்பதாலும், மான்குமேர் என்

னும் கிழக்கத்து மொழிகளை அவர்களுடையவை ஒரு புடை ஒத்திருப்பதாலும், இடைக்கழக விருக்கையை முழுக்கிய 2-ஆம் கடல்கோளுக்குப்பின் அவர்கள் வந்து இந்தியாவிற் குடியேறி யிருக்கலாமென்றெண்ண இடமுண்டு.

''தீங்கனி நாவல் ஓங்குமித் தீவிடை
... ...
பூமி நடுக்குறூஉம் போழ்தத் திந்நகர்
நாகநன் னாட்டு நானூறு யோசனை
வியன்பா தலத்து வீழ்ந்துகே டெய்தும்''

என்னும் மணிமேகலைப் பகுதி (9:16-21) அக் கடல்கோளைக் குறித்ததாகலாம்.

முண்டாமொழிகள் எழுத்தும் இலக்கியமுமற்றுப் பண்பாட்டில் தமிழினும் மிகத் தாழ்ந்திருப்பதனாலும், தலைக்கழகக் காலத்திலேயே தமிழ் முழு வளர்ச்சியடைந்து விட்டதனாலும், தமிழ் முண்டா மொழியினின்று சில சொற்களைக் கடன் வாங்கும் நிலையிலிருந்த தென்பது, வேண்டுமென்று தமிழைத் தாழ்த்திக் கூறுவதாகவே தோன்றுகின்றது. வணிகத்திற்கு முதலோ, ஒரு பொருள் வாங்கப் பணமோ இல்லாதவர், செல்வர் ஒருவரிடம் சென்று கடன் கொள்ளலாம். ஆயின், நப்பீல்டும் இராக்குப்பெல்லரும் பிருளாவும் போன்றூர், எங்ஙனம் ஒருவரிடம் கடன் கொள்ள நேரும்!

தவ்விச் செல்வது தவளை. தவ்வுதல் தாவுதல். இனி, தவழ்ந்து செல்லும் நீருயிரி தவளை எனினுமாம்.

தவழ்தல்=தத்திச் செல்லுதல், தத்துதல்.

''ஓதங் கரைதவழ்நீர் வேலியுலகினுள்'' (பு. வெ. 8, 9.). சிறுவர் நீர்மேல் தவளைபோல் தத்தித் தத்திச் செல்லுமாறு எறியும் தட்டையான காய், தவளைக்காய் எனப்படும். காயில்லாதவிடத்து ஓட்டாஞ்சல்லியை எறிவர். தோளில் அடித்தவிடத்துத் திரளும் சதையையும் தவளைக்காய் என்பர். பழுக்காத புண் கட்டியைக் காய் என்பதுண்டு.

இனி, நுணல் என்னும் மணற்றவளையை மணற்காடை, மணற் காளான், மணற் கூகை என்னும் வழக்குண்மையால், அதை உண்ணும் வகுப்பார் அதைத் தவளைக்காய் என்றும் அழைத்திருக்கலாம். தவளைக்காய் என்பது தவக்களை, தவக்கை என்றும் திரியும்.

கி. பி. 2-ஆம் நூற்றாண்டினதான குறுந்தொகைச் செய்யுளிலும், 9-ஆம் நூற்றாண்டினதாகக் கருதப்பெறும் பெருங்கதையிலும், 10-ஆம் நூற்றாண்டினதான சீவக சிந்தாமணியிலும், 12-ஆம் நூற்றாண்டிலிருந்த பேராசிரியர் உரையிலும், 13-ஆம் நூற்றாண்டினதான நன்னூலிலும், தவளை குறிக்கப்பட்டுள்ளது.

''தவளை வாய பொலஞ்செய் கிண்கிணி'' (குறுந். 148).

''தவளைத் தண்டுறை கலங்கப் போதி''
(பெருங். மகத. 3,21).

''தவளைக் கிண்கிணி ததும்பு சீறடியர்''
(ஷை. உஞ்சைக். 46, 246).

''தத்துநீர்த் தவளைக்குரற் கிண்கிணி'' (சீவக. 2481)

''தத்துவனவற்றுக்குங் குட்டிப் பெயர் கொடுக்கப்படும்; தவளைக் குட்டி எனவரும்'' (தொல். பொருள். 561-பேரா. உரை).

''ஆற்றொழுக் கரிமா நோக்கந் தவளைப்
பாய்த்துப் பருந்தின்வீழ் வன்னசூத்திர நிலை'' (நன். 19)

தவளை நீருள்ளவிடமெல்லாம் காணக்கூடிய உயிரியாதலாலும், அதன் பொதுவான இனத்திற்கு வேறு பெயரின்மையாலும், தவளை என்னுஞ் சொல் தமிழ்நாடு முழுதும் வழங்கும் உலக வழக்குச் சொல்லாதலாலும், அது தொன்று தொட்டு வழங்கிவரும் தென் சொல்லேயெனத் தெளிக.

தவளையினத்திற் பலவகையுண்டு: வெளிறித் தேய்ந்து போயிருப்பது தேரை; சொறியுள்ளதாயிருப்பது சொறியன்; பருத்துப் பச்சையாயிருப்பது மொங்கான்;மணலுக்குள்ளிருப்பது நுணல். வாலறுத தவளைக்குட்டி அரைத் தவளையென்றும், தலைப்பிரட்டையென்றும் சொல்லப்படும். தேரை பாய்வதால் குழந்தை நோய்ந்து போமென்றும், இளநீர் சொத்தையாகிவிடுமென்றும், பொதுமக்கள் கருதுவர்.

''தேரைக்கால் பெற்றுத் தேய்ந்துகா லோய்ந்ததே'' (ஔவையார்).

''தேரையர் தெங்கிளநீ ருண்ணுர் பழிசுமப்பர்'' (தமிழ்நா. 74). எதுகைபற்றிச் சிறப்புச் சொற்களைப் பொதுப் பொருளில் ஆள்வது பிற்காலப் புலவரியல்பு.

எ. டு: ''நாரை துயில்வதியும் ஊர குளந்தொட்டுத்
தேரைவழிச் சென்றாரில்.'' (பழமொழி, 23.)

வழுதுணங்காய் என்பது கத்தரிக்காய். அதன் மறுவடிவம் வழுதலை என்பது. காய்களுள்மிக வழுக்கையாயிருப்பது கத்தரிக்காயாதலால், அது வழுதலையெனப் பெற்றது.

வழுதலை, வழுதுணை என்னும் இரண்டும் கத்தரிக்காயையும், அதற்கினமான கண்டங் கத்தரியையும் குறிக்கும்.

வழுதலை = 1. கத்தரி (பிங்கலம்).

2. கண்டங்கத்தரி (மூலிகை அகராதி)

வழுதுணை = 1. கத்தரிக்காய்.

''வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்''
(ஔவையார் பாடல்)

''வழுதுணங்காய் முதலிய காய்களையும்''
(மதுரைக் காஞ்சி, 529, நச். உரை).

2. கண்டங்கத்தரி.

''வட்டும் வழுதுணையும் போல்வாரும் வாழ்வாரே''
(நாலடி. 264).

மிகுதி-மீதி. மிகு-மீ-மீது = மேல். மீது-மீசு = மேல்.

''துவராடை மீசு பிறக்கிய மெய்யினரும்''
(தேவா. 38, 11).

மீசு வைத்தல் = மேலே வைத்தல் (யாழ். அக).

மீசு-மீசை = 1. மேலிடம்.

''மீசை நீள் விசும்பில்'' (சீவக. 911).

2. மேலுதட்டில் முளைக்கும் மயிர்.

''துடித்த தொடர் மீசைகள்'' (கம்பரா. மாரீச. 49).

மீசை-மிசை = மேல். மீசை-வீசை (உலகவழக்கு).

மீசை தமிழ்ச் சொல்லன்றென்பது மீசையில்லார் கூற்றே.

•

இளநீர் என்பது தேங்காயன்று; குரும்பைக்கும் தேங்காய்க்கும் இடைப்பட்ட வழுக்கையும் தோன்றாத நிலையிலுள்ள இளமையான நீரே. பின்பு, அது வழுக்கை தோன்றிய நிலையிலுள்ள நீரையும் குறித்தது. அதுவும் இளமையான நீரே. மருந்திற்குச் சிறந்தது வழுக்கை தோன்றாத இளநீர்தான். ஆயின், குளிர்ச்சிக்காகவும் நீர் வேட்கை தணிப்பதற்காகவும் மட்டும் குடிக்கும் உடல்நல நிலையர், வழுக்கையும் தின்ன விரும்புவதால், வழுக்கையிள நீர் வெட்டத் தரப்படும். இன்றும் இளநீர்க் கடைகளில் வழுக்கையில்லாத இளநீர்க் காய்களைக் காணலாம். முற்றின காயிலுள்ள நீரை இளநீரென்று எவரும் கூறார். அதைத் தேங்காய்த் தண்ணீர் என்றே சொல்வது மரபு.

•

இளநீர் என்னும் தொடரின் இரு சொற்களும் பொருள் நிரம்பியவை. இளமையும் நீரும் உள்ளதே இளநீர் நீர் ஒரு கொள்கலத்திலன்றித் தனித்திருக்க முடியாது. ஆகவே, இளநீர் என்பது தெங்க மட்டையோடு கூடித்தானிருக்கும். இளநீர் என்பது நீரைமட்டும் குறிப்பின் இயற்பெயர்; அதையுடைய மட்டையையுங் குறிப்பின் (அடையடுத்த) ஆகு பெயர். இளநீர்க் கடைக்குச் சென்று தேங்காய் இருக்கிறதா என்றாலும், தேங்காய்க் கடைக்குச் சென்று இளநீரிருக்கிறதா என்றாலும், இல்லையென்றுதான் சொல்வர்.

தமிழுக்கென்று சிறப்பாக நிறுவப் பெற்ற அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மொழி நூல் துறைப் பேராசிரியராகவுள்ளவரும், மாநிலக் கல்லூரியில் அவருக்குரிய தலைமைத் தமிழ்ப் பேராசிரியப் பதவி தக்கார் வேறொருவருமின்மையால் வெறுமையாயிருக்கிறதென்று, மேனாட் கல்வியமைச்சர் திரு சுப்பிரமணியத்தால் புகழப் பெற்றவருமான, பேரா. தெ. பொ. மீ. முண்டா நிலத்திற் பிறந்து வளர்ந்தவர்போல் கூறிக் கொண்டிருப்பது பெருவியப்பாகவே யிருக்கின்றது.

தமிழ் நாட்டில் தெங்கு தொன்று தொட்டு வளர்ந்து வருகின்றது. முழுகிப்போன குமரிக் கண்டத்திலும் ஏழ் தெங்க நாடுகள் இருந்தன.

சின்ரிகுசா (Jinrickshaw = ஆள்வலி வண்டி) என்பது ரிகுசா என்றும், பைசைக்கிள் (Bicycle) என்பது சைக்கிள் என்றும், குறுகி வழங்குதல்போல், இளநீர் என்பது முண்டாவில் நீர் என்று குறுகி வழங்கித் தேங்காயையும் குறித்திருக்கலாம். அல்லது, அது வேறொரு சொல்லாகவுமிருக்கலாம்.

[தொடரும்].

நீங்கள் சுவைத்தீர்களா?

துரை. மாணிக்கம் எழுதிய

இனிய, எளிய தமிழ்க் காப்பியம்!

கொய்யாக்கனி

(விலை: 2-25.)

தென்மொழி உறுப்பினர்கட்கு மட்டும் விலை 1-50.

அஞ்சல் செலவு தனி.

தமிழ்க் கனல்!

மகிபை-பாவிசைக்கோ.

ஓங்கு புகழே! ஒளிநிலவே! செங்கதிரே!
தேங்கு சுவையே! தெவிட்டாக் கனிச்சாறே!
கன்னலே! தேனே! கவின்மலரே! தண்புனலே!
தென்னன் மலைத்தென்றல்! தேய்வையே! நன்மருந்தே!
மும்மலைமூ வாறுகொடி முப்பால் மறை,கழக
மும்மலர்த்தார் வேந்தர் மடிவளர்ந்த மேன்மகளே!
பன்னலஞ்சேர் செல்வீ! புனையாக் கலையெழிலே!
அன்னைத் தமிழே! அறமேஉன் மீதாணை!
செந்நீரைப் பாய்ச்சிச் செழிப்பாய் மறம்விளைத்த
முன்னோர் கதைகேட்பாய், முத்தமிழே; "என்முலைப்பால்
உண்பாய்; 'தமிழ்ப்பால்' உயர்வான செங்குருதி
அன்பால் வெளுத்ததடா ஆருயிரே! பாண்டிமன்னர்
ஆண்டதமிழ்ச் சீமையினை ஆளப் பிறந்தவன்நீ!
பாண்டியனார் பைந்தமிழ்ற் பாடவந்த பாவலன்நீ!
'ஆவிக்குள் நின்றிலங்கும் ஓவியமே' நம்மையெலாம்
வாழ்விக்கும் மூச்சும் வளர்பொதிகைத் தென்றலன்றோ?"
என்றணைத்துப் பாடி எழில்தமிழ்ப்பால் ஊட்டிவந்த
அன்னைமேல் ஆணை! அரும்புலவர் மேலாணை!
கட்டுறையை விட்டுத்தம் கைவாள் உருவிவிட்டால்
வெட்டித் தலைகுவிக்கும் வெந்திறலார், என்முன்னோர்
மல்லர்க்கு மல்லரெனும் மாமல்லர்; மூவேந்தர்
வில்லால் விறல்விளைத்த வல்வில்லர் மேலாணை!
என்னைக் கருவிருத்தி என்தாய் மயற்கையினால்
தின்ன இனித்ததமிழ்ச் செம்மண்ணின் மீதாணை!
தன்மானச் சின்னச் சாமி; சிவலிங்கம்,
அன்பரங்க நாதன்; அறிவுக் கலையாசான்
வீரப்பர்; முத்து வேளாளர் தம்முடலை
ஆரத் தழுவி எரித்ததழல் மீதாணை!
வாவா பகையே! விழிநெருப்பால் சூளுரைத்தேன்!
சாவோ துரும்பு; தமிழ்மானம் நீள்விசும்பு!
நெஞ்சைக் கிழித்துயிரை நீக்கிடினும் என்நாவில்
செஞ்சொற் றமிழ் முழங்கும்! சிமிழ்க்கா விழிகனலும்!
என்னுரிமை ஒன்றே! என்தாய் மொழியுரிமை,
இன்னுயிர்க்கு மேலாய் இனிக்கும் தனியுரிமை!
தாய்த்தமிழ்க்குத் தீங்கிழைத்த சழக்குக் கழுதைகளை
சாய்த்துவிட்டே ஓய்வேன்!என் சாயா உறுதியிது!
தென்றல் சுடுநெருப்பைச் சேர்ந்துதழல் ஆவதுபோல்
ஒன்றித் தமிழென் உயிரில் கனன்றிருக்கும்;

வான்கடந்து பாயும் மறவேந்தர் தம்வழியில்
யான்பிறந்த தாலென் நரம்பும் கொதித்திருக்கும்!

ஊண்குடைந்து நாய்போல் உடல்கொழுத்துப் பேய்த்திமிரால்
மாண்பிறந்து மாணவரை மாய்த்துவெறிக் கூத்தாடும்

பொல்லாக் குரங்கரை,யான் கொல்லா தமைதியுறேன்;
அல்லாக்கால் யான்இனிஓர் ஆண்மகனாய் வாழுகிலேன்!

தென்னன் மதுரை, திருக்கூட லூர்,கம்பம்,
மன்னும் தமிழ்முகவை, வண்பொருநை நெல்லைநகர்

சீரார் திருச்சிராப் பள்ளி,மணப் பாரை,கரூர்,
நேரார் இடித்தமதிற் செஞ்சி,தில்லை ஆர்க்காடு;

தஞ்சாவூர், மன்னை, தமிழ்க்கரந்தை, பொள்ளாச்சி,
பஞ்சாலைக் கோவை, தொழில்திருப்பூர், ஈரோடு,

சென்னி மலை,வெள்ளக் கோவில், பெருந்துறை,நற்
பொன்னிக் குமரநகர்; புத்திரும்புச் சேலநகர்;

நல்லதிருச் செங்கோடு, நாமக்கல், வாணிபத்தில்
வல்லவட வாரணியூர், வாலாசா, சோலாருப்

பேர்தாங்கு பேட்டை, அரசிப் பெயர்ப்பேட்டை,
சீர்தாங்கு பேரணும் பட்டு, குடியேற்றம்,

சென்னை, திருவொற்றி யூர்,புதுவை மண்ணிலெங்கும்
என்னினத்தைச் சுட்ட இழிந்த கழுகுகளே!

சாவுக்குச் சாவு! தலைக்குத் தலையுருட்டிக்
காவு கொடுக்கக் கனன்றேன்; வினைமுடிப்பேன்!

என்றன் உயிரை இயக்கும் தமிழ்க்கனலால்
ஒன்றுப் பகைவர் உயிர்ப்பைப் பொசுக்கிடுவேன்!

இந்திக்கு வால்பிடித்த இந்நாட்டு மந்திகளைச்
'செந்தீ' எனுட்பிறந்த 'செந்தமிழ்த்தீ' சுட்டெரிக்கும்!

என்னுட் கனலும் எரிமலைக்குத் தப்பியொரு
புன்மை வடக்கனுமிப் பாரகத்தில் வாழ்வதில்லை!

ஈரா யிரநரிகள் இணைந்தூளை இட்டாலும்
ஓரரிமா தன்னின் உயர்முழக்கை வெல்வதில்லை!

இந்திப் புலைநாய்கள் ஈரேழு கோடியொடு
குந்தித் தமிழர் குலைப்பதுதான் சட்டமெனும்

தொந்தி வடக்குச் சுடுகாட்டுப் பேயர்களை
முந்தும் சினத்தீ,தன் மானத்தீ மூண்டெரிக்கும்!

மாயா உணர்வு மறத்தீ! எரிமலைத்தீ!
ஓயாப் பெருந்தீ! உரிமைத்தீ! நெஞ்சகலா

வெந்து பகைப்பூண்டும் வீழக் கனிந்தெரியும்
செந்தமிழாம் இந்த நெருப்பு!

*

இந்திய நாடா? இந்தி நாடா?...

புதுவை - நரசிம்மன்.

இன்று உலகத்தையே ஒன்றுபடுத்த உதவும் மொழி ஆங்கிலம் ஒன்றுதான். இந்தியாவினர் ஆங்கிலம் பயின்றால் உலகத்தோடு ஒட்டி உறவாட முடியும். இந்தியாவும் உலகத்தில் ஒரு பங்குதான் என்பதை மறந்துவிட்ட இலால்பகதூர் சாத்திரியார், ஆங்கிலத்தைப் படிப்பதைவிட இந்தியைப் படியுங்கள் என்று பேசி வருதல் வருத்தத்திற்குரியது. உலகத்திலேயே சிறந்த பல்கலைக் கழகமாகக் கருதப்படுவது ஆக்சுபோர்டு பல்கலைக் கழகம். இதுகாறும் இப்பல்கலைக் கழகத்தில் இலத்தின் மொழியே ஆட்சி மொழியாக இருந்து வந்தது. ஆங்கிலத்தின் பெருமை யுணர்ந்த பல்கலைக் கழகம் இலத்தீனை நீக்கி ஆங்கிலத்தை ஆட்சிமொழி யாக்கக் கருதுகிறது இச்செய்தி 'தமிழ் நாடு' இதழில் திசம்பர் 15-ஆம் நாள் வெளியிடப் பட்டுள்ளது. அது வருமாறு:

ஆக்சுபோர்டு (இங்கிலாந்து திசம்பர், 13.) 800 ஆண்டுகளாக வழக்கில் இருந்து வரும் இலத்தீன் ஆட்சி மொழியை நீக்க ஆக்சுபோர்டு பல்கலைக் கழகம் முயன்று வருகிறது. இப் பல்கலைக் கழகச் செயற்குழு அடுத்த மாதம் கூடும்பொழுது மெர்ட்டன் கல்லூரிக் காவலர் ஆரிசனும் வேறு எட்டு உயர்ந்த வேலையில் இருக்கும் அதிகாரிகளும் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருவர். எல்லா விழாக்களிலும் இலத்தீன் மொழியைப் பயன்படுத்துவதை நிறுத்தவேண்டும் என்றும், இலத்தீனிலுள்ள சட்டங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க வேண்டும் என்றும் இத்தீர்மானம் வலியுறுத்தும். உலகமே இவ்வாறு ஆங்கிலத்தை ஏற்றிப் போற்றும் இந்நாளில் இலால்பகதூர் சாத்திரியார் மட்டும் இந்தியே மறை மொழியெனக் குண்டு சட்டியில் குதிரை ஓட்டி வருகிறார். 1965-ஆம் ஆண்டு சனவரித்திங்கள் 26 ஆம் நாளிலிருந்து இந்தி ஆட்சி மொழியாகிறது. (அறிவிப்பு 27-11-64 இந்திய உள்துறை அமைச்சரவை.) இந்திய உள்துறை அமைச்சரவை இத்துடன் நின்றுவிட வில்லை. ஆட்சி மொழியாக இந்தி அரசுக் கட்டிலில் ஏறிய மறுநாள் (சனவரி 27-இல்) இந்தியை ஆட்சிமொழியாக ஏற்றுக்கொண்டதை அறிவிக்கும் முறையாக எல்லா நடுவண் அரசுச் செயலகங்களிலிருந்தும் குறைந்த அளவு ஓர் அறிவிப்பையாவது இந்தியில் வெளியிட வேண்டுமாம். அத்துடன் இந்தி மொழி வளர்ச்சியைக் கவனிக்க மாநிலந்தோறும் ஓர் அதிகாரி அமர்த்தப் பெறல் வேண்டுமாம். இது மக்கள் மன்றத்தின் ஆணை; இல்லை. அரசின் வல்லாண்மைப் போக்கு.

இந்தியைத் திணிக்கவில்லை நாங்கள்; அது தானே பரவுகிறது என்று பேசி வருகின்றனர் பேராயக் கட்சினர் சிலர். சென்ற ஆண்டு இந்தியைத் திணிக்க உருபா இருபது இலக்கம் ஒதுக்கப்பட்டது மக்கள் வரிப்பணத்தில்! இவ்வாண்டோ, இந்தி பேசாத மாநிலங்களின் இந்தியின் வளர்ச்சிக்காக ஒரு கோடி உருபா ஒதுக்கப்பட்டுள்ளது. சென்னையில் எட்டு இடங்களுக்கு மட்டும் 78000 உருபா ஒதுக்கியுள்ளனர். அவ்வெட்டு இடங்களாவன:

1. தியாகராய நகர்; 2. சைதாப்பேட்டை; 3. கிண்டி; 4. மயிலாப்பூர்; 5. திருவல்லிக்கேணி; 6. புரசைவாக்கம்; 7. பெரம்பூர்; 8. வண்ணாரப்பேட்டை சார்சுடவுன். இவ்வெட்டு இடங்களிலும் இந்தியைக் கற்பிக்க ஏற்பாடுகள் நடக்கின்றன. இவற்றைத் 'தக்கிணபாரத' இந்திப்பரப்பு அவையினர் நிறைவேற்றுவராம். அக்டோபர் திங்கள் முதல் மார்ச்சுத் திங்கள் முடிய ஆறு திங்களில் உருபா எழுபத்தெட்டாயிரமும், இந்திப் பரப்பு வேலைகளுக்காகச் செலவிடப்பட வேண்டுமாம். எப்படியிருக்கிறது அரசினரின் இந்தித் தொண்டு...! ●

'தென்மொழி' தாளிகையின் உரிமை அறிக்கை.

(நடுவணரசு செய்தித்தாள் பதிவுச்சட்டம் 1956, 4-ஆம் வகுப்பு, 8-ஆம் கட்டளைப்படி.)

1. வெளியிடும் இடம் : திருப்பாதிரிப்புலியூர் (தெ. ஆ.)
2. வெளியிடும் கால முறை : திங்கள் ஒரு முறை.
3. அச்சகத்தார் பெயர், இனம், முகவரி. } பு. சு. இருட்டிணமூர்த்தி, தமிழர், மித்திரா அச்சகம். திருப்பாதிரிப்புலியூர். கடலூர்-2.
4. வெளியிடுவார் பெயர் : திருவாட்டி. மா. கமலம் (தாமரை) திருவாட்டி. ப. செகதீசுவரி. (உலக முதல்வி)
   இனம் : தமிழர்
   முகவரி : மித்திரா அச்சகம், திருப்பாதிரிப்புலியூர்.
5. ஆசிரியர் பெயர், இனம், : பெருஞ்சித்திரன், தமிழர்.
   முகவரி : மித்திரா அச்சகம், திருப்பாதிரிப்புலியூர்.
6. ஒரு விழுக்காட்டிற்கு மேல் முதலீடு செய்துள்ள, தாளிகை உரிமையாளர், கூட்டாளர் இவர்தம் பெயர்களும், முகவரிகளும். } திருவாட்டி. மா. கமலம். (தாமரை) திருவாட்டி. ப. செகதீசுவரி. (உலக முதல்வி)

தாமரை, உலக முதல்வி யாகிய நாங்கள் இவ்வுறுதிவழி மேலே காணப்பெறும் விளக்கங்கள் யாவும் நாங்களறிந்தவரை முற்றிலும் உண்மையென முடிவாக அறிவிக்கின்றோம்.

பங்குனி-1. 14-3-65.

தாமரை, உலக முதல்வி.
வெளியிடுவார் கையொப்பம்.

ஐயன்மீர், தமிழ்ப் புலவீர்!

ம.இலெ.தங்கப்பா

ஐயன்மீர், தமிழ்ப் புலவீர், அரியதமிழ்த் தொண்டீர்,
அழகுதமிழ்க் காவலரே, யாங்கொளிந்து கொண்டீர்?
நெய்யொன்று பெரு நெருப்பாய் இந்திஎழும் வேளை
நினைந்தும்மைத் தேடுகின்றோம்; காணுகிலோம் ஆளை!
செய்யென்றே ஊக்குதற்கும் தலைமையின்றி, அந்தோ,
சிறுவரொடும் நல்லிளைஞர் தலைகொடுத்து நின்றார்.
கொய்கின்றார் தலைஎன்று மருண்டுவிட்டீர் போலும்!
குமுறிவரா வெறுஞ்சொற்கள் செயற்கெங்ஙன் சாலும்?

பழந்தமிழர் மறம்பற்றி நூல்எழுதி விற்றீர்;
பயின்றபுறத் துறைப்பெருமை புகழ்ந்துபொருள் பெற்றீர்;
எழுந்ததமிழ்ப் படையிமயம் வென்றதிறம் வியந்தீர்;
ஏந்திழைதன் மார்பறுக்க எழுந்தவுரம் நயந்தீர்;
கொழுந்தெரியும் களநெருப்பில் பகைத்தலைகள் அமிழ்த்தும்
கொடும்பரணிக் குரை செய்தீர்! ஆனாலும் தமிழ்க்கே
விழுந்ததலை அத்தனையும் இளைஞர்தம் தலையே!
வெட்கமின்றி நீவிர் உயிர் வாழ்தல்நலம் இலையே!

அடுக்கடுக்காய்ப் பலபட்டம் தமிழாலே பெற்றீர்;
ஆராய்ச்சி வல்லரெனப் பரிசுமிக உற்றீர்;
முடுக்கனைத்தும் தமிழ்ப்பெயரால் உம்பெயரே வளர்த்தீர்;
மூன்றடுக்கு வளமனையும் காணியுங்கொள் வளத்தீர்,
வடக்கனவன் அடக்குமுறை அவிழ்த்துவிடல் கண்டீர்
வாழ்வளித்த தமிழ்மறந்தீர், உள்ளிழுத்துக் கொண்டீர்!
இடுக்கினிலா புகுந்துகொண்டீர்? தேடுகின்றோம் வாரீர்!
இருக்குமிடம் தெரியவொரு குரலேனும் தாரீர்!

தமிழ்ப்புலவன் தமிழ்காத்துப் பெருமையுற்றான் முன்னாள்;
தலைகுனிந்து வடமொழிக்குத் தாள்பணிந்தான் இந்நாள்!
தமிழ்ப்புலவன் வேந்தரையும் இடித்துரைத்தான் அந்நாள்;
தற்குறிகள் ஆட்சிக்கே வால்பிடித்தான் இந்நாள்!
தமிழ்ப்புலவன் மெய்முழக்கும் ஏறானான் முன்னாள்;
தன்பிழைப்பே குறியாகி நரியானான் பின்னாள்!
தமிழ்ப்புலவன் மானம்காத் துயிர்நீத்தான் தொன்னாள்;
தகவிழந்தும், நாணிழந்தும் குடல்காத்தான் இந்நாள்!

தமிழ்ப்புலவீர், உண்மையிலே தமிழறிந்தீர் தாமா?
தமிழறிந்தால் தமிழ்மானம் இல்லாமற் போமா?
தமிழ்ப்படிப்பிங் கெளிதென்று கற்கவந்தீர் சில்லோர்;
தமிழ்ப்படிப்போர் தொழிலென்றே உட்புகுந்தீர் பல்லோர்;
தமிழ்ப்படிப்பால் மதிப்பென்று பின்னுழைந்தீர் வல்லோர்;
தமிழ்படித்தீர் வேறு வழி இன்றி உம்மில் நல்லோர்;
தமிழ்ப்பற்றால் தமிழ்கற்றால் எழுந்திடுமே நெஞ்சம்!
தமிழ்கெடுக்க வந்திடுமா இந்திஎனும் நஞ்சும்?

இணக்கமற உம் அறிவைக் குறைசொன்னோம் இல்லை.
இலக்கணத்தைக் குடித்தவர்நீர்; இலக்கியம் நும் எல்லை!
மணிக்கணக்காய் உரைப்பொழிவு செய்வதிலும் வல்லீர்!
மாற்றாரைத் திணறடிக்கும் சொற்போரில் வெல்வீர்!
தணிப்பரிதாம் ஆய்வுடையீர்; ஆனாலும் உண்மைத்
தமிழுணர்வோ உம்நெஞ்சில் சுடர்ந்தொளிர்தல் இல்லை.
பிணத்தை அறுத் தாய்கின்ற மருத்துவன்போ லானீர்;
பெருமையுறும் உயிர்ப்புநிலை பிறழவிட்டுப் போனீர்.

“தூயதமிழ்க் காவலர்”கள்! “முத்தமிழ்க் காப் பாளர்”!
துலங்குபுகழ்ச் “செந்தமிழின் காவலர்”கள் ஆனீர்!
ஆய“தமிழ்ப் பெரியார்”கள்; “தமிழ்த் தந்தை”மார்கள்
ஐம்பதுபேர் இருக்கின்றீர்; பயன்விளைந்த தென்ன?
தாயகத்தை விழுங்கவரும் இந்திமுன் கை கட்டித்
தாளறிக்கை விட்டிருந்தீர்! அதுவுமின்று கெட்டீர்!
தீயெடுத்த விழக்குறிப்பும் திறலெடுத்த நெஞ்சும்
செயலெடுக்கும் வகைவிடுத்தீர்! பட்டந்தான் எஞ்சும்!

உயர்வுடையார் நகைப்பதற்கா உடலெடுத்தீர் புலவீர்?
ஒண்டமிழை உயர்த்திட நீர் என் செய்தீர்? புகல்வீர்!
செயிரடைதல் வேண்டாங்காண், மேடைக்கு வாரீர்,
செய்திருக்கும் தீங்கெல்லாம் அம்பலமாம், பாரீர்!
மயர்வுடைய தமிழினத்தை இத்தனைநாள் ஏய்த்தீர்;
மாப்புகழும் இடமதிப்பும் பெற்றுப்பொன் காய்த்தீர்.
அயர்வதிலோம்; உமை உரசிப் பார்த்திடலாம், நன்றா?
அத்துணிச்சல் உமக்கிருந்தால் இந்தியுமிங் குண்டா?

உண்மையிலே பிறர் எழுத்தைத் தான் ஒருநூல் ஆக்கி
உலவவிட்டு மதிப்படைந்தான் உம்மிலொரு புலவன்!
வெண்மையர்கள் பொய் நூற்கே அணிந்துரைதான் வேண்ட
விலை வாங்கிப் புகழ்ந்துரைத்தான்; உம்மிலவன் ஒருவன்!
அண்மிஒரு நூறளிக்கத் தான்எழுதா உரைக்கே
அழகாகத் தன்பெயரை விற்றவனும் ஒருவன்!
உண்மை நெறி இல்லாதீர், மறுத்துரைத்தல் உண்டா?
உள்ளொளிசேர் தமிழ்க்குநீர் இயற்றுவதும் தொண்டா?

பரிசுகெட்ட தமிழ்ப்புலவீர், ஒருவரினை ஒருவர்
பாராட்டி வாழ்வதுதான் உங்கள் தொழில் போலும்!
கரிசுபல புரிவதிலே ஒருவருக்கே ஒருவர்
காப்பானீர் நீவிர்! இதில் பார்ப்பானை வென்றீர்!
வரிசைவரும் தாளெல்லாம் புகழ்மாலை! முகமன்!
வாயசைவு, கையசைவு ஒவ்வொன்றும் தொண்டாம்!
அரிசிவிற்கும் வாணிகனும் இனித்தொண்டன் போலும்!
அதனால்தான் இந்திவரத் தமிழ்கிடந்து சாகும்!

பொருள் சேர்க்கும் விரகோடு செய்வதுவும் தொண்டோ?
புகழ்கருதி எழுதுவதில் உண்மையொளி உண்டோ?
தெருள்சேர்க்க உளங்குமுறி எழலன்றோ வேண்டும்!
செய்வதெலாம் கடன்முறையேல் யாரையது தூண்டும்?
இருள்சேர்ந்த நெஞ்சுடையீர், பிழைக்கவழி கண்டீர்;
எளிதுபுகழ் கிடைக்க அதைத் தொண்டென்றும் விண்டீர்!
மருள்சேர்ந்த மக்களுமை நம்பஉயர் வுற்றீர்;
மடிமிகுந்தீர்; அரைகுறையைச் சிறப்பென்று விற்றீர்.

இருவகையாம் நன்றாற்றல்: ஒருவகை, தன் இல்லத்(து)
இருந்தபடி மெய்நெறியால் பயன்தந்து கோடல்.
பெருமை உயர் வகையுண்டாம்: உலகுய்வே மூச்சாய்ப்
பிறவிலக்கிப் பெரும்பணியில் தனையிழக்கும் தொண்டு!
கருதுமந்த நன்றேனும் கலப்பின்றிச் செய்யார்
கயவரென அறைந்திடுவோம்; காசு பெற லேனும்
தருவது பா லாயிருத்தல் வேண்டும்! மிக நசையால்
தண்ணீரைக் கலப்பதுவுங் கயமை! அது வசையே!

ஒன்றுரைப்பேன் புலவீர் நீர் தொண்டியற்றல் வேண்டின்
உண்மையுணர் வுண்மைநெறி, உண்மையறம் வேண்டும்.
''நன்றியற்றல் தவிர்க''எனப் பொன்கோடி தரினும்
நஞ்சென்றே அதைவெறுக்கும் மெய்யுறுதி வேண்டும்.
கொன்றொழிப்போம் எனத்தெவ்வர் வாளெடுத்து வரினும்
குன்றிமுனை விலங்காத கொள்கையுரம் வேண்டும்.
நின்றிருக்கும் உயிர்வாழ்க்கை பிறர்க்கென்ற மெய்மை
நிலைத்திருக்கப் பற்றறுக்கும் மெய்யறிவே வேண்டும்.

தெருள்வேண்டின் திருவில்லை; திருவேண்டின் உட்பால்
தெளிவில்லை எனும்உண்மை தெளியீரா புலவீர்?
இருவேட்கை கொண்டிருந்தால் இயலுமா மெய்மை?
எரிச்சலுற வேண்டாங்காண்; உம்வாழ்வே பொய்மை!
பொருள்தந்தார் எனச்சிலர்முன் இளிக்கின்றீர் போற்றி!
புரந்தார்முன் கொள்கைநெறி வளைக்கின்றீர், சீச்சீ!
இருள்கிடந்து புரண்டீரே; தமிழ்மானம் கெட்டீர்!
இந்தியின்பால் பொருள்பெற்றோ வாய்மூடி விட்டீர்?

வீடெரியும் கேடுணரார்; யாழெடுத்து மீட்டி
விரும்புமிசை பாடஎண்ணும் பேதையரே போலும்
நாடெரியும் பொழுதினிலும் பழங்கதைநூல் ஆய்ந்து
நயமறிந்து சுவைக்கின்றார் புலவர்சிலர்; என்னே,
தேடரிய தாய்மொழியைக் கைநழுவ விட்டே
திரள்வரிய நிழலுருவம் தழுவுதலும் ஒப்போ?
ஏடரிய வரலாற்றின் புகழ்சமைப்பீர் நன்னர்;
இந்தியினை முதலொழிமின், தமிழ்வளரும் பின்னர்!

இலக்கியத்தை இலக்கணத்தை ஆய்வதற்கா நேரம்?
இன்பநறுஞ் சூழ்நிலையில் அவைநுகர்தல் சீராம்!
இலக்கியமும் இலக்கணமும் பூண்டற்றுப் போக
இந்தியெனும் நச்சரவம் படமெடுத்தே சீறும்!
அலக்கணுறும் நெருக்கடியில் சுவையுணர்வா வேலை?
அத்தனையும் விடுத்தெழுமின்! சுழற்றிடுவோம் வாளை!
கலக்கமுற வேண்டாங்காண், புலவீர்காள் வாரீர்;
கவின்தமிழின் மைந்தரெனில் இம்மருங்கு சேரீர்!

புலவருளே ஒருசாரார், போகட்டும், வறியர்!
பொன்குவித்த பெரும்புலவீர், நீவிரெதற் குரியர்?
நிலையிலென்ன தாழ்ந்திடுவீர் தொழில்துறந்து வந்தால்?
நெடுந்தமிழுக் கொருநன்றி உம்கடமை அன்றோ!
அலுவலிலே கிடப்பதற்கும் நாணமுமக் கில்லை?
அருந்தமிழை விற்றபின்பா அடுக்கிடுவீர் சொல்லை?
நலமனைத்தும் தமிழென்றீர், நடிப்பென்று கண்டோம்!
நாளையுங்கள் வரலாற்றில் இழுக்கென்று விண்டோம்.

போனதெலாம் போகட்டும்; இனியேனும் வருவீர்;
பொங்குதமிழ் மறங்கண்டால் இந்திமொழி வெருவும்.
ஏனென்று கேட்பதற்கிங் காளில்லை என்ற
இந்திமகன் நினைப்பெல்லாம் சிந்திவிடல் வேண்டும்.
தானையொன்று திரட்டிடுவோம்; தமிழகத்தின் ஊர்க்கூர்
தக்கவரே எழுந்திடுவோம்! சென்றிடுவோம் தில்லி!
ஆனவகை செய்தற்கே, தமிழ்ப்புலவீர், வாரீர்!
அடைந்தவசை துடைத்திடவும் வாய்ப்பிதுகாண் தேரீர்!

படைநடுங்க எழல் வேண்டும்! இந்தியினை நுழைக்கும்
பதர்நடுங்கப் புயல்போலும் சீறிஅடல் வேண்டும்!
கடல் நடுங்கத் தமிழ்முழக்கம் விண் இடித்தல் வேண்டும்!
கடைநடுங்கி இந்திகெட நெருப்புமிழல் வேண்டும்!
விடை நடுங்கா நாவுடையீர், விறல் நடுங்கா நெஞ்சீர்,
வினை நடுங்கா நாவுடையீர், இறுதிப்போர் இதுவே!
தொடைநடுங்கி இருப்பவர்க்கு நொடிக்குநொடி சாவே;
தோள்நடுங்கா துயிர்கொடுப்பார் அடைவதுமெய் வாழ்வே!

—○—

சட்ட வல்லுநர் என்ன சொல்கின்றார்.....?

(கீழே உள்ள மடல் பம்பாய் முன்னணி சட்ட வல்லுநர் திரு. எசு. ஆர். வக்கீல் அவர்கள் தலைமையமைச்சர் திரு. இலால்பகதூர் சாத்திரிக்கு எழுதிய மடலாகும். இந்தி ஆட்சி மொழியாக்கப் பட்டால் நாட்டின் ஒற்றுமை எவ்வாறு சீர்குலையும் என்பதைக் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டப்பெற்ற இம்மடல் தமிழ் அன்பர்கள் கண்டு கருத்தில் பதிக்கத் தக்கதாகும். 'முரசொலி'யில் வெளிவந்த தமிழ் மொழிபெயர்ப்பை ஒரு சில திருத்தங்களுடன் தமிழாக்கி வெளியிட்டுள்ளோம். — ஆசிரியர்)

அன்புள்ள ஐயா!

நான் ஓர் அரசியல்காரனுமல்லன்; தென்னிந்தியனுமல்லன். தங்கள் தோழர்கள் உட்படப் பல அரசு அதிகாரிகளைவிடச் சிறந்த இந்தியை எழுதவும் பேசவும் முடியும் என நான் கூறிக் கொள்ள முடியும். எனவே, இந்த மடலில் சொல்வதைப் பொறுத்து என்சொந்த நலன்கள் ஏதும் நிறைவேற வேண்டியது மில்லை; அல்லது இந்த மடல் உடனடியாக நல்விளைவுகளைத் தரப்போகிறது என்ற நம்பிக்கையும் எனக்கில்லை வடக்கின் புறக்கணிப்பாலும் தெற்கின் பொறுமையின்மையாலும் எந்த வகைச்சார்பும் கொள்ளாத-எந்தவகைத்தவருனகருத்தும் கொள்ளாத-நாட்டுப்பற்றுடைய இந்தியன் நான். அந்த முறையில், நாட்டைப் பிளவு படுத்தும் திட்டமிட்ட தவறுகள் எனது நாட்டின் ஆளுங் கட்சியால் செய்யப்படுகின்றன என்று நான் உணரும்பொழுது, எனது நெஞ்சில் குருதி வழிகிறது.

இந்தியைக் கொண்டு வரும் இந்த வெறியில் ஒரு முறை இருக்கிறது. அது வரலாற்று உண்மைகளாலும், நிகழ்ச்சிகளாலும் வெளிப்படையானது. சென்ற மாதம் 27-ஆம் நாளன்று அரசியல் சட்ட மன்றத்தில் ஆட்சி மொழி மாநாட்டைத் திறந்து வைத்துப் பேசுகிற வேளையில், ஆங்கிலத்திலிருந்து இந்திக்கு மாறுவதற்கு விரைவான நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென வேண்டியும், அதே வேளையில் 'அப்படிச் செய்யும்பொழுது நாட்டின் ஒற்றுமையைத் தாக்கக்கூடிய எந்த நடவடிக்கையையும் எடுக்கக்கூடாது' என்று எச்சரித்தும் தாங்கள் கூறியதிலிருந்து இந்த மடலைத் தீட்டும்படி நான் தூண்டப்பட்டேன். இந்தி பேசா மக்களுக்குத் தொல்லை விளைவதைத் தவிர்க்க இந்தியொடு ஆங்கிலத்தையும் பயன்படுத்தத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது எனவும் தாங்கள் மேற்கொண்டு கூறியுள்ளீர்கள்.

வேறு சொற்களில் சொன்னால், வரி செலுத்துவோர் பணத்தில் அரசினர் செய்திப்போக்குவரத்துகளின் செலவைப் பலமடங்காக்குவதன் மூலம், அரசினர் அதிகாரிகளின் வேலைகளையும், தலைவலியையும் பெருக்கியுள்ளீர்கள்.

மிக விரிவாகப் பேசப்படுகிற அல்லது புரிந்துகொள்ளப் படுவதாய் உள்ள ஒரு தொடர்பு மொழியின் தேவையைத் தாங்கள் மேலும் வற்புறுத்தியிருக்கிறீர்கள். நீங்கள் தேசிய மொழிக்கு என்ன பெயர் வேண்டுமானாலும் தாருங்கள். ஆனால் நீங்கள் இந்தி என்று கொண்டுவந்துள்ள மொழி மிகவும் வடமொழி வடிவாக்கப்பட்ட (சமசுகிருத) வரி வடிவில் எழுதப்பட்டது. புதிதாய்ப் புனைந்த-தாடையை முறிக்கும் பல்வேறு சொற்களைக் கொண்டது அம்மொழி. அச்சொற்கள் கூலிப் புலவர்களால் கண்டுபிடிக்கப்பட்டவை. அம்மொழி உள்ளத்தின் மொழியன்று, மூளையின் மொழிதான்! இதுவே உண்மை.

தாங்கள் எடுத்த நடவடிக்கை நாட்டு ஒற்றுமைக்குக் கேடு செய்யலாம் என்று தங்கள் மனதுக்குள்ளேயே ஓர் எண்ணம் இருக்கிறது என்பதும் தங்கள் உரையிலிருந்து நன்கு தெளிவாகிறது மாந்த நினைவு-குறிப்பாக நாட்டு ஆளுங்கட்சியின் நினைவு-மிகவும் மறக்கக் கூடியது. தாங்களும், தங்கள் அரசும் தென்னிந்தியர்கள் மீது ஒரு மொழியைத் திணிக்கும் தவற்றைச் செய்திருக்கிறீர்கள். இது விரைவில் செம்மை செய்யப்படாவிட்டால், இந்தியப் பேராயக் கட்சி 1947-க்கு முன் செய்த தவற்றைத் திரும்பச் செய்ததாகவே முடியும். அத்தவறுதான் பாக்கித்தானை உண்டாக்கியதன் மூலம் இந்தியப் பிரிவினைக்குக் காரணமானது.

ஒரு 'தேசிய' மொழியை உருவாக்கும் இந்தப் படுகேடான அறிவின்மை (1930-ஆம் ஆண்டு முதல்) கடந்த காலத்தில் இந்து, முசுலிம் உறவில் கசப்புண்டாக்கி யிருக்கிறது. மௌல்வி அப்துல் அக் அவர்கள் எளிமைப்படுத்தப்பட்ட உருது அல்லது இந்துத்தானி-தேசிய மொழியாவதற்குப் பரிந்து போராடினவர் ஆவார். அவர், 1936-இல் தேசிய மொழி மீது சிக்கலைக் கிளப்பியமைக்காகக் காந்தியாரின் நோக்கத்தைக் கண்டித்தார். 1936 சூலையில் நாசிக்கில் காகா கலேல்கர், '22 கோடி இந்துக்கள் நாகரி வரிவடிவத்தை ஏற்றுக் கொண்டால், 7 கோடி முசுலிம்களும் நாகரி வரிவடிவத்தை ஏற்றுக்கொள்ளும்படி நெருக்கடிக்கப்படுவர்; ஏனென்றால் அவர்கள் இந்துக்களோடு தொடர்புகள் கொண்டிருக்கின்றனர்' என்று கூறினார். 1939 அளவில் சென்னையில் இந்தியைப் பரப்ப முயன்றபொழுது, மாகாணத்தில் பார்ப்பனரல்லாத பெரும்பான்மையினரான தமிழர்கள் குறைகூறினர்; இந்திப் பரப்புதலை எதிர்த்தனர்.

1940 சூலை 14 அன்று பரெய்லியில் அனைத்திந்திய உருது மொழி மாநாடு நடந்தது. திருமிகு. விசயலட்சுமி அம்மையாரும் பர். சம்பூர்ணனந்தாவும் அமைச்சர்கள் என்ற முறையில் இந்திக்கு மிகுந்த பரிவும் தலைமையும் தருகின்றனர் என்றுகூறி,

அம்மாநாட்டில் பர்.எசு என்.ஏ. சாப்ரி எச்சரித்தார். இந்தி-இந்துத்தானி என்பதற்குத்தாங்கள் கொள்ளும் பொருளென்ன என்று கேட்கப்பட்டபொழுது, எதிர்காலத்தில் இந்துத்தானியாகப் போகும் இந்தி என்ருர் காந்தியார் 1948-இல் தங்களுக்கு முன் பதவியிலிருந்த திரு.சவகர்லால் நேரு, வட நாட்டிலுள்ள கோடிக் கணக்கான இந்துக்களுக்கும் முசுலிம்களுக்கும் இருப்பது போல, தமது தாய்மொழியும் உருதே என்று கூறினர். (1944 சனவரி 15-ஆம் நாளைய 'மார்னிங் நியூசு' காண்க.) இந்தப் பரப்புதல்களின் விளைவால்தான், பாக்கித்தான் உண்டாக்கப் பட்டது. நாட்டில் மேலும் ஒரு பிரிவினை செய்யத் தாங்கள் விரும்புகிறீர்களா?

அரசியல் சட்டத்தில் ஒரு கட்டளை இருப்பதால், இந்தி தேசியமொழி என்ற முறையில் ஓரிடத்தைப் பெற்ருகல்வேண்டும் என்று தங்களால் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. அரசினரால் நிறைவேற்றப்படாத வேறு பல கட்டளைகளை நான் சுட்டிக் காட்டுவது தேவைதானு? மொழி அடிப்படையில் நாட்டைப் பிரிப்பதற்கு அரசியல் சட்டத்தில் விதி ஏதும் இருந்ததா என வியக்கின்றேன். இருந்தும் இமைப் பொழுதில் பம்பாய் மாநிலம் மராட்டியமாகவும், குசராத்தாகவும் பிரிக்கப்பட்டிருக்கிறதே!

இவ்வாண்டு முதல், குசராத்தில் படிக்கும் குசராத்தியர்கள் தமது வழக்குரைஞர் பட்டப் படிப்பைக் குசராத்தியைப் பாட மொழியாகக்கொண்டு படிப்பர். இந்த இளம் வழக்குரைஞர்கள் எங்கே தொழில் நடத்துவார்கள் என்று எதிர்பார்க்கிறீர்கள்? இந்த நடவடிக்கையை எதிர்த்தவர்களுக்குத் தங்கள் ஆளும் கட்சி காட்டிய பொறைத்தன்மை யாது? திரு. வாடிலால் இலல் லூபாய் மேத்தா, குசராத் பேராயக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிருர். மராட்டியமும் தனது வட்டார மொழியைப் பாட மொழியாக்குவதில் காலந்தாழ்த்தவில்லை. திரும்பப் பெறப்பட்டதும் அரசினர் கருவூலகத்திற்கு உருபா ஏழிலக்கம் செலவு வைத்ததுமான மராட்டியத்தின் புதிய நில நூலைப் படிக்கத் தாங்கள் வாய்ப்பேதேனும் பெற்றீர்களா? தேசியப் பற்றுக்கு மாற்ருக மாகாண வெறியைக் கொண்டுவரும் மாநிலங்களின் திட்டமிட்ட இந்நடவடிக்கையைத் தடுக்கத் தங்கள் அரசு என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது?

ஐயா!

யாருக்கும் எந்தத் தீங்கும் செய்யப் போவதில்லை என்றும், எந்நலனும் துன்பப்படப் போவதில்லை என்றும் தரப்பட்டிருக்கும் தங்கள் தோழரான திரு. நந்தாவின் உறுதிமொழி, வெறும் தாளில் மட்டுமே இருக்கக்கூடிய வாக்குறுதிதான்!

எடுத்துக்காட்டாக, சிந்திக் குடிமகன் ஒருவர் வழக்கு மன்றத்தில் ஒரு குற்றச்சாட்டைத் தாக்கல் செய்தார். ஆனால் அஃது ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது என்பதற்காகவே மறுக்கப்பட்டது. அதற்கு நான் பரிந்து உயர் அற மன்றம் வரை செல்ல வேண்டியிருந்தது. எனவே, யாருக்கும் எத்தீங்கும் இழைக்கப்படாது என்றும், எந்நலனும் துன்பத்திற்குள்ளாகப் போவதில்லை என்றும் கூறுவது மிகத் தவறானது. தாங்களும், தங்கள் அரசும் பல்வேறு கடும் சிக்கல்களைக்காண்கிறீர்கள். நாடு தேசியப்பேரிடரின் விளிம்பில் உள்ளது. அவ்வாறு உங்கள் தோழர் திரு பட்டீல் சரியாகவே சொன்னதுபோல் 'நம்பிக்கைக்குக் கேடான நிலையின்' விளிம்பில் உள்ளது. சீன ஊடுருவல், வங்க ஏதிலிகள் சிக்கல், பாக்கித்தான் – காசுமீர் ஊடுருவல், வரி ஏய்ப்பு இடர்கள், இலங்கை இந்தியர் சிக்கல்கள், கடைசியாக–ஆனால் பெரியதாக உள்ள உணவுச் சிக்கல் ஆகிய இவை போதிய அளவு தங்கள் அரசால் ஆராயப்படவில்லை. அப்படிப்பட்ட சடுத்தத்தில் தேசியமொழிச் சிக்கலுக்கு நீங்கள் தூண்டிவிட்டீர்கள். அதன்மூலம் 'தேசிய' மொழயினால் தேசிய ஒற்றுமையைக் கொண்டுவரும் வீணான முயற்சியைச் செய்து குளவிக் கூட்டைக் கலைத்துவிட்டீர்கள்.

இந்த நெருக்கடி வேளையில் ஆட்சி மொழியாகவும் தேசிய மொழியாகவும் இந்தியைத் திணிப்பது, நீங்களும் உங்கள் தோழர்களும் செய்த அஞ்சத்தக்க அரசியல் பெருந் தவறாகும். தாங்கள், கருத்துத் தவறு செய்துவிட்டதாக உணர்வீர்களேயானால், காலங்கடத்தாமல் அதைத் திருத்திக் கொள்வது சிறந்ததாகும். எப்படியேனும், தாங்கள் தங்கள் தோழர்களால் கட்டாயப்படுத்தப்பட்டு விட்டதாகக் கருதுவீர்களேயானால், தவற்றைத் திருத்தி உங்கள் குரலை உணரும்படிச் செய்வதற்கு இதுவே தகுந்த காலம்.

மாகாண வெறியற்ற தேசப்பற்றுள்ள இந்தியன் ஒவ்வொருவனும், நீங்கள் எடுத்த நடவடிக்கை நாட்டில் பிளவையுண்டாக்கும் என்று உணர்கிறான். நான் அரசியல் காரன் அல்லன் என்பதைத் திரும்பவும்சொல்கிறேன். எனதுநெஞ்சின் அடித்தளம்வரை என்னை எது குழப்புகிறதோ, அதைத்தான் நான் சொல்லியிருக்கிறேன். எனவே இந்தமடலைத் தவறாக எடுத்துக்கொள்ள மாட்டீர்கள் என்று நம்புகிறேன்.

ஐயா,

தாங்கள் எடுத்த நடவடிக்கையிலிருந்து பின்வாங்கி விலகி இயன்றவரை விரைவில் தெற்கிற்கு முறை வழங்க வேண்டுமென்றும், அதன் மூலம் ஒரு பெரும் அரசியல் நெருக்கடியைப் பெரும்பாலும் அரசியல் பேரிடராகக்கூடியதைத் தவிர்க்க வேண்டுமென்றும் தங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தித் திணிப்பை வன்மையாகக் கண்டித்த

நாளிதழ்கள் சிலவற்றின் கருத்துரைகள்:

○ நாட்டின் ஒருமைப்பாடு பெரிதா, ''இந்தியராகிய எங்கட்கு ஒரு பொது மொழி உள்ளது'' என்று கூறும் பெருமை பெரிதா என்பதை நடுவணரசு உடனடியாக முடிவுசெய்தல் வேண்டும். இன்றைய நிலையில் இந்தியே ஆட்சி மொழி என்று பேசுவது முற்றிலும் தவறு. அதற்குத் தமிழ்நாடு அணியமாயில்லை. பொது மொழி என்ற கானல் நீரை விரட்டிக்கொண்டு இந்திபற்றியே பேசிக் கொண்டிருந்தால் இந்தி எதிர்ப்பு வளரும். தேச ஒருமை பெரிதா? இந்தியின் மதிப்பு உயர்வது பெரிதா? தமிழகத்தின் இந்தி எதிர்ப்பு ஒரே மனதாயுள்ளது. யாரோ பொறுப்பற்ற ஒரு சிலரே இந்தி எதிர்ப்பு நாடகம் நடிக்கின்றனர் என்பது உண்மையன்று. இந்தியை ஆட்சி மொழியாக்கற்கேற்ற சூழல் இங்கில்லை. இங்குள்ள எதிர்ப்பைத் தமிழக அரசு நடுவணரசுக்கு எடுத்துக் கூறியிருத்தல் வேண்டும். இந்தியை எதிர்க்க மாணவர் எழுந்தது இயற்கையே. இந்தி வேண்டா என்பதுபற்றி மாணவரிடையே பிளவில்லை. அமைச்சர்கள் ஒருவர்க்கொருவர், முரணுகப் பேசி வருகின்றனர். தேச ஒருமைப்பாடு பெரிது என்றால் ஓரே ஒரு மாநிலம் எதிர்த்தாலும் இந்தியைக் கொணராதிருப்பதுதான் அறிவுடைமை. அரசினர் செயலோ, நாட்டைத் தூண்டாடும் நிலையைத் தோற்றுவித்துவிடுதல் கூடும். இந்திக்கோ, பொது மொழிக்கோ இப்பொழுது உடனடித் தேவை ஒன்றும் இல்லை.

○ மாணவர்களின் அச்சம் மிகையானதும் அன்று; காரணமற்றதும் அன்று. முறையற்ற, நேர்மையற்ற இந்தித் திணிப்பை எதிர்க்கும் இயக்கத்தின் ஈட்டிமுனையேசென்னை! வெறும் அலுவல் வேட்டையை மட்டும் கருத்திற் கொண்டதன்று இவ்வெதிர்ப்பு. உத்தரப் பிரதேசத்திலேயே ஒரு பகுதி இந்தி, மற்றொரு பகுதிக்குப் புரியவில்லை! இந்தி மாநிலங்களிலேயே ஆட்சி மொழியாக அம் மொழிக்கு வளர்ச்சி இல்லை. இந் நிலையில் பன்மொழி நாட்டில் இந்தியைப் புகுத்துவது முழு மடமை. சென்னை மாணவர் மட்டுமல்லர்; தென் மாநிலங்கள் நான்கிலும், மாணவரும், அறிஞரும் இந்தியை எதிர்க்கின்றனர்.

○ தமிழக இந்திக் கிளர்ச்சி பற்றி நடுவண் அமைச்சர்கள் வியப்படைகின்றனராம். வியப்படையக் காரணம் இல்லை. 1963-இல் ஆட்சி மொழித் திட்டம் ஏற்பட்ட பொழுதே

செய்தி இதழ்கள் யாவும் வேறுபாடின்றி அதனை எதிர்த்துள்ளன. பேராயக் கட்சியினர் மட்டுமே எதிர்ப்பு உள்ளத்திலிருந்தும், சொல்லத் தடைப்பட்டிருந்தனர். இங்குள்ள அமைச்சர்கள் சரியாகவும் துணிவாகவும் தில்லிக்கு உணர்த்தியிருந்தால் இத்தகைய சட்டம் வந்தே இருக்காது. தமிழ் நாட்டில் இந்தி திணிக்கப்படமாட்டாது என்கின்றனர். இது. ''தில்லியில் நடப்பதுபற்றி நீங்கள் ஏன் கவலைப்பட வேண்டும்?'' என்பதுபோல் உள்ளது. எப்படிக் கவலைப் படாமல் இருக்க முடியும்? அலுவல் பெறுவதில் தமிழனுக்கு ஒரு கேடும் வராது என ஆறுதல் கூறுகின்றனர். அலுவல் பெறுவதில்தான் தமிழனுக்கு அக்கறையா? தில்லியில் ஆட்சித் திறன் சீர்கெடக்கூடாது, இந்தியின் பெயரால் தில்லியின் செலவு மிகக்கூடாது என்பவற்றிலெல்லாம் தமிழனுக்கு அக்கறை உண்டு. தமிழன் வரியையும் சேர்த்துத்தானே தில்லி செலவு செய்கின்றது! இந்தியால் தமிழுக்கு ஏதம் வராது என்பது உண்மையாக இருக்கலாம்; ஆனால் தமிழனுக்கு ஏதம் உண்டு. 1950-இல் அரசியல் அமைப்பில் 1965-க்குப் பின்னும் ஆங்கிலம் நீடிக்கச் சட்டம் இயற்றலாம் என்றுள்ளது. இயற்றிய சட்டத்தில் ஆங்கிலமே இன்னும் 'பல' அல்லது 'இத்தனை' ஆண்டுகளுக்கு நீடிக்கும் என்ற தொடரோடு நிறுத்தியிருக்கலாம். அவ்வாறின்றி, இந்தியின் பயன்பாடு மிகுவதற்குச் சட்டம் இயற்றியது தவறு. இத் தவற்றைத் திருத்துவதற்கும் இடம் இருக்கிறது. 1963-ஆம் ஆண்டுச் சட்டம், அரசியலமைப்புத் திருத்தம் அன்று; பொதுவான சட்டமே. அதைத் திருத்துவதோ மாற்றுவதோ பெரிய வேலையன்று. மனம் இருந்தால் வழி பிறக்கும்.

○ ஆட்சி மொழிச் சிக்கல் நாட்டு நெருக்கடி; தமிழரின் நெருக்கடிமட்டுமன்று - தமிழர்களால் ஏற்பட்டதும் அன்று. இந்தி மொழியினரின் மொழிப்பற்றால் ஏற்பட்டது! இந்தியை ஆட்சி மொழியாக்கியே தீரவேண்டும், என்பது இந்திப் பகுதியை இந்தியாவிலிருந்தே பிரித்துவிடுங்கள் என்று சொல்வதற்கு நிகர். இந்தியை ஆட்சி மொழியாக்குவது இந்தி மொழியினருக்கும் நல்லதன்று. அது, நோயாளி தின்பண்டங்கட்கு வேட்கையுறுவது போன்றது. தேவை தின்பண்டமன்று, மருந்தே! வேட்கை வேறு; தேவை வேறு.

இந்தி. ஆட்சி மொழியாவதற்குரிய-சட்ட நுணுக்க விளக்கங்களைத் தெளிவாகத் தருகின்ற—அளவுக்கு வளரவில்லை. வெளிநாட்டினர்க்கு இந்தியமொழி ஒன்றைப் பொதுமொழியாகக் குறிப்பிட வேண்டாமா என்ற உணாச்

சிக்காக, பகட்டுக்காக நாட்டின் வளர்ச்சியைப் பலி கொடுத்தல் கூடாது. எண்ணம் ஒன்றாய் இருத்தலே தலையாயது. இதையே வெளிநாட்டினர்க்குக் கூறலாம், வெட்கப்பட வேண்டியதில்லை. வெட்கப்பட்டால், இந்தியாவை 10 அல்லது 18 துண்டுகளாக உடைத்தால் தான் வேறு வகையில் விடை சொல்லல் இயலும். இந்தி பேசுவோர் தொகை மொத்தத்தில் 40 விழுக்காடே! சுவிட்சர்லாந்தில் செருமன் மொழி பேசுவோர் தொகை 72 விழுக்காடு ஆயினும், அங்கு செருமன் மொழி ஒரே ஆட்சி மொழியாக இல்லை. ஆங்கிலமே பலருக்கும் தெரிந்தது. அதுவே நடுவண் ஆட்சி மொழியாக இருத்தல் முடியும். ''இந்தி ஒழிக'' என்னும் முழக்கம் தவறானதன்று. இந்தியை ஆட்சி மொழியாக்கும் ஏற்பாடு ஒழிக என்பதே அதன் பொருள். இந்திமொழி அதற்குரிய இடத்தில் நன்றாக வளரட்டும்; தடையில்லை.

○ தமிழ் நாட்டின் மீது இந்தியைத் திணித்தல் ஆகாது என்று கூறினால், எதிர் வழக்காடுபவர், இந்தி மொழியினர் மீது ஆங்கிலத்தைத் திணிக்க நமக்கு என்ன உரிமை என்று கேட்கலாம். மேலெழுந்த வாரியாக இது சரி போல் தோன்றும். ஆனால், ஆங்கிலம் புதிதாகப் புகுத்தப் படுவதன்று. ஏற்கெனவே இந்தியா முழுவதும் ஆட்சி மொழியாக இருந்தது; இருந்து வருவது. மற்றும், ஒற்றுமையை வளர்க்கப் பயன்பட்டது. சட்டவியல், அரசியல், அறிவியல் அறிவை வளர்க்கப் பயன்பட்டு வருகிறது. இதில் திணிப்பு என்ற பேச்சுக்கு இடமேது? ஏற்கெனவே இருப்பதைத் 'திணிப்பு' என்று எவ்வாறு கூறுவது? திரு. பக்தவத்சலம் ஆங்கிலத் திணிப்பு என்று கூறுவது பொருளற்றது.

—'தினமணி'

○ தென்னிந்தியாவில் சென்னை மாநிலத்தில் இந்தியை எதிர்த்து மூன்று இளைஞர்கள் தீக்குளித்தும், தற்கொலை செய்து கொண்டுமிருக்கின்றனர். திட்டமிட்டபடியே இந்தியாவின் ஆளுங்கட்சி இந்நாட்டின் 15–ஆவது குடியரசு நாளன்று இந்தியை ஆட்சி மொழியாக்கிக் கொண்டாட்டம் நடத்தியது. பண்டைய சமற்கிருதத்திலிருந்து உருவான இவ்விந்திமொழி வட நாட்டில் 19 கோடி மக்களால் பேசப் படுகிறது. அது நாட்டு மக்கள் தொகையில் 40 விழுக்காடாகிறது. தலைமையமைச்சர் இலால் பகதூர் சாத்திரியின் தலைமையிலுள்ள பேராயக் கட்சித் தலைவர்களின் மொழியாகவும் இந்தி உள்ளது. புதிய சட்டத்தின் படி இப்பொழுது ஆட்சி நடவடிக்கைகள் இந்தியில் நடத்தப் படல்வேண்டும். இந்தியைக் கற்பதன்மூலம் உயர்பதவியில்

நிலைபெற அரசு வழி செய்கிறது. ஆனால் தென்னிந்தியாவில் 11 கோடி மக்களுக்கும் மிகுதியானவர்கள் நான்கு திராவிட மொழிகளைப் பேசுகின்றனர். அவர்கள் இந்தியை எதிர்க்கிறார்கள், கலவரங்களும், தற்கொலைகளும் நிகழ்கின்றன. தென்னாட்டு மக்கள் கூற்றில் பொருள் இருக்கிறது. இந்தியர் 14 பெரும்பான்மை மொழிகளையும் 831 கிளை மொழிகளையும் பேசுகின்றனர். கல்வியறிவுள்ள இந்தியர்களின் உண்மையான ஒரே பொது மொழி ஆங்கிலம்தான். தென்னாட்டினருக்கு இந்தி வரிவடிவம் மாபெரும் இடையூறாகும். இந்தி எழுத்துக்கள் (நாகரி வரிவடிவம்) தொடர்ச்சியான வளைவுகளும் கோடுகளும், மேலே எழுந்து விரியும் உயிர்க்குறியீடுகளும் நிறைந்து மேற் கோடுகளுடன் எழுதப்படுகின்றன. தமிழ் எழுத்துக்களோ, எழில் நுட்பம் மிக்க சுருள்களும் வளைவுகளும் பொருந்தியவை. இந்தியை ஆட்சிமொழியாக்கக் கொணர்வதில் அலுவலர்கள் சொல்லொணாத் தொல்லையுற்றனர். தட்டெழுத்துக்கள் கிடைக்காமையால் அஞ்சல் போக்குவரத்தும் தடைப்பட்டது. இதற்கிடையில் தென்னாட்டில் புரட்சி கிளம்பியது. அரசினர் புரட்சியை அடக்க வன்முறையைக் கையாள்கின்றனர்.

– அமெரிக்க 'டைம்' ஏடு.

○ இந்தியாவைப் போன்ற ஒரு பெரிய நிலப்பரப்புக்கு ஒரு பொது மொழி தேவையா? ஒரே நாடு என்பதற்காக ஒரே பொது மொழி தேவை என்பது போலித்தனமான அரசியல் கொள்கை. இதனை அடிப்படையாக வைத்துக் கொண்டு செயல்புரிவது குதிரைக்கு முன்னே வண்டியைப் பூட்டுவது போலத்தான் ஆகும். தேசிய உணர்ச்சி உள்ளத்தைப் பொறுத்த செய்தி; உயிரைப் பொறுத்த செய்தி. ஒரே யொரு மொழியைப் பொறுத்ததன்று. ஆங்கிலத்தை இங்கிலாந்துக்காரரும் பேசுகின்றனர்; அமெரிக்கரும் பேசுகின்றனர்; ஆத்திரேலியரும் பேசுகின்றனர். ஆயினும் அவர்களெல்லாரும் ஒரே நாட்டினராயில்லை. வேறுவேறு நாட்டினராகவே இருக்கின்றனர். கனடா ஒரே நாடுதான்; சுவிட்சர்லாந்தும் ஒரே நாடுதான். ஆனால் இவை இரண்டிலும் வெவ்வேறு மொழி பேசுவோர் இருக்கின்றார்கள். எனவே ஒரே நாட்டு மக்களாய் இருக்க எல்லார்க்கும் ஒரே பொது மொழி வேண்டும் என்பது தேவை இல்லை.

இந்தியாவிலே பல மொழிகள் உள்ளன. அந்த மொழிகளுக்குள்ளே ஒன்றைமட்டும் ஆட்சிப் பொதுமொழி என்று அரியணை ஏற்றியதால், அன்றும்சரி இன்றும்சரி பிறமொழிக்காரர்களுக்கெல்லாம் வருத்தம்ஏற்பட்டுள்ளது. இந்தியாவின்

பன்மொழி வேறுபாடுகளினூடே ஊடுருவிப் பரந்து நிற்கும் ஒரே பரம்பொருளன்று இந்தி மொழி! அஃது ஒரு நாளும் மக்கள் எல்லாருக்கும் பொதுவான மொழியாக இல்லை. நம் தலைவர்கள் என்னதான் காரணங்கள் காட்டினாலும், சாக்குப் போக்குகள் சொன்னாலும், இந்தியை ஆட்சி மொழியாக்குவது-அவ்வாறு ஒரு சட்டம் செய்து கொண்டது-கட்டாயத் திணிப்பே! அஃது அறிவுடைமையும் ஆகாது; இந்தியாவின் ஒற்றுமைக்கு அது தேவையுமன்று; சுருக்கமாகக் கூறவேண்டுமானால் அது வேற்றுமைக்கே வித்தாகி இருக்கின்றது. ஒரே கொடி, ஒரே தேசியப்பாடல், ஒரே மொழி! ஒரே நாடாக இருக்க இவை வேண்டும்என்று கூறுகின்றனர்கள். இஃது அறிவுக்குப் பொருந்தும் தருக்கமன்று; வெறும் உணர்ச்சிக் கொந்தளிப்பு; அழகான கற்பனைக் கனவு; அவ்வளவுதான். நாட்டின் முழுமையான இசைவையும் பெறத்தக்கதாக எந்த இந்திய மொழியும் இல்லை; இஃது உண்மை! இந்த உண்மையை ஒப்புக் கொள்வதில் நாம் வெட்கப்படத் தேவையில்லை. உண்மை நிலையினை ஒட்டி அறிவுத் தெளிவோடு இச் சிக்கலைச் சமாளித்தல் வேண்டும். உணர்ச்சிப் பெருக்கும், இல்லாத உயர்வு நிலையைக் கற்பனை செய்து கொள்தலும் பயன்தரா. ஆங்கிலமே இச் சிக்கலுக்குச் சிறந்த தீர்வாகும். இதைக் கேட்டதுமே பலர் சீறிவிழல் கூடும். ஆங்கிலம் வேற்று மொழி; வல்லாட்சியின் அடையாளம்; அதைக் கற்பது கடினம்; அது தாழ்வு மனப்பான்மையை உண்டாக்கும் என்றெல்லாம் அளப்பர். இத்தனைக்கும் மருந்தாக இந்தியைப் புகுத்திவிட்டால், தேசிய ஒருமைப்பாடும் பெருமிதமும் கொண்டு இந்தியரெல்லாரும் வாழ்வராம்! இதிற் சற்றும் உண்மையில்லை.

'ஆங்கிலம் அயல் மொழி; அதனை மறந்துவிடல் வேண்டும்' என்பது முழு மடமை. ஆங்கிலம் உலகமொழி; இந்தியர்க்குள் ஒற்றுமை கூட்டியது; நம் பண்பாடு, அரசியல், பொருளியல், குமுகவியல் கல்வி அனைத்தினும் சில நல்ல மாறுதல்களைப் புகுத்தியது ஆங்கிலமே. நாம் ஏற்கெனவே கற்றுவிட்ட இந்த அரிய மொழியை மறக்க முயல்வது பெரும் பேதைமை. உலக நாடுகளின் வரலாற்றில் இத்தகைய பேதைமையை எதிலும் காண முடியாது. ஆங்கிலேயரின் வல்லாட்சியினின்று இந்தியா விடுபடல் வேண்டும் என்பது வேறு; ஆங்கில மொழி அறிவினின்று இந்தியர் விடுபடல் வேண்டும் என்பது வேறு; இரண்டும் ஒன்றாகா. இவ் வேறுபாட்டை அறியாமல் இரண்டும் ஒன்றே என மயங்குபவர், எச் சிக்கல் குறித்தும் பேசத் தகுதியில்லாதவர். நமது கல்வியில் ஆங்கிலம்

இடம் பெற்று, அக் கல்வியின் தரம் உயர உயர இந்திய மொழிகளின் தரம் குறைந்துகொண்டே போய்விடும் என்று சிலர் கூறலாம். அவ்வாறுயின், இந்தியைப் பொதுமொழி யாக்கினுல் வேறு மொழிகட்கெல்லாம் கேடு ஏற்படாதா? பல்துறை, அறிவுத் துறை, அறிவியல் துறை முதலிய அனைத்துத் துறைகளிலும் செம்மையாய்க் கருத்தறிவிக்கும் வளம் பெற்ற மொழி ஆங்கிலம்-என்பதனுல் மட்டும் ஆங்கி லத்தை நாம் ஏற்கவில்லை. இன்று அரசியல் துறையில் ஏற்பட்டுள்ள பெருங் குழப்பங்கட்கும், சிக்கல்கட்கும் சரி யான தீர்வு ஆங்கிலத்தைப் பொதுமொழியாகக் கொள்வது தான் என்றே கூறுகின்றோம். இந்தித் திணிப்பால் இந்தி பேசாத மக்கள் பெரும் ஐயங்கட்காளாகின்றனர். 'ஆசியா வில் பொது நலக் கூட்டுறவு' என்ற சொற்பொழிவுத் தொடரில் 1949-ஆம் ஆண்டு ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்தில் சர். இவார் சென்னிங்சு எனும் அறிஞர் இது பற்றிக் கூறுகின்றார்:– "இந்தி பொதுமொழியாகும்பொழுது என்ன நிகழும்? ஆங்கிலம் பேசுவார் இன்று எவ்வாறு மேலோங்கி நிற்கின்றனரோ, அவ்வாறே இந்தி பேசும் வடநாட்டினர் மேலோங்கி நிற்பார். ஆங்கிலமாவது எச் சார்பும் இல்லாமல் இந்தியர் அனைவர்க்கும் நடுவு நிலை மொழியாகவுளது. இந்தியோ சிலருக்கு மட்டும் சிறப்புச் சலுகைகளை அளிக்கும்; இது, பிறருக்குக் கசப்பூட்டும். அரசியல், குமுகவியல், பொருளியல் முதலிய அனைத்துத் துறைகளிலும்ஒருவரை யொருவர் காலை வாரிவிட முயன்று கொண்டிருக்கும் இன்றைய இந்தியாவில் இவ்வையப்பாடு அடிப்படை இல்லாத தன்று. இன்று உண்மையாகவே ஆகிவிட்டது. உணர்ச்சி அடிப்படையில் ஒருமைப்பாடு காண நம் நாட்டுத் தலைவர்களும், அறிவாளிகளும் முயலப் போகின்றனராம்! அதற்குமுன் இம் மொழிப் பூசலின் அரசியல் கூறுபாடுகளை அவர்கள் கூர்ந்து கவனித்தல் வேண்டும். பொய்யான அடிப்படையைத் திருத்திக் கொள்ளாவிடின் அதனைக் கொண்டுபுரியும் செயல்கள் அனைத்துமே பொய்த்துப் போம். மொழிப்பூசல் எனும் இந்நோயை முழுவதும் தீர்க்க வழிகாண்பதே அறிவுடைமை. அவ்வப் பொழுது மனம் போன போக்கில் தோன்றும் வழிகளைக் கையாண்டு தற்காலிக அமைவுகள் செய்வதில் பயனில்லை.

—Indian Review, Feb. 64.

○ "அப்படியென்ன புதிதாக நடந்துவிட்டது இன்று? இந்தி ஆட்சி மொழயாக வேண்டும் என்பது 1950 இலேயே ஏற்கப்பட்டு அரசியல் சட்டத்தில் புகுத்தப்பட்டதுதானே? இப்பொழுது ஏன் இந்தப் பரபரப்பு? புரியவில்லையே"

—தில்லியில் உள்ளவர்களின் புதிய பல்லவியாகியிருக்கிறது, இது! பலரும் பலவகையாகப் பேசித் தங்கள் நிலையைத் தாங்களேதாம் தில்லிக்காரர்கள் புரியாமல் செய்து கொண்டிருக்கின்றனரே தவிரத் தென்னகத்தின் விருப்பம் என்ன என்பது, அன்று முதல் இன்றுவரை தெளிவானதேயாகும். நாம் விரும்பும் வரை இணைப்பு மொழியாக ஆங்கிலம் நீடிக்க வேண்டும். இவ்வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்துவது தேவை என்பதே அது. தேவையில்லாததற்கெல்லாம் அதைத் திருத்தியிருக்கும் பொழுது நம் அச்சத்தை அகற்றும் பொருட்டு மாற்றுவதற்கு இனியும் மறுக்க முடியாது. இந்திக்காரர்களின் வெறி வரவர வலுக்கிறது. இன்று பதவியில் இருப்பவர் நாளையும் இருப்பர் என்று எண்ணவோ உறுதியில்லை. இந்த நிலையில் சட்டந்தான் நம்மைக் கட்டிக்காக்க முடியுமே தவிர பேச்சன்று என்பது உறுதி. நேற்று அளித்த உறுதி மொழிகளைத் தாங்களே உதறி விட்டவர்கள் இன்று புதிதாக எத்தனை வாக்குறுதிகளை வாரி வழங்கிய போதிலும் எவர்தாம் எப்படித்தான் நம்புவது? ஆகவே இவற்றையெல்லாம் நடுவணரசுக்கு இடித்துரைத்து அரசியல் சட்டத்தைத் திருத்தும்படி வற்புறுத்தச் சென்னை அரசினர் இனியும் தயங்குதல் கூடாது.

—சுதேசமித்திரன்.

○ அதிகாரத்திலுள்ளவர்கள் ஆட்சி மொழியைப் பொறுத்தவரை தென்னக மக்களின் உணர்ச்சிகளோடும், கவலைகளோடும் எந்த அளவுக்குத் தொடர்பற்றுப் போயிருக்கின்றனர் என்பதையே கடந்த சில நாட்களில் நிகழ்ந்த வருந்தத்தக்க நிகழ்ச்சிகள் காட்டிவிட்டன. இச்சிக்கலுக்கு ஒரு நல்ல தீர்வு காண நேரு போன்ற நல்லெண்ணம் படைத்தார் ஆண்டுக்கணக்காக முயன்றுவந்த வேலை அனைத்துக்கும் தாங்கள் உலைவைத்துக் கொண்டு வருவதையும் அவர்கள் உணர்கின்றிலர். 1963-ஆம் ஆண்டுச் சட்டம் நாட்டுமொழிகள் பலவற்றுள் ஒன்றை மட்டும் உயர்த்தக் கருதுவது எத்தகைய வழியிலும் நிறைவளிக்காத செயல் என்பதை மறைமுகமாகக் ஒப்புக்கொண்டதுடன், ஆங்கிலமும் இந்தியோடு தொடர்ந்து ஆட்சிமொழியாக இருப்பதற்கு வகை செய்தது. இவ்வுடன்பாடே இந்தி பேசாமக்கள் மேற்கொண்ட ஒரு பெரிய ஈகச்செயலாகும். ஆதலின் இவ்வுடன்பாடு நிறைவேறுவதென்பது, அஃது எப்படிச் செயல்படுகின்றது என்பதையும், அதனுல் தாக்குறப் பெறுவார்க்கு அஃது எந்த அளவு விட்டுக் கொடுத்தலை ஈடு செய்கின்றது என்பதையும் பொறுத்ததேயாகும்.

இந்தி எதிர்ப்பு வலுவடையக் காரணம் நடுவணரசு இவ்வுடன்பாட்டைச் செயல்படுத்துவதில் நடந்துகொண்ட முறை, அவர்கள் நல்லெண்ணம் கொள்ளவில்லை என்ற அச்சத்தைத் தென்னகமக்களிடையே ஏற்படுத்தியதுதான். இவ்வச்சம் முற்றிலும் சரியானதே. ஆட்சியாளர் ஆங்கிலத்தை விரைவில் தொலைத்துக் கட்டுவதன் மூலம் இந்தி பேசும் மக்கட்கு இந்தி பேசாதாரினும் மிகுதியான நலன்கள் ஏற்படும் வகையில் முறையற்ற விரகுகளைக் கையாள விரைந்தனர். செய்தித்துறையினின்று இந்தியின் பயன்பாடுபற்றி வெளிவந்த ஓர் அறிக்கை, ஆட்சிமொழிச் சட்டம் ஆங்கிலத்தை முற்றிலும் ஒழித்து இந்தியைத் திணிப்பவர்கட்கு ஒரு திரைமறைப்பாகப் பயன்படுவது, என்பதையே காட்டியது.

நடுவணரசுத் தேர்வுகட்கும் இந்தியே இருக்கும் என்று தெளிவாகியது. தென்னக இளைஞர் இந்தியைக் கற்பினும் இந்திக்காரருடன் போட்டியிடுவது மிக அரிது. இந்தி கட்டாயம் இல்லை; விரும்பாவிட்டால் படித்தல் வேண்டாம் என்று கூறப்படுவது பொருந்தாது. ஏனெனில், ஆங்கிலத்துக்கும், இந்திக்கும் ஒத்த மதிப்புக் கொடுத்தாலன்றி. இந்தி ஆட்சிமொழியாகிவிட்ட பொழுது, அதைப் படித்துத்தான் ஆகல் வேண்டும் என்ற நிலை ஏற்படும். ஆதலின் தென்னகமக்கள் அரசியல் சட்டத்தையே திருத்த விரும்புகின்றனர். அரசியல் விழிப்புடனும். உண்மையுடனும், நம்பிக்கையுடனும் இரு மொழிகளும் ஆட்சிமொழியாக என்றும் நிலைத்திருக்க அரசு முனையாவிடின் பெருகி வரும் உணர்வு கொந்தளித்தல் கூடும். உதட்டளவில் பேசிவிட்டால் மட்டும் போதாது.

ஆங்கிலம் நடுவண் ஆட்சிமொழியாக எத்துணைக் காலம் நீடித்தல் வேண்டும் என்பதை முடிவுகட்ட வேண்டியவர் இந்தி பேசாத மக்களே. ‘இஃது அவர்கட்கு மட்டும் அன்று; நாடு முழுவதற்குமே நலன் தருவதாகும். நடுவணரசோ, அன்றி அங்குள்ள ஏதாவதோர் அமைச்சகமோ, இந்திபேசா மக்கள் விரும்பும்வரை ஆங்கிலம் நீடிக்கவேண்டும் என்பது ஒன்றும் கட்டாயமில்லை என்பது போல் பசப்பித்திரிவது ஏற்புடைத்தன்று. அஃது அவர்கள் வேலையுமன்று. இதுவே ஆட்சிமொழிச் சட்டத்தின் உட்கோள் இந்தி எங்கெல்லாம் பயன்படுகின்றதோ அங்கெல்லாம் ஆங்கிலமும இணையாகவோ, துணையாகவோ பயன்படுத்தப் பெறல் வேண்டும். அப்பயன்பாடு நீடித்திருக்கும் என்பதுவே 63-ஆம் ஆண்டுச் சட்டத்தின் திட்டமாகும். இதுவரை ஆங்கிலம் பயன்பட்டு வந்த

இடங்களினின்று அதைத் தூக்கி எறிந்து விடுவதற்கு இச்சட்டத்தை ஒரு தலைக்கீடாகக் கொள்ளும் வகையில் அதற்குப் பொருள் கற்பித்துக் கொள்வது, முன்னைய உறுதிமொழிகளை இழிவுபடுத்தல் மட்டுமாகாது; எத்தகைய பெரும் பிளவுகள் ஏற்படல் கூடாது என்று அவ்வுறுதி மொழி வழங்கப்பட்டதோ, அத்தகைய பெரும் பிளவுகளையே ஏற்படுத்துவதும் ஆகும். நடுவணரசின் சூழ்ச்சிகளும், சாத்திரியாரின் மழுப்பற் பேச்சுகளும் இவ் வச்சத்தையே மிகுதிப் படுத்துகின்றன. சிறிதும் ஒதுக்கிடம் வைக்காமல் ஆட்சிமொழிச்சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப் பெறல் வேண்டும். கொஞ்சம் இடம் வைத்ததாலேயே இந்தி வெறியர்கள் அதற்குள் புகுந்துகொண்டு குழப்பமும் சூழ்ச்சியும் விளைவிக்க நேர்ந்தது. தலைவர்களும், தென்னகமக்களின் ஒப்புகளைப் பெற்றுப் போய் உட்கார்ந்திருக்கும் பேராட்களும் அத்தகைய குறுக்கீடுகளை விலக்கிச் சட்டத்தை நிலைபெறச் செய்தல்வேண்டும். ஆனால் இவர்களே அதற்கு மனம் வையாமலிருப்பது தான் தொல்லைகட்குக் காரணம். எனவே, 63-ஆம் ஆண்டு ஆட்சிமொழிச் சட்டம் போதாது. அதற்குமேலும் வேறு ஏதாவது செய்தாகல் வேண்டும் என்றநிலை ஏற்பட்டு விட்டது. இதற்குக் கட்சிவேறுபாடு கடந்து அனைவரும் ஒன்று கூடல் வேண்டும். இந்திபேசும் மக்களிடத்தில் பேசும் வாய்ப்பும் செல்வாக்கும் உடையவர்கள், இங்குள்ள நிலையை அவர் கட்கு எடுத்து விளக்க வேண்டியதும் இன்றியமையாத தாகும். தென்னக மக்கள் இந்தியை நடுவண் ஆட்சி மொழியாக ஒப்பினரே! அதுவே அவர்கள் எந்த அளவு ஈக உணர்வுடனும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை யுடனும் நடந்து கொண்டிருக்கின்றனர் என்பதைக் காட்டு கிறதே! இதை இந்திக்காரர்க்கு எடுத்துக் கூறல்வேண்டும். அதற்குக் கைம்மாருக அவர்கள் செய்ய வேண்டுவது ஆங்கிலத்தையும் இணைமொழியாக ஒப்புக்கொள்வதுதான் என்பதையும் கூறல்வேண்டும்.

கடந்த சில நாட்களில் பெருங்குழப்பங்கள் நடந்த பொழுதிலும் நடுவணாட்சியைக் கைப்பற்றிக் கொண்டிருக் கும் அப் பெரியார்கள் சற்றும் இறங்கி வந்துள்ளதாகத் தெரியவில்லை. நேருவின் உறுதிமொழியை நிறைவேற்று வேன் என்று சாத்திரியார் வாக்குக் கொடுத்த பொழுதிலும் அதை நம்ப முடியவில்லை. அதனை நிறைவேற்றும் எண்ணம் உண்மையிலேயே இருந்தால் அதனைச் சட்டத் தின் உருவில் கொண்டு வருவதற்கு ஏன் தயக்கம்? நேரு 1959-இல் அவ்வுறுதி மொழியினை அளித்தார். 63-இல்

இந்தியின் தகுதி என்ன?

– தரங்கை, பன்னீர்ச்செல்வன்.

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், மராத்தி, குசராத்தி, அசாமி, வங்காளம், ஒரியா, இந்தி, காசுமீரி, பஞ்சாபி, உருது, சமற்கிருதம், ஆகிய பதினான்கு நாட்டக மொழிகளையும், 845 கிளை மொழிகளையும் (Dialects) கொண்ட இந்தியத் துணைக் கண்டத்திற்குப் பதினான்கில் ஒன்றாகிய இந்தியைப் பொது மொழியாக்குவது எவ்வாறுசாலும்? அப்படி என்ன தகுதியும், சிறப்பும் இந்தியிடம் இருக்கின்றன? இதற்குக் கூறப் பெறும் விடை இந்தி பெரும்பான்மையோரால் பேசப்படும் மொழி என்பதாம். அதைச் சற்று ஆய்வோம். 'உத்தரப் பிரதேசம்', இராசத்தான், 'மத்தியப்பிரதேசம்', பிகார் ஆகிய நான்குமா நிலங்களில் மட்டுமே இந்தி எனக் கூறப்படும் எண்பது வகையான மொழிகள் பேசப்படுகின்றன. ஒரு வகை மொழியிற் பேசினால் மறுவகை மொழிக்காரருக்குப் புரிவது எளிதன்று. பங்காரு, அவதி, போச்புரி, மகதி, மைதிலி, பண்டேலி, கன்னோவ்சி, பிரச்பாசா, கடிபோலி, மார்வாடி, மேவதி, செய்புரி, சோத்புரி என்பன அவற்றுள் குறிப்பிடத் தக்க வகைகள்.

இன்று இந்தியாவின் மொத்த மக்கள் தொகை 48 கோடி எனக் கொண்டால், இந்தி என்னும் பொது வகையின் கீழுள்ள

(முன்பக்கத் தொடர்ச்சி)

அதனைச் சட்டமாகக் கொண்டுவர முயன்றபொழுது, அத்துணைப் பெரிய நேருவே இந்தி வெறியர்களின் அழுத்தத்தாலும் நெருக்கத்தாலும் குழப்பமுற்று, அஃது உறுதிமொழியன்று, என் தனிப்பட்ட கருத்தே என்று மழுப்ப நேர்ந்ததே! எனவேதான் திரு. சாத்திரியாரின் பேச்சு மட்டும் தென்னக மக்கட்குப் போதாது. சட்டத்திலேயே மாற்றம் செய்தாகல் வேண்டும். வடவர் இதில் விட்டுக்கொடுக்காமல் நடந்து கொள்வது நாட்டின் ஒருமைப்பாட்டுக்கே பெருந் தீங்கு விளைவிக்கும். தென்னக மக்கள் எவ்வளவோ விட்டுக் கொடுத்திருக்கின்றனர். இந்தியைப் போன்றதொரு வட்டார மொழி ஆட்சி மொழியாவதினும் தங்கள் தாய் மொழியே நடுவண் ஆட்சி மொழியாதல் வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தியிருந்தால் அதுமுற்றிலும் முறையானதாகவே இருந்திருக்குமே! அவர்கள் அவ்வாறு செய்யவில்லையே! இந்திக்குத் தனி மதிப்பு அளிப்பதென்பது ஒற்றுமையைப் பலியிடுவதாகும். இச்சிக்கலில் தீர்வுகாண மக்கள் அனைவர் கருத்தும் தேவை. முதலமைச்சர்கள் மாநாடு மட்டும் எதனையும் செய்துவிடல் முடியாது.

– 'இந்து' நாளிதழ்.

மொழிகளை மட்டும் பேசும் மக்கள் 13 கோடிக்கும் குறைவே. இதுதான் பெரும்பான்மையா? இதில் தில்லியிலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பேசப்படும் 'கடிபோலி'தான் ஆட்சிக் களம் புகப்போகும் இந்தி! இதனைமட்டும் பேசுவோர் ஏறத்தாழ இரண்டு கோடிப் பெயரேயாவர். இத்தகைய இந்திகூட இந்தியாவுக்கே உரியதுதானு என்பதிலே மொழி நூலறிஞர்கட்கு ஐயம் ஏற்பட்டுள்ளது. "இந்தி" எனுஞ் சொல்லே அரபு மொழிச் சொல்லாம். அன்றியும், பிராகிருதம், சமற்கிருதம், போன்ற இந்திய மொழிச் சொற்களைவிட, பாரசீகச் சொற்களும், அரபு மொழிச் சொற்களுந்தாம் இந்தியில் நிறையக் கலந்துள்ளனவாம் இந்தி 13-ஆம் நூற்றுண்டில்தான் தோன்றியது. கி. பி. 1803-இல்தான் உருப்பெற்றது. கி. பி. 1850-இல்தான் இலக்கணமே வகுத்துக்கொண்டது. முதல் இலக்கியம் எனக் கூறிக் கொள்ளக் கூடியதே 'துளசி தாசரின் இராமாயணம்' தான்! அவ்வொரே இலக்கியங்கூடக் 'கடிபோலி'யில் இல்லை; 'அவதி' யில் இருக்கிறது. இந்தியில் வேர்ச் சொற்கள் என்பனவோ மிகமிகச் சிலவாம். அறிவியல் (Science) துறையில் ஆங்கிலத்தின் ஆற்றலை, வேர்ச்சொல் அருகிய இந்தி பெற்று, வாழ்வுறுவது எஞ்ஞான்று?

தமிழ்ப் பற்றுள்ள நன்மக்கள் பலர், 'இன்று ஆங்கிலம் இருக்கும் இடத்திற்குத்தானே இந்தி வருகின்றது. இதனால் தமிழுக்குத் தீங்கியாது?' என வினவுகின்றனர். ஆங்கிலம் உலகப் பொது மொழி. ஆங்கிலத்தில் தோன்றாத துறையே இன்று இல்லை எனலாம். அவற்றை அறிந்துகொள்ளும் வாய்ப்பை அண்மையில்தான் தமிழர் பரவலாகப் பெற்று வருகின்றனர். அவ்வாய்ப்பெல்லாம் இந்திக்குப் போய்விட்டால் இன்னும் பல தலைமுறையினர் மேனாட்டுக் கலைகளை அறியாது மயங்கி மாழ்குவர். தமிழைப் போலவோ, ஆங்கிலத்தைப் போலவோ வளமில்லாத வறண்ட இந்தி மொழியால் என்ன பயன்? அதன் துணையால் அமைக்கப்படும் ஒற்றுமைப் பிணைப்பு எத்துணை வலிவுள்ளதாக அமையும்?

அன்றியும், மொழியாக்கம் செய்தற்கு வேண்டிய கலைச் சொற்கள் இந்தியில் இன்மையால், அவ்வப்பொழுதையத் தேவைகளை ஆங்கிலத்தைக் கொண்டே, ஆங்கிலச் சொற்களை இந்தி எழுத்துக்களில் எழுதியே நிறைவேற்றிக் கொள்ளுகின்றனர். காட்டாகப் பல உள. அவற்றுள், "POST-CARD" என்பதும் ஒன்று. இதை அப்படியே இந்தி எழுத்தில் எழுதிக் கொள்ளுகின்றனர். இவ்வாறு பன்னூறு ஆங்கிலச் சொற்கள் உரு மாருமலே இந்தியால் ஏற்கப்பட்டுவிட்டன. இவ்வாறு இந்தி படித்து ஆங்கிலத்தைக் கற்பதைவிட நேரடியாகவே ஆங்கிலத்தை ஏற்றுக் கொள்ளலாமே! இம்மட்டோடில்லை;

இந்தியா முழுமைக்கும் இந்தி வரிவடிவம் (தேவ நாகரி) வழக்கிற்கு வரப் போகின்றதாம்! நம் உள்ளத்து உணர்ச்சிகளெல்லாம் இந்தி வடிவில் வடிக்கப் பெறுதல் ஆண்டைகளுக்கு ஏற்புடைத்தாகுமாம்! தொல் காப்பியத்தைத் 'தோல் காப்பியம்' ஆக்கும் பணி இருபதாம் நூற்றாண்டில் நிகழப் போகின்றதாம்! நடை, ஒலியமைதி, அமைப்பு, மொழித்திறன் ஆட்சி மரபு, கிளவியாக்கம், சொற்புணர்ச்சி முறை, உருபுகளின் நுட்ப ஒட்ப அமைப்பு, பொருளுணர்த்தும் ஆற்றல், வேர்ச் சொல் வளம் என்பன திட்ட வட்டமாக வரையறுக்கப்பட்ட தமிழை, அதனைத்த ஆற்றலும், அதனினும் மிகுந்த புத்திலக்கியச் செறிவும் அமையப் பெற்ற ஆங்கிலம் மேம்படுத்தியது. ஒன்றுமில்லா இந்தி, உருப்படாத் தலைமை யேற்றால் எவ்வாறு பிற இந்திய மொழிகள்—சிறப்பாக, தமிழ் வளர இயலும்? ●

இந்தித் திணிப்புத் தொடர்பில்
'இந்து' இதழில் வந்துள்ள மடல்கள் சில:

இந்தி திணிக்கப்படவில்லை என்கின்றனர். ஆங்கிலேயர் காலத்தில் ஓரணா இரண்டணா நாணயங்களில், அவற்றின் பெயர்கள் வட்டார மொழிகளிற் பொறிக்கப்பட்டிருந்தன. இப்பொழுதோ இந்தி தவிர வேறு மொழிகள் நாணயங்களினின்று நீக்கப்பெற்றுவிட்டன. அதோடு, அரசியற் சட்டத்தின்படி உலகப் பொது எண் குறிகளையே பயன்படுத்த வேண்டுமென்றிருந்தாலும், அஞ்சல் உறைகளில் தாட்களில் எல்லாம் இந்தி எண்களே பயன்படுத்தப் பெறுகின்றன. இவையெல்லாம் திணிப்பில்லையா? —கே. வி. கிருட்டிணன், உதகமண்டலம்.

மாணவர்களைச் சமாளிக்க நேரும் நம் காவல் துறை அதிகாரிகள் நகையுணர்வு சற்றும் இல்லாதிருக்கின்றனரே! 1940–ஆம் ஆண்டு திசம்பர் 13-ஆம் நாள், நான் அண்ணாமலையில் பயின்று கொண்டிருக்கையில், மாணவர்கட்கும் காவலர்கட்கும் ஒரு மோதல் ஏற்பட்டது நல்ல உடற்கட்டுடைய அக்கால மாணவர்கள் 'ஆக்கி' மட்டைகளைச் சுழற்றிக் கொண்டு காவல் துறை மாவட்ட அதிகாரியான திரு. மிடில்டன் (Middleton) என்பாரை வளைத்துக் கொண்டனர். மற்றொரு புறம் திரு திரசுகாட் (Truscot) என்பாரை மாணவர் கல்லால் எறியலாயினர். அவரோ, ஒவ்வொரு கல்லையும் விளையாட்டுப் பந்துபோல் கருதி, அமைதியாகக் கையாற் பிடித்துப் போட்டுக் கொண்டேயிருந்தார். இருவரில் ஒருவர்கூடத் தாங்கள் வைத்திருந்த கைவேட்டெஃகங்களைப் பயன்படுத்தி மாணவர்களைச் சுட்டனரில்லை. பின்பு 1945–இல் மதுரையில் மிடில்டன் அவர்பால் இதுபற்றிப் பேசிய பொழுது, அவர் தோளைக் குலுக்கிப் புன்னகை புரிந்தார்! அவர்கள் உள்ளம் அகன்றது. அவர்கட்கு எதுஎது எப்படிச் செய்யப்படவேண்டும் என்று தெரிந்திருந்தது.

—ஓ. ஏ. வேங்கடராமன்.

மாணவ நெஞ்சங்களின்

உயிர்த் துடிப்புகள்......!

(சனவரி 26-க்குப்பின் இந்தித் திணிப்பை எதிர்த்து மாணவர்கள் ஆங்காங்குப் பொங்கி எழுந்தனர். அவர்கள் நெஞ்சக் கொதிப்புகள் அறிக்கைகளாக வெளிவந்தன. அவ்வறிக்கைகள் மாணவர்தம் இள உள்ளங்களில் ஏற்பட்டிருந்த தாய்மொழிப் பற்றையும், அதற்கென உயிரையும் தூசாகமதிக்கும் மறவுணர்வை யும் புலப்படுத்தின. அவ்வறிக்கைகளில் கண்ட எழுச்சியான சொற்களும் சொற்றொடர்களும் கோழைகளையும் நிமிரச் செய்தன. தமிழ்ப் பற்றற்றவனையும் தமிழ்ப் பற்றுள்ளவனாகச் செய்தன. அவற் றுள் சில....)

● இந்தி தமிழ் மொழிக்கும், தமிழர்தம் பொருளியல் வாழ் வியல் முன்னேற்றத்திற்கும் பேரிடியாகுமென்பதை, அறியாமை இருள் சூழ்ந்த தமிழகத்தின் எளிய பொதுமக்கள் பலர் உணர்ந்து கொள்ளவில்லை......இந்தித் திணிப்புக் காரணமாக எண்ணற்ற தொல்லைகளை அடையப் போகிறவர் முதலில் மாணவர்களே. தமிழின் இருண்ட எதிர்காலம் எங்கள் நெஞ்சுகளில் ஈட்டிகளைப் பாய்ச்சுவதாக ஆகிறது. தேடிக் கிடைத்தற்கரிய தேன் தமிழைப் பாடிக்களித்துப் பாமாலை சூடி மகிழ்ந்து கொண்டாடி, ஏத்தும் எம்பெருந் தமிழை இழந்து வெற்றுடல்களாக-பிணங்களாக வாழ்வதைவிட உயிரை யீந்தும் தமிழைக் காத்து உரிமையை நிலை நாட்டுவதையே எங்கள் கடமை என மாணவர்களாகிய நாங்கள் ஆழ்ந்த கருத் துக் கொண்டுள்ளோம். தமிழ் வாழல் வேண்டும்; வளம்பெறல் வேண்டும்; தமிழ் நாட்டில் பேச்சும் எழுத்தும் ஆட்சியும் அற மன்ற அலுவல்களும் கல்லூரிப் பயிற்று மொழியும், முற்றுந் தமிழாதல் வேண்டும். இணைப்பு மொழி, பொது மொழி, ஆட்சி மொழி, பயிற்றுமொழி எனும் தகுதியும் இந்திக்கு அளிக்கப்படு தல் தமிழை அழிக்கும் பகைச்செயலாகும்! இவற்றைக் கண்டும் உணர்ந்தும் அறிந்தும் மாணவர் குமுகாயம் கொதிக் கின்றது; குமைகின்றது; குமுறுகின்றது...... மாணவர் எழுச்சி இன்று நாளையோடு நின்றுவிடாது. முதல் படியில் கால்வைக் கின்றோம்; இந்தி பின்வாங்கும்வரை எங்கள் குருதிக் குழல்களில் உயிரோட்டம் உள்ளவரை நில்லோம்; எங்கள் நினைவெல்லாம் தமிழ்! நெறியெல்லாம் தமிழ் நெறி! நெஞ்செல்லாம் தமிழின் நினைவு......!

● தாய்த்தமிழின் நலம்மறந்தாய்; தன்மானம்
தனைவடக்கே அடகு வைத்தாய்!
ஏய்த்துனது தொண்டையிலே இந்தியினைத்
திணிப்பவர்தம் இடுப்பொடிக்க

வாய்ப்பிழந்து போய்விட்டாய்! வடவரிடும்
சோற்றுக்கு வாய் பிளந்தாய்!
நாய்த்தமிழா! உன்றனுக்குப் பொங்கல்விழா
ஒருகேடா? வெட்கக் கேடே!

முடிச்சவிழ்க்கும் பார்ப்பனர்தாம் இந்திக்கு
முன்றானை விரித்தா ரென்றால்,
குடிச்சிறந்த தமிழருமா குலவுவது;
தமிழ்மானம் என்னா யிற்றோ?
கடித்துவிட்ட வெறிநாயைக் கடிப்பதுதான்
முறைகேடு; செருப்பெ டுத்தே
அடிப்பதுமா தவறாகும்? ஆளுக்கோர்
தடியெடுப்பீர் இந்திப் பேய்க்கே!

● இரக்கமற்ற வன்னெஞ்சர்களே, இதோ எங்கள் உள்ளத்திலிருந்து எழும் செந்தீ உங்களை எரிப்பதற்கு முன் உங்கள் சட்டத்துக்குப் பாடை கட்டுங்கள்! மாணவ நண்பர்களே, மறத்தமிழ் மடங்கல்களே, சோற்றுத் துருத்திகளாய்ச் சோம்பி அழியாதீர்கள்! தூங்கியது போதும்! துள்ளி எழுங்கள்! தாய் தமிழுக்குப் போராட எழுந்துவிட்டோம். உயிர் எங்களுக்கு வெல்லமில்லை!

● தமிழகம் மறத்தின் இருப்பிடம். மொழிகாக்கும் சிறப்பிடம். வெந்தீயில் மாண்ட தமிழ்மடங்கல் சின்னச்சாமியையும், உடல் மண்ணுக்கெனவும் உயிர் தமிழுக்கெனவும் அஞ்சாது சாவை அணைத்த அரங்கநாதனையும், சிவலிங்கம் போன்ற அரிமாக்களையும், பள்ளிப்பருவ இளங்காளையாம் இராசேந்திரன் போன்ற ஈகச் சுடர்களையும், இன்னும், தமிழ் வாழ நாம் வாழ்வோம், தமிழுக்கு இழுக்கென்றால் எங்களை இழக்கவும் அணியம் என்று மற முழக்கமிடும் செம்மல்களையும் உடையது தமிழகம். தமிழைப் பழித்தால் வீறுகொண் டெழுவோம் இந்த மாணவர் குமுகாயம் மயங்காது தமிழ்நாடு, எங்கள் தாய் வீடு! தமிழ்ப் பற்று எங்கள் பண்பாடு! இதை அறியாத இந்தி வெறியனே, நீ ஓடு! ஓடு!

● மொழி அனைவருக்கும் பொது. இதிற் கட்சி வேறுபாடுகட்கு இடமில்லை. தமிழ் நம் உயிர்! புறப்பற்றுகளை அறுத்தெறியுங்கள்! போலி வாழ்க்கையை உதறி எழுங்கள்! தமிழ் விடுதலைக்குப் புறப்படுங்கள்! உண்ணா நோன்பெதற்கு? காந்தியடிகளோடும், இரக்க உள்ளம் கொண்ட வெள்ளையனோடும் அவ்வறச் செயல் மறைந்துவிட்டது. அரக்கர் ஆட்சியில் அதற்கிடமேது? மறத் தமிழ் உணர்வாளர்களே ஆர்த்தெழுங்கள். அரசியல் தெளிவில்லாத பேயடிமைகளின் விலா எலும்புகள் நொறுங்கட்டும். உடல் நார்நாராகப் பிய்த்தெறியப்படட்டும்!

இந்தி உருவை எரியுண்ணட்டும். இனி எம் மொழியும் என்றும் இங்கு வாலாட்டாமல் இருக்கச் சட்டம் செய்வோம் தமிழ னுக்குப் பிறந்தவனைத், தமிழ் அறிவு உள்ளவனைத் தலைமை அமைச்சாய் வைப்போம்! கொதித்தெழுங்கள்!

● நம்மைத் தமிழ் உணர்ச்சிக்கடலில் தள்ளிய பாவேந்தர் நம்மிடம் இல்லை. ஆயினும் அவர் தந்த பாட்டுணர்வு மாணவர் பட்டாள அணியைக் களங்காண வைத்துவிட்டது. தடியடி, கண்ணீர்ப் புகை, வேட்டெஃகம் அனைத்தும் தூள்! தூள்! வழிவழி வந்த மறத்தனம் அது! குருதி கொட்டி, நாடோடி மொழியை விரட்ட அணி திரள்க!

● இந்தி ஆட்சி மொழியாவதனுல் பெரிதும் தீங்குறப் பெறுபவர் தென்னுட்டவராகிய நாமே! இந் நேரத்தில் வாளா விருப்பின் நம் மனச்சான்றே நம்மைக் கொல்லும்; எதிர்கால வரலாற்றிலும் கறைபடியும். இக்கறை நம்மால் ஏற்படல் வேண்டா. தமிழ் மாணவராகிய நாம் எழுப்புகின்ற பெருங்குரல் இந்தி வெறி வல்லாட்சியினர் செவியைக் கிழிக்கட்டும்! நாம் இவ்வாறு குரல் எழுப்புவது, பிற மொழியின் மீதுள்ள வெறுப் பால் அன்று. பிறமொழி நம்மீது ஏறிச் செலுத்தும் வல்லாண்மை யினையே நஞ்செனெ வெறுக்கின்றேம். நம் அன்னை மொழி தமிழை வாழ வைத்தலே நம் நோக்கம். குல, சமய, கட்சி வேறுபாடின்றி இன்றே புறப்படுங்கள்!

● தமிழ் மகனே! அரிமாவே! மொழி போனபின்னும் பழி கொண்ட வாழ்வுபெற நீ கூளியல்லன்! உன்னைக் கருவிலே சுமந்து, பின் கையிலும் சுமந்த தாய், மண்ணையா ஊட்டி விட்டாள்? அவள் மார்பிலன்றே பால் குடித்தாய்! தமிழ்க்குருதி அதுவன்றே! புறப்படு, முத்தமிழ் காத்திட!

● இந்தி எதிர்ப்பு அரசியல் கிளர்ச்சி அன்று; உரிமைப் போராட்டம்!

தமிழ்நம் உடைமை! அதைக்காப்பது நம்கடமை!
இந்தியைத் திணிப்பது முழுமடமை!

ஆசிரியர்களே

சோற்றுக்கு மானம் விற்காதீர்!
இந்திக்கு வால்பிடித்து நிற்காதீர்!

தமிழ்ப் பெருமக்களே!

நீங்கள் தமிழகத்தில் பிறக்கவில்லையா?
இந்தி உங்கள் உரிமையைக் கெடுக்கவில்லையா?
உங்கள் நெஞ்சங்கள் துடிக்கவில்லையா?
இனியும் அறப்போர் தொடுக்கவில்லையா?

● குடிமக்களின், குமுகாயப் பெருமக்களின்–விருப்பப் படி ஆளப்படும் அரசே குடியரசு. தமிழக மக்களாகிய நாம், இந்தியாவின் பிற மாநிலங்களுடன் சேர்ந்து, நம் மொழி, பண்பாடு, இனம் இவற்றுக்குக் கேடு ஏற்படாமல் வாழ முடியும் என்ற நம்பிக்கையில்தான் இக்குடியரசில் இணைந்தோம். இன்று இந்தி ஆட்சி மொழியாவதால், தமிழும், பிற தென்னாட்டு மொழிகளும் அழியும். வடவர் வல்லாட்சி நம்மை மேற்கொள்ளும். நாம் இரண்டாந்தரக் குடிகளாவோம். தந்நலத்தால் பதவியில் ஒட்டிக்கொண்டிருக்கும் சிலரைத் தவிர இந்தியை வரவேற்பார் தமிழகத்தில் இல்லை. நம் உணர்வுகளை மதியாமல் நம்மை அழிக்கத் திட்டமிடும் அரசு நமக்கெப்படிக் குடியரசாகமுடியும்? ஏ, தமிழக அரசே! கொடிகட்டி விழாக் கொண்டாடுகிறாயே, தமிழன்னையை "பாரத மாதா"வுக்குப் பலியிடத் துணிந்து விட்டாயா?

● இலக்கியமோ, இலக்கணமோ, ஆழ்ந்தகன்ற சொல் வளமோ, அறிவியலை, அரசியலை விளக்குதற்கு வேண்டும் கலைச் சொற்களோ இல்லாத இந்தப் பொல்லாத இந்தி கொண்டு நாட்டை ஆள்வோம் என்பது ஓட்டைக் கப்பலைக் கொண்டு உலகம் சுற்றுவோம் என்பது போலத்தான். ஆங்கிலம் அனைத்துலக மொழி; அறிவியல் முன்னேற்றத்துக்கு வாயில்; இதுகாறும் இணைப்பு மொழியாக இருந்து வருவது. இது நீடிப்பதில் என்ன இழிவு? வயிற்றுச் சோற்றுக்கும் வாழ்வைப் பெருக்கும் முன்னேற்றத் திட்டங்கட்கும், தற்காப்பிற்கும் பிற நாட்டை எதிர்பார்ப்பது மட்டும் இழிவில்லையா? இதையெல்லாம் உணராமல், தமிழர் உண்மை உணர்வை நடுவணரசுக்கு எடுத்துக் கூறி நலன்காக்க முயலாமல் தமிழக அரசு தில்லியின் கைப் பாவையாகிவிட்டது. மாணவர்களின் அமைதியான போராட்டத்தை அடக்க முயன்று தடிகொண்டு தாக்கியும், சுட்டுவீழ்த்தியும் ஆணவ வெறியை அவிழ்த்துவிட்டது. இதுதான் காந்தி நெறியா? மக்களாட்சியின் மாட்சியா?

● தாய் தளையுண்டு கிடக்கப் பேய்போல் உறங்கும் தமிழா, தெவிட்டாத தேனிருக்கக் குமட்டும் நஞ்சு குடிப்பார் உடலில் ஓடுவது குருதியா சாய்க்கடை நீரா?

அராபியருக்கு "சலாம்" போட்டாய்!
ஆங்கிலேயருக்கு "சார்" போட்டாய்!
இந்திக்காரனுக்கு "நமஃச்தே" போடுகிறாய்;
கண்டவனுக்கும் முன்றானை விரிப்பதா உன் நிலை?

சப்பானில் தலைமையிடத்தை உலுக்கியது மாணவர் கூட்டம்,
ஒரிசாவில் ஆட்சியைக் கலங்கவைத்தது மாணவர் கூட்டம்.

தென்வியட்நாமில் அரசை ஆட்டிப்படைத்தது மாணவர்கூட்டம்
ஆனால் தமிழ் மாணவர் கூட்டத்துக்குச் சூடில்லையா?
சுரணையில்லையா?

இந்தித் திணிப்பில்லை என்று அண்டப்புளுகு புளுகும்
சோற்றுப் பிண்டங்களே,

வானொலி "ஆகாச வாணி" யானதேன்?
குடியரசுத் தலைவர் "இராஷ்ட்ரபதி" யானதேன்?
பாராளு மன்றம் "உலோக சபா" ஆனதேன்?
தமிழுக்குத் தேவநாகரி வடிவுதர முயல்வதேன்?

● ஆண்ட தமிழிருக்க அடிமை இந்திக்கு அரியணையாம்! இஃது அரசியல் அறமாம்! "தூய தமிழ்க் குருதி துடிக்கிறதே, என் செய்வோம்?" உன் உயிர் என்ன வெல்லமா? புறப்படு தமிழா, புறநானூறு காண!

● அரசினர்க்கும், அவரின் அடிவருடிகளுக்கும் இறுதி எச்சரிக்கை. தமிழ் நாட்டின் வல்லடிமைகள் தவிர மான முள்ளவர் எல்லாரும் சேர்ந்தெதிர்க்கும் இந்தி மொழி தமிழ் மண்ணில் இனியும் உலா வருமேல், இந்தி வகுப்புகள் நிறுத்தப் பெறும்! இந்தி மண்டலங்கள் கொளுத்தப் பெறும்! மறத் தமிழ்க் கூட்டம் திரளும். அமைச்சர்களின் ஆட்சி வண்டி புரளும்! மறத்தமிழன்பர்களே, கொதித்தெழுங்கள்!.

● கட்டிய மனைவிபோல் தமிழிருக்கக் கண்காட்டி மயக் கும் கணிகை இந்தியின்பால் உறவா? விரல் கெட்ட தொழு நோயன் யாழ்மீட்டுவதா? பொருளற்ற இந்தி புவியாள்வதா? தமிழா, செயலற்றுத் தூங்காதே! அன்னை மொழி காக்க ஆர்த் தெழு! நெஞ்சத்தீ பரவட்டும்! மாணவச் செல்வங்களே, பேரணி திரட்டுவீர்!

● தமிழ்நாட்டில் தமிழுக்கு இடமில்லையாம். இந்திக்கே முதலிடமாம்! இனி அஞ்சல் தலைகளில் இந்தி! பண விடைத் தாள்களில் இந்தி! அரசினர் அறிக்கைகளெல்லாம் இந்தி! ஊர்ப் பெயர்களெலாம் இந்தி! படிக்க முடியுமா? புரிந்துகொள்ள முடியுமா? இது தேவையா! எதிர்க்கவேண்டாமா? தமிழர்களே, எண்ணிப் பாருங்கள்!

● பதினேழாம் சட்டப்பிரிவை நீக்கு! கட்டாய இந்தி தேவையில்லை! அழிக்க வரும் மொழியை அழித்தே தீருவோம்! தாய்மொழிகாக்கத் தமிழரே வாரீர்! உடல் மண்ணுக்கு, உயிர் தமிழுக்கு!

● தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவனும் இந்தித் திணிப்பை எதிர்த்தல் வேண்டும். இல்லையேல் ஆங்கிலப் பேரரசிலிருந்து மீண்ட நாம், மீண்டும் ஒரு மொழி வல்லாட்சிப் பேரரசுக்கு ஆளாக்கப்பட்டு, அடிமையாக்கப்பட்டு விடுவோம். இதை உணர்கின்ற மாணவர் கூட்டம் உணர்த்தவும் வேண்டும்.

● மானம்! மானம்! அழியாத மானம்! மானமிழந்த பின் உயிர் வாழா மறத் தமிழ் வழிவந்தாரே. உங்கள் ஆண்மைக்கோர் அறை கூவல்! இந்தி எனும் பேய் எதற்கு? நந்தமிழைக் காக்காவிட்டால் நாம் எதற்கு? தாய் எதற்குப் பெற்றெடுத்தாள்? மானமிலாத் தடிமரமாய்க் கருங்கல்லாய் வாழ்வதற்கா? பொங்கி எழுங்கள்! கறைபடுத்தும் கையை வெட்டுங்கள்! சிந்தட்டும் குருதி! சிதறட்டும் சிறுமையர் தலைகள்!

● வேரற்று நெடுமரமும் சூறைக் காற்றால்
வீழ்ந்துவிடும்; நீந்துகின்ற மீனின் கூட்டம்
நீரற்றுக் குளத்தினிலே காயும்; மாயும்.
நேர்மையற்ற பேரரசும் காலக் காற்றில்
சீரற்றுச் சிதைந்துவிடும்; இழிவைக் காணும்!
சிலந்திவலை போற்குலையும்! எம்தமிழ்த் தாய்
பேரற்றுப் போவதற்கிங் கிந்தி வந்தால்
பிளவுபட்டு மாள்வீர்கள், எண்ணிக்கொள்வீர்!

ஒன்றுரைப்போம் இந்நாளில்; உணர்க நீங்கள்!
ஓரினத்தின் உரிமையினைப் பறிப்பீராகில்
கொன்றுவிடும் எதிர்காலம்! கொடுங்கோலாட்சி
குலைந்துவிடும்; மாய்ந்துவிடும் மக்கள் தீர்ப்பால்!
நின்றுரைத்தோம்; எச்சரிக்கை! திண்மையோடு
நடத்துகின்றோம் மொழிப்போரை, இந்தி மாய்த்தே
வென்று புகழ் சூடவும் தமிழர் கூட்டம்
வெஞ்சிறைக்குப் புன்சிரிப்பை ஏந்திச் செல்லும்.

● தமிழால் வாழ்ந்தவனே தமிழைக் காட்டிக் கொடுக்கின்றான்! தமிழழியப் பார்த்திருக்கும் சோற்றுப் பிண்டங்களே! நீவிர் சிதைந்தாலும் விருந்தாகும் கழுகுக்கு! புதைந்தாலும் இரையாகும் புழுவுக்கு! எரிந்தாலும் எருவாகும் மண்ணுக்கு! ஆனால் இருந்தாலோ மறுவாகும் கண்ணுக்கு. தமிழ் மகனே, இந்தி நரியின் பல்லைப் பிடுங்கி எறி! தமிழ்த் தாயைக் காத்தலன்றி வேறு பணி இல்லை என வீறு கொண்டெழு!

● முகில்சூழ் 'இமயத்தில்' முத்தமிழ் பொறித்த தமிழ் இனமே? மூளையில் முடங்கிவிட்டதா உன் மறம்? விழி இழந்து, மொழியிழந்து. வாழத் துடிக்கின்றாயா? சொல் வளம் படைத்த தமிழிருக்கச் சோர்வுதரும் இந்தி ஏன்? ஆர்த்தெழுங்கள் தோழர்

களே, நாம் யார் என்று காட்டக் கிளர்ந்தெழுங்கள்! அன்னையர் குலமே! அன்புத் தாய்மையரே! கொதித் தெழுங்கள்! நம் மொழி காவாமல் நாம் உறங்கிவிட்டபொழுது, இலக்கியம் இருந் தென்ன? பெருமை பேசிப் பயன் என்ன? உறுதி உள்ளங்களே, உங்கள் மொழி, உங்கள் இனம், உங்கள் நாடு காக்க ஒன்று படுங்கள்!

● மானமிழந்தபின் நீர் அருந்தாமல் உயிர் துறந்த செம்மல் வழிவந்தாரே! உங்கள் ஆண்மைக்கோர் அறைகூவல்! தமிழ் காக்க, இன்னல் தரும் சிறையில் சிக்கிக் கிடக்கும் தன் மான மறவர்க்காக, இந்தியை விரட்டச் சட்டத்தை எரித்த செந்தமிழ்ச் செம்மல்கட்காக, அவர்தமை வெளிவிடும் வரை அடையாள மறியல் செய்வோம்! வகுப்புகட்குச் செல்லாமல் காந்திய முறையில் வழி நடப்போம். ஒரு முகமான எதிர்ப்பைத் தெரிவிப்போம்!

● கழகம் கண்டு தமிழ் வளர்த்த புலவர் கோட்டையிலா இந்தி என உடல்பதறக் கேட்ட இளங்காளை இராசேந்திரன் சுடப்பட்டு வீழ்ந்தான். சென்னையில் இருவர் தங்கள் உடலைச் செந்தீயால் மூழ்க்காட்டினர். கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றி மூத்த குடி இன்று சிந்திய குருதியால் செக்கர் வானம் போலாகியுள்ளது. இனியும் வாளா விருப்பதா? செயல் மறவர்களே, பணியா நம் தலைகள் தமிழுக்கு வளையட்டும்! இந்தியை ஒழிக்கும் வரை நம் நெஞ்சக் கதவுகள் திறந்தே இருக்கட்டும்.

ஆட்சி இட்ட தீ அடி வயிற்றிலே! இந்தி இட்ட தீ முப்புறத் திலே! வெறியன் இட்ட தீ தென்னகத்திலே! சிவலிங்கம் இட்ட தீ இந்தி மொழியிலே! சிவலிங்கத்தின் உயிரைப் பறித்த தீயனே, நீ ஆளவந்தால் மாளும் உயிர்கள் எத்தனையோ? உறுதி!உறுதி! உன்னை அழிக்காமல் உறங்குவதில்லை இனியும் இந்திக்கு வால் பிடிக்கும் நீ தமிழனா? உன்னைப்பெற்றவள் தமிழச்சியா? தமிழ்க் குமுகாயமே, கொதித்தெழு!

*

முகவர்கள் கவனத்திற்கு.

* ஒவ்வோர் ஆங்கில மாதமும் 5-ம் நாளைக்குள் முந்தைய மாதப் பட்டியல் தொகையைக் கட்டாயம் விடுத்துவிடவும்.
* படிகள் சரிபார்த்தே விடுக்கப் பெறுவதால், இடையில் ஏற்படும் குறைபாடுகளுக்கு அலுவலகம் பொறுப்பாகாது.
* தேவையான மிகுதிப் படிகட்கு முன்கூட்டியே எழுதவும்.

–அமைச்சர்.

பொது மக்கள் என்ன கருதுகிறார்கள்..?

(இந்திமேல் வெறுப்புக்கொண்ட ஒரு சிலரோ, அரசினர் மேல் வெறுப்புக்கொண்ட ஒருசிலரோதாம் இந்தி ஆட்சி மொழியாவதை எதிர்ப்பதாகப் பொறுப்புள்ள அமைச்சர் சிலர் பேசி வருகின்றனர். அவர்கள் தம் கண்களையும் காதுகளையும் அடைத்துப் போட்டுவிட்டு இந்தியாவை உருவாக்க முனை யும் வந்தபின் காப்போன்கள்! அவர்கள் கருதுமாறு இல்லா மல், இந்தித் திணிப்பைப் பொறுப்புவாய்ந்த நடுநிலையான பொது மக்களும் கண்டிக்கின்றனர் என்பதை வலியுறுத்தவே இம்மடல்களை வெளியிடுகின்றோம், இம்மடல்கள் மூன்றும் 'இந்து' ஆங்கில நாளிதழில் வந்தவையாகும். —ஆர்)

அரசியல் அமைப்பில் 'இந்தி' வலியுறுத்தப் பட்டுள்ளதே, அதை மாற்றுவதா என்கின்றன. இஃது இந்தியைப் புகுத்துவ தற்குக் காட்டப்படும் வெற்றுத் தலைக்கீடே யாகும். அரசியல் அமைப்பின் தூய்மைக்கும் பெருமிதத்துக்கும் நம் அரசு என்றும் மதிப்புக்கொடுத்து வந்ததேயில்லை. அரசியல் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மிகவும் தூய்மை வாய்ந்து, மீண்டும் கைவைக்கப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டியவை. அவற்றை மாற்றினால் அவ்வுரிமைகளின் உயிர் நிலையே அழிந்து போம். அத்தகைய மாறுதல்களையே இப்பேராயக் கட்சி அரசினர், தங்கள் தந்நலத் தில்லுமல்லுகட் கேற்பப் பன்முறை விரைந்தும், சற்றும் கவலைப்படாமலும் மாற்றி யிருக்கின்றனர். இந்தியோ அடிப்படை உரிமையைச் சார்ந்ததுமன்று. இப்பொழுதுமட்டும் அரசியல் அமைப்பின் தூய்மை கொண்டாடுவது நாணயமற்ற தன்மை; அதைக் கேட்டு யாரும் ஏமாறப்போவதில்லை.

இந்திய மக்களின் பேராட்கள் அனைவரும் ஒருமுகமாக ஒப்புக்கொண்டதே 'இந்தி' என்பர்! இது சட்டப்படி வேண்டு மானால் சரியாக இருக்கலாம். ஆனால் அற முறைக்குச் சற்றும் பொருந்தாது. அரசியல் அமைப்புப் பேரவை முறைப்படியா அமைந்திருந்தது? அரசினர் தம் நோக்கப்படி அமர்த்தியவர் களும், 'சாதி' அடிப்படையிலும் கட்சிப்பூசல்களாலும் நேர்ந்த தேர்தலில் வென்றவர்களும், சட்டமன்றங்கள் போலவே அங் கும் புகுந்திருந்தனர். உண்மையில் சட்டங்களைச் சட்டமன்றத் தில் இயற்றிய அதே கூட்டத்தினரே அரசியலமைப்புப்படிப் பேரவையில் வீற்றிருந்து அரசியலமைப்பையும் நிறைவேற்றி னர் எனவே, பேராயக் கட்சி, அரசியலமைப்பையும் வழக்க மான சட்டங்கள் போலவே கருதி அதற்கு மதிப்பளிக்காமல் போனதில் வியப்பில்லையே! பேராயக் கட்சி, அரசியலமைப்புப் பேரவையில் பெரும்பான்மை பெற்றிருந்தது. எனவே தனிப்

பட்டமுறையில் தன் ஆட்களைக் கூட்டிவைத்து, கட்சிக் கட்டுப் பாடு என்ற பெயரால், வெறுஞ் சட்ட மன்றத்தில், சட்டத்தில் தன் தன்னலக் கொள்கையை நுழைப்பது போலவே, அரசிய லமைப்புப் பேரவையிலும் தன் கருத்தைப் புகுத்தப் பாடு பட்டது.

அரசியலமைப்புப் பேரவையில் பேராயக் கட்சியினரிடை யிலேயே இந்திபற்றிப் பெரும் பிளவும், கருத்து வேறுபாட்டுக் கசப்புணர்வும் நிலவி வந்தன என்பதை, பர். அம்பேத்கார் தம் நூல் ஒன்றில் வெளிப்படுத்தியிருக்கின்றார்:- ''இந்திச் சிக்கலில் தான் மிகுந்த கருத்து வேறுபாடும், பூசல்களும் நிகழ்ந்தன. இந்திக்கு எழுந்த எதிர்ப்புப்போல் வேறெதற்கும் எழவில்லை. நெடுந் தருக்கங்கட்குப்பின் ஒப்புக்கு விட்டதில் இந்தியைத் தாங்கி 77 ஒப்புகளும் எதிர்த்து 77 ஒப்புகளும் கிடைத்தன. எனவே மோதலைத் தீர்க்க இயலவில்லை. நெடு நேரத்துக்குப்பின் மீண்டும் ஒப்புக்கு விட்டதில் இந்திக்கு 78-உம், இந்தியை எதிர்த்து 77-உம் விழுந்தன. இந்த ஒரே ஒப்போலையால் இந்தி தேசியப் பொது மொழியாக்கப் பெற்றது.'' அதுமட்டுமா, சிக்கல் நிறைந்த நெருக்கடியில், அவைத் தலைவரின் ஒப்போலை, ஏற் கெனவே இருந்து வரும் நிலைமையைத் தாங்கியே இருத்தல் வேண்டும் என்ற, மீறக்கூடாத நெடுநாள் வழக்கத்துக்கு முற்றி லும் முரணாக அப்பொழுதைய அவைத் தலைவர் (குடியரசுத் தலைவர்) இந்திக்கே தன் ஒப்போலையை அளித்தார்! இதனால் இந்திக்கேற்பட்ட வெற்றியின் அடிப்படை அறநெறியினின்றும் பிறழ்ந்ததாயிற்று.

எனவே, இந்தியை அரசியல் அமைப்பிலிருந்து முற்றிலும் அகற்றிவிடுவதே நாணயமான செயலாகும். இதை அகற்றுவ தற்கு இடம் தராதிருப்பது அரசியல் அமைப்பன்று; தங்கள் தாய் மொழியை இந்தியா முழுவதிலும் திணித்தல் வேண்டு மென்னும் இந்திக்காரர்களின் வெட்கங் கெட்ட தன்னலச் செயலேயாகும். தேசிய ஒருமைப்பாடு என அவர்கள் கூறுவ தெல்லாம் வெறும் பாசாங்கு! இந்திய அரசில் நுழைந்து கொண் டிருக்கும் இந்தி வெறியர்கட்கும், அங்கிருக்கும் இந்தி பேசா உறுப்பினர்களின் பேடித் தன்மைக்கும், அடிமை மனப்பான் மைக்கும், அக்கறையற்ற தன்மைக்கும் அமைந்த ஒரு நாணய மற்ற மறைப்புப் போர்வையே அரசியல் அமைப்பு!

-பி. கோதண்ட ராவ், பங்களூர்.

2. எந்த இந்திய மொழிக் குழுவும் மற்றோர் இந்திய மொழிக் குழுவினைவிட மிகுந்த வாய்ப்பும் நலனும் பெறும்படி நடுவண் ஆட்சிமொழி அமைதல் கூடாது, வலியுறுத்தப்பட வேண்டுவது இதுவே. ஏமாந்துபோய் நோக்கத்தை வேறுபுறம் திருப்பிவிடல் கூடாது. எப்படிப் பார்ப்பினும் இந்திக்கு இத்

தகுதி இல்லை. இந்நிலையில் இந்தி ஆட்சிமொழி யானால் அஃது இந்தி வல்லாட்சியே. இந்தி அரசியல் சட்டத்தில், குடியாட்சி முறைப்படி ஏற்றுக் கொள்ளப்பட்டதால் அதை மாற்றல் இயலாது, கூடாது எனப் பேராயக் கட்சியினர் கூறுகின்றனர். ஆயினும் தென்னக மக்கள், தங்கட்கு மட்டுமல்லாது, தங்கள் வருங்கால மரபினர்க்கும் இந்தியால் விளையவிருக்கும் பெருங் கேட்டினை உணரத் தொடங்கி விட்டனர். கசப்பு வளர்ந்துவிட்டது. திரு. சாத்திரி அடிப்படைத் தீர்வுகாண முயலாமல் இரங்குவது போலும் உடன்பாடு காண முயல்வதுபோலும் பாசாங்கு செய்வதிற் பயனில்லை. சிக்கல் அடிப்படையிலேயே உள்ளது. இந்தி நடுவண் ஆட்சி மொழியாக்கப்பெறல் தானும் வேண்டுமா? சாத்திரியார் இதை நினைப்பாரா? அல்லது மேலும் கொந்தளிப்புக் குமுறல்கட்கு இடம் கொடுத்து நிலைமையைக் கெடுத்து விடுவாரா? ''நிலையான இருமொழிக் கொள்கை''யும் கூடப் பயன்தராது. அழிந்த நம்பிக்கை துளிர்த்து அமைதி திரும்ப வேண்டுமாயின் செய்யவேண்டுவது இதுவே: நடுவண், மாநில அரசுச் சட்டங்கள் அனைத்தும் ஆங்கிலத்திலேயே எழுதப் பெறல் வேண்டும். நடுவண் அரசுப் பொது அலுவல் தேர்வுகட்கு ஆங்கில மொழி மட்டுமே பயன்படல் வேண்டும். வழக்கு மன்றத் தீர்ப்புகள் அனைத்தும் ஆங்கிலத்திலேயே இருத்தல் வேண்டும். ஆங்கிலம் நான்காம் வகுப்பிலிருந்து கட்டாயமாக்கப் பெறல் வேண்டும். நாட்டக மொழிகளின் வளர்ச்சிக்கு ஆட்சியாளர் ஒருசார்பற்ற கண்ணோட்டமும் உதவியும் அளித்தல்வேண்டும். இவையனைத்துக்கும் அரசியற் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் வேண்டும். வேறு வழியில்லை.

– திரு. கே. கே. சின்கா, கல்கத்தா.

3. நான் தி.மு க. உறுப்பினன் அல்லன். ஏன், நான் தமிழனும் அல்லன். எனக்கோ அகவை எண்பதாகின்றது. ஒரு செய்தித் தாளுக்கு நான் மடல் எழுதுவது இதுவே முதல் தடவை. இந்தி வெறியர்களின் பேச்சுகளும் செயல்களுமே என்னை எழுதத் தூண்டுகின்றன. பேராயக் கட்சியின் தலைமை, கட்சியை நன்றாக அடக்கியாள்கின்றது. தலைமையமைச்சர்களோ தொட்டால் சரிந்து விழுந்துவிடுகின்றனர். நடுவண் உள்துறை அமைச்சர் முன் இத் தலையாட்டிகள் என்ன செய்ய முடியும்? நேருவே தவறிய இடத்தில் சாத்திரியாலும் ஒன்றும் செய்ய முடியாது. ஒருபுறம் ஆங்கிலத்தின் அடிச் சுவடுகளைத்தாமும் துடைப்பதற்கு முயன்று கொண்டே, மறுபுறம் இந்தி திணிக்கப் படமாட்டாது, மாட்டாது என்று வெற்றுரைகளை நல்லவர்கள் போல் அள்ளி வீசிக் கொண்டிருப்பதால் பயன் யாது? நடுவணரசில் இந்தி பேசாதவர்க்குப் பொறுப்பில்லையா? தற்பொழுதைய நிலைமை (ஆங்கிலமே இருந்து வரல்) நீடித்தாலொழியப் பயனே இல்லை.

'நாய்கள் குரைத்தால் குரைக்கட்டும்; நாம் போய்க் கொண்டே இருப்போம்' என்பதுபோல் இருக்கின்றது திரு. நந்தாவின் மனப்பாங்கு. தென்னிந்தியரின் இடர்ப்பாடுகட்கு அவர் அமைவு செய்திடப் போகின்றாராம்! என்ன இடர்ப் பாடுகள் நேர்ந்தன இத்தனை நாளாய்? இனியும் ஆங்கிலம் இருப்பதால் என்ன இடர்ப்பாடும் நேரப் போவதில்லையே! இடர்ப்பாடெல்லாம் இந்தி வெறியர் உண்டாக்கிவைப்பதுதான். செய்ததையும் செய்துவிட்டு இப்பொழுது அமைவு செய்ய முயல்வது, ஒருவனின் உடைமைகள் அனைத்தையும் கொள்ளையடித்துக்கொண்டு, பின் அவனின் அற்றம் மறைப்பதற்காக அவனிட மிருந்தே எடுத்துக் கொண்ட பழைய சட்டையை மிகத் தாராள மனப்பான்மையுடன் கொடுக்க முன்வருவது போலிருக்கின்றது. இந்தி ஆர்வியர் தென்னக மக்களின் உணர்ச்சி ஆழத்தையும் அகலத்தையும் புரிந்து கொள்ளவில்லை. காமராசரும், பக்தவத்சலமுமே புரியவில்லையே! தென்னகத்தைச் சார்ந்த பாராளு மன்ற உறுப்பினரும், தென்னாட்டுச் சட்டமன்ற உறுப்பினரும் தம் பதவியை விட்டு நீங்கி, இச்சிக்கலின் மீதில் மீண்டும் தேர்தலில் நிற்றல் ஒன்றே வழி. செய்வார்களா?

–கே. குண்டப்பா, தும்கூர். (மைசூர்)

4. பரபரப்போடு ஆங்கிலத்தை மாற்றிவிட்டு, இந்தியை ஆட்சிமொழியாகக் கொணர்ந்திருப்பதானது உலகிலேயே மிகப் பெரிய குடியரசாகிய இந்தியாவின் வருங்காலத்தில் மிக ஆழ்ந்த விளைவுகளை ஏற்படுத்தப் போகின்றது. ஆங்கிலத்தை மாற்றுவதற்கும், அவ்விடத்தில் இந்தியை நுழைப்பதற்கும் தேவை என்ன? பன்மொழிகள் இருத்தலால் ஒருமைப்பாட்டுணர்வு இல்லை; ஒரே மொழியை வைத்துக் கொண்டால், இவ்வொருமைப்பாடு உடனேயே அமைந்துவிடும் என்பதெல்லாம் சரியாகாது. மொழிக்கும் ஒருமைப்பாட்டுக்கும் தொடர்பில்லை. பதினேழாம் நூற்றாண்டில் அமெரிக்காவில் இருந்த 17 குடியேற்ற நாடுகளும் ஆங்கிலத்தைத் தாய்மொழி யாகக் கொண்டிருந்ததனால், தங்கள் தாய் நாடாகிய இங்கிலாந் திடமிருந்து விடுதலை பெறுவதற்காக அதனுடன் போர் புரியா மலா போய்விட்டன? நினைவுக்கும் எட்டாத காலந் தொட்டே சீனமொழி சீனநாடு முழுவதும் பேசப்பெற்று வந்தது. ஆட்சி மொழியாகவும் இருந்தது. ஆயினும் அக்காலமெல்லாம் சீனா ஒன்றுபட்டிருந்ததா? மேலும், நடுகிழக்கு நாடுகள் அனைத்தும் அரபு மொழியையே பொது மொழியாகக் கொண்டுள்ளன. அவை அரசியலடிப்படையில் ஒன்றுபட்டுள்ளனவா? வங்காளி மொழி வங்காள முழுவதும் வழங்கி வந்தும், 1947-இல் அஃது இரண்டாகப் பிரிக்கப்படவில்லையா? ஒரு நாட்டின் ஒற்றுமை மொழியால் மட்டும் ஏற்படுவதன்று.

இந்தியுடன் ஒப்பவைத் தெண்ணப்பட்ட பிற பதின்மூன்று மொழிகளின் நிலை பற்றி நமக்கேற்பட்டுள்ள அச்சம் முறையானதே! இம்மொழிகள் குறுகிய காலத்தில் அடைந்துள்ள வளர்ச்சி வியக்கத் தக்கதே! ஆயினும் இவ்வளர்ச்சிக்குக் காரணம் அவை ஆங்கிலத்தோடு தொடர்பு கொண்டிருந்ததே! இனியோ அவை இந்தியுடன் தொடர்புகொள்ள வேண்டியிருக்கும் ஆனால் இந்தி மொழி அவற்றுக்கு என்ன வளம் ஊட்டல் முடியும்? மொழியியல் அடிப்படையிலோ, இலக்கிய அடிப்படையிலோ வங்காளி, தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், உருது முதலிய இந்திய மொழிகள் பலவற்றுக்கும் இந்தி தாழ்ந்ததுதான். இவ்வுயர் மொழிகள் மேலும் வளர்ச்சிபெற இந்தியினிடமிருந்து எதுவும் பெற்றுக்கொள்ள முடியாது. வறியன் வளம்பட வாழ்பவனுக்குப் பொருள் கொடுத்தல் இயலுமா?

''இந்தி ஒன்றே ஆட்சி மொழியாவதால் தீங்கில்லை; பிற மொழிகளின் வளர்ச்சி தடைப்படாது'' எனும் கருத்தினை இந்திப் பற்றாளர் சிறிதும் விடாமல் பரப்ப முயல்வது வியப்பே! இது முற்றிலும் மடமை! முதலாவதாக இந்தியின் ஆட்சி மதிப்புக்குக் குறைந்த மதிப்புப் பெறுவதால் இவை இடர்ப்படும். அடுத்து, இந்தி அடங்கிய வட இந்திய மொழிகள் அனைத்தும் ஒரே மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவை. இவற்றுள் இந்திக்கு முதலிடம் என்று வரும்பொழுது பிறமொழிகள் அமிழ்த்தப் பெற்றுத் தத்தம் தனித் தன்மையை இழந்துபோம்.

இதுவரை அரசினரால் இந்திக்குப் பெருஞ் சலுகைகள் தரப்பெற்றுள்ளன. இந்தி பேசா மாநிலங்களினின்று இந்தி பயில விரும்பும் கல்லூரி மாணவர் 4000 பெயர்களுக்கு உதவிச் சம்பளங்கள் தரப்பெற்றுள்ளன. பிற பதின் மூன்று மொழிகட்கும் என்ன ஊக்கம் கொடுத்திருக்கின்றது அரசு?

இந்திய வானொலியோ, இந்தியைப் பரப்புவதிலேயே முழு மூச்சுடன ஈடுபட்டுள்ளது. அனைத்து வானொலி நிலையங்களும் இந்தியைக் கற்றுக் கொடுக்கின்றன. சீனப்படைத் தாக்குதலின் பொழுது இந்தி நிகழ்ச்சிகள் எல்லா நிலையங்களிலும் கட்டாயமாக்கப் பெற்றன. 'விவித பாரதி'யின் வேலை முழுவதும் இந்தியைப் பரப்புவதே! பிற மொழிகளின் நிகழ்ச்சிகட்கு இடமே இல்லை! இவ் வெடுத்துக்காட்டுகளிலிருந்து இந்தியால் பிறமொழிகளின் நலன்களும், உரிமைகளும் தாக்குறப் பெறா என்று எவராவது கூறினால் அஃது எவ்வளவு பொருளற்றது என்பது வெளிப்படை! ஒவ்வொரு மாநில மொழிக்கும் நாட்டக மொழி என்ற மதிப்பளித்திருக்கையில் அவற்றை அவ்வவற்றின்

மாநிலங்களில் தவிர, வேறு வகையில் பயன்படுத்தாதொழிப்பது அரசியல் சட்டத்துக்கு மாறுபாடாகாதா?

மாநிலத் தலைமை அமைச்சர்கள் என்ன, நிலையானவர்களா மொழிச் சிக்கலில் அவர்கள் கருத்தை மட்டுமே கேட்டுக் கொள்வதற்கு? அவர்களோ மேலிடத்தார்க்கு அஞ்சி நடக்க வேண்டியிருக்கிறது. எனவே நடுவணரசு வலியுறுத்தும் ஒவ்வொரு கொள்கைக்கும் அவர்கள் தலையாட்டவே செய்வர். முதலைகளை எதிர்த்துக்கொண்டு தண்ணீரில் வாழமுடியுமா? ஆனால் மொழி, தனிப்பட்டவரையோ, குறிப்பிட்ட சிலரையோ பொறுத்ததன்று. இந்தியாவின் 45 கோடி மக்களையும் பொறுத்தது.

– சுதான்சு துங்கா.

எதற்காக நாங்கள் இந்தியை எதிர்க்கின்றோம்..?

இந்தி ஒழிந்து தமிழே வாழ வேண்டும் என்பதற்காகவோ, இந்தி, தமிழைவிடத் தாழ்ந்தது என்பதற்காகவோ, இந்தியும் இந்தி பேசுவோரும் தமிழ்க்கும் தமிழர்க்கும் பகை என்று கருதியோ, இந்தி ஒரு வளமற்ற–செப்பமற்ற மொழி என்ற காரணத்துக்காகவோ, அஃது ஆட்சி மொழியாகக் கூடாதென்னும் பொருமை காரணமாகவோ இந்தியை நாங்கள் எதிர்க்கவில்லை. பிறிதொரு மொழிமேல் தன் முழு ஆட்சியையும் செலுத்துதற்கு உலகில் எந்த மொழிக்கும் உரிமையில்லை என்னும் மக்கள் அமைப்பின் அடிப்படைக் கொள்கையின் வழியே நாம் இந்தியை எதிர்க்கின்றோம். எந்தக் காரணம் கொண்டும் இக் கொள்கை புறக்கணிக்கப் பெற்று விடல் கூடாது என்பதே நம் வலிந்த கருத்து! இந்த அடிப்படையில் தமிழர் தம் மொழியையும், தம்மையும் காத்துக் கொள்வதில் தவறென்ன ? ●

மறைந்துவரும் தமிழ்ச் சொற்கள்.

தமிழன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள்!

உயர்தனிச் செம்மொழியான நம் தமிழில் நுண்ணிய பொருள் உணர்த்தும் உலகவழக்குச் சொற்கள் இன்று புதுமை நாகரிகத்தின் பரபரப்பும் ஆழமின்மையும் மிகுதியும் பரவாத நாட்டுப்புற மக்களின் அன்றாட வாழ்க்கையிற் பயிலப் பெறுவனவே யல்லாமல், பிற இடங்களில் மறைந்துவிட்டன என்றே கூறலாம். அச்சொற்களை மக்கள் மறந்து போகாமல் செய்தலும், அவற்றின் நுணுக்கமும் சிறப்புமறிந்து அவற்றை இலக்கிய–நடைமுறை வழக்கில் பயன்படுத்தலும் நம் கடமையாகும். எனவே தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் உள்ள மாணவரும், ஆசிரியரும், தமிழன்பரும் தங்கள் தங்கள் வட்டாரங்களிலும் அண்டை அயற் சிற்றூர்ப்பகுதிகளிலும் வழங்கிவரும் அவ்வரிய, அருகிய சொற்களைத் தொகுத்துத் தென்மொழிக்கு விடுக்க வேண்டுகின்றோம். அவை விடுத்தார் பெயருடன் தென்மொழியில் வெளியிடப்பெறும்.

ஈ. வே. இரா. பெரியாரும், இந்தியும்.

புலவர் வி. பொ. பழனிவேலன், பி. ஓ. எல்.

ஈ. வே. இராமசாமிப் பெரியார் 1925 முதல் என் மதிப்பிற் குரியராயிருந்தவர்; தமிழரின் தன்மானத்தைத் தட்டி யெழுப்பி யவர். அவர்தம் தன்மான இயக்கக் கொள்கைகளை இன்றுவரை அடியொற்றி நடைமுறையில் பின்பற்றி வருகின்றவன் யான். ஆனல் அவர் இன்று மேற்கொண்டுள்ள கொள்கை தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் கேடு பயப்பதாய் உள்ளது. மேலும், 'தமிழ்ப் புலவர்களெல்லாம் குமுக (சமூக) த்திற் கிரண்டகஞ் செய்ப வர்கள்' என்றும் கூறிவருகின்ருர். இது நனியும் வருந்தற் பாலதே. 1938-இல் தமிழ் நாட்டுப் பள்ளிகளில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கினர் திரு. இராசாசி. அதைமுனைந்து நின்று எதிர்த்தார் பெரியார். பின்னர், இருப்புப் பாதைப் பெயர்ப் பலகைகளில் முதலில் இந்தியில் பெயர் எழுதப்பட்டிருந்ததை எதிர்த்துக் கரி நெய் (Tar) கொண்டு அழித்தார்; பிறரையும் அழிக்கச் செய்தார். இதனல் பலர் சிறைப்படுத்தப் பெற்றுத் தண்டிக்கப்பட்டனர் அத்தகைய பெரியார், இன்று 1965 சனவரி 26 முதல் இந்தி தமிழகத்தில் ஆட்சி செலுத்த முற்பட் டுள்ளதை எதிர்க்காமலும், எதிர்ப்பவர்களை ஏளனம் செய்து கொண்டும் உலா வருவது தமிழர்கட்கு எத்துணை மன வேறு பாட்டையும், மனக் கசப்பையும் உண்டாக்கிவிட்டது. இதனை அவர் உணரார் போலும். தமிழ்ப் புலவர்கள் இரண்டகம் செய்வோர் என்று கூறிக்கொண்டு இன்று தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் இரண்டகஞ் செய்கிருர் என்றே இயம்பலாம்.

அன்று இந்தியைக் கட்டாயமாகப் படிக்கத்தான் சொல்லப் பட்டது; இந்தி எழுத்துகளில் பெயர்கள் எழுதப்பட்டன. இன்ருே ஆங்கிலம் இருந்த இடத்தில் இந்தி அமர்த்தப்பட்டு விட்டது இவ்வமயம் பெரியார் அமைதியாக இருந்தாலும் தாவில்லை; "இந்தி வந்தால் என்ன கெட்டுவிடும்? பதின்மூன்று மாநிலத்தார் ஏற்றுக்கொள்ளும் பொழுது நீ (தமிழன்) மட்டில் எதிர்த்தால் என்ன நடக்கும்?" என்று கூறுவது மட்டுமின்றிப் பேராயக்கட்சிக்குஒப்போலை வழங்கி, வலுப்படுத்துமாறும் எழுதி யும் பேசியும் வருகின்ருர் அன்று பேராயக் கட்சியை ஒழித்துக் கட்டுவேன் என்றவர், இன்று எடுத்துக் கட்டுவேன் என்று கூறி வருகின்ருர். இந்தித்திணிப்பை எளிதாகக் கருதி ஏளனக்குரலில் பேசுகின்ருர் இவரே தமிழர் தலைவர் என்று கூக்குரலிடுபவர் எண்ணிப்பார்க்க வேண்டாவா? அன்று இந்தியை எதிர்த்த பொழுது தமிழர் தலைவர்தான்; இன்று இந்தியை வரவேற்கும் பொழுது தமிழ்க் கொலையர்தான். இதில் ஐயத்திற்கிடமின்று. முன்னர் பெரியார் செய்த பெருந்தொண்டு போற்றற் குரியதே.

ஆனால், இப்பொழுது அவர் செய்யும் முண்டு தூற்றற்குரியதே. இவ்வாறு ஏட்டிக்குப் போட்டியாக இன்று பெரியார் செய்வதன் உள்கருத்து யாது? அவர்க்கு வேண்டாத தி. மு. க வினர் இந்தியை எதிர்க்கின்றனர்; அதனால் வரவேற்கின்றார் என்பதைத் தவிர்த்து வேறு எக்காரணமும் இல்லை. திரு. இராசாசியுடன் கூட்டுச் சேர்ந்துள்ளனர் என்ற காழ்ப்பும் இருக்கலாம்.

நல்ல செயலை நம் பகைவன் செய்தாலும் பாராட்டுவதுதான் பண்புடைமையேயன்றி எதிர்த்துநிற்பது அறிவுடைமையாகாது; பகுத்தறிவுக்கும் ஒத்ததன்று. தி. மு. க. வுக்கும் இராசாசிக்கும் தான் தமிழ் மொழியும் தமிழ் நாடும் உரிமையா? அவர்கள்தாம் அவற்றிற்கு அதிகாரிகளா? மற்றையோர்க்கு எந்த உரிமையும் இல்லையா? அவ்வாறாயின் திருவாளர்கள் பொ. தி. இராசன், கோ. துரைசாமி, கருமுத்துத் தியாகராசன். கி. ஆ. பெ. விசுவநாதம், கிருட்டினசாமி பாரதி, இசுமாயில், சி. பா. ஆதித்தன், சா. கணேசன், மூக்கையா முதலியோர் 17-1-65-இல் திருச்சியில் கூடிய இந்தி எதிர்ப்பு மாநாட்டில் கலந்து கொள்வார்களா? தமக்குப் பகைவராயுள்ளோர் இந்தியை எதிர்க்கிறார்கள் என்பதற்காக இவர் வரவேற்கிறார் போலும். இது பகுத்தறிவுடையோர் செயலாகாது. தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும் வந்துள்ள பெருங்கேட்டைப் பொருட்படுத்தாமல் காமராசரின் புகழ் பாடிக் கொண்டும் அவர் கட்சிக்குத் துணைநின்று வலுப்படுத்த வேண்டுமென்று கூறிக்கொண்டும் வருவது தமிழர் தலைவர்க்குரிய செயலன்று. (தமிழரே இன்னுஞ் சில நாட்களில் இல்லாமற் போவர் என்ற நிலைமை உண்டாகியுள்ள பொழுது அவர்களுக்குத் தலைவர் என்று கூறிக்கொள்ளும் இவர்மட்டும் இருந்து விடுவாரா?)

''தமிழ் நாடு தமிழருக்கே'' என்று முதல் முழக்கம் செய்த பெரியார் இன்று வாளாவிருப்பது மட்டுமின்றித் தமிழர்க்கே வாளாகவும் இருக்கிறாரே என்பதுதான் எம்மை மிக்க துன்பத்திலாழ்த்துகின்றது. தமது விடுதலை ஏட்டில் ''தாய்ப் பால் பைத்தியம்'', என்ற ஆசிரியவுரையில் அவர் எழுதிய கட்டுரையில் கூறியது போன்று, ''எனக்குத் தமிழ்ப் பற்றுமில்லை; யான் தமிழனுமில்லை,'' என்று கூறுவாராயின் அவரைத் ''தமிழர் தலைவர்,'' என்று கூறுவதில் என்ன பொருள் இருக்கிறது? வடக்கரின் கண்காணிகளாக விளங்கும் காமராசரையும் பத்தவச்சலத்தையும் பாராட்டிப் பரிசுகள் பெற்றால் போதுமென்று கருதிவிட்டார்போலும். இனி, தன்மானக் கொள்கைக்கும், தமிழ்நாட்டு விடுதலைக்கும் பெரியார் இராமசாமியைத் தமிழர்கள் நம்பிக் கொண்டிருப்பதில் எட்டுணையும் பயனின்று.

ஒருகாலத்தில் பெரியார் தமிழுக்காகவும் தமிழர் நலனுக்காகவும் பாடுபட்டார்; அவரைப் பாராட்டினோம். இற்றை ஞான்று அவர் செய்கை தமிழுக்கும் தமிழர்க்கும் ஊறுவிளைப்பதாக உளது. எனவே, அவரை இனியும் போற்றித் திருவகவல் பாடிப் புகழ்வதால் யாது பயன்? இனித் தமிழர் செவிகளில் அவர் தம் அறிவுரையும் விரிவுரையும் இரும்பைக் காய்ச்சி ஊற்றியது போன்று தீங்கு பயப்பனவாம். தமிழர்கள் விழிப்புடன் இருந்து பெரியார் பேச்சைக் கேளாது நாட்டு விடுதலையில் நாட்டங் கொண்டுழைக்க முனைவார்களாக. அமையவிருக்கும் தமிழக விடுதலை இயக்கத்தில் அனைவரும் உறுப்பினர்களாகி உழைக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். ●

(பெரும்பான்மையர் இந்தியை ஏற்றுக் கொள்ளும் பொழுது தமிழனும் அதனை ஏற்றுக்கொள்ளல் வேண்டும் என்று கூறும் பெரியார், "மிகப் பெரும்பான்மை மக்கள் சமயத்தையும் இறை நம்பிக்கையையும் ஏற்றுக் கொள்ளும் பொழுது, பெரியாரும் அவரியக்கத்தினரும் அவற்றை எதிர்க்காமல் ஏற்றுக்கொள்ளல் வேண்டும்" என்பாருக்கு என்ன விடை கூறுவார்? கருத்துப் பரிமாற்றங்களைத் தடை செய்வதை எதிர்த்தும், மக்களின் பகுத்தறிவைத் தூண்டியும் 35 ஆண்டுகளாக இயக்கம் நடத்திவரும் பெரியார் இன்று இந்தி எதிர்ப்புக் கருத்துகளையும் அவற்றை வெளியிடும் இதழ்களையும் தடைசெய்து ஒழித்தல் வேண்டும் என்று கூறுவது எவ்வகையில் பகுத்தறிவாகும்?)

இரங்கல்......!

அண்மையில் நடந்த தமிழ்மீட்சிப் போராட்டங்களில் அரசினரின் வெறித்தனத்திற்குப் பலியான செந்தமிழ் மறவர்கள் அத்தனைப் பெயர்களையும், வெட்டுண்டு துயர் மூங்கிக் கிடக்கும் இளங் காளையரையும், விழுப் புண்பட்ட விறல் பொதி தடந்தோள் மறவர்களையும் பாராட்டிப் புதிய புறநானூறான 'தமிழ் நானூறு' என்ற பனுவல் விரைவில் உருவாக்கப் பெறும். ஒவ்வொரு மறவர்க்கும் ஒவ்வொரு பாடல் ஆக நானூறு பாடல்கள் பாடி முடிக்கப்பெறும். பாடல்களில் உண்மை வரலாறே பொதியப் பெறுமாகையால், இப் போராட்டங்களில் உயிர் விடுத்த மறவர் தம்மைப் பற்றிய மெய் நிகழ்ச்சிகளை அறிந்தார் தென்மொழிக்கு எழுதி விடுக்க வேண்டுகின்றோம்.

தமிழக மறுமலர்ச்சி வரலாற்றை உருவாக்கப்போகும் மாணவர்குல மறவர்களுக்கு எம்நெஞ்சுகந்த பாராட்டுகள்!

– பெருஞ்சித்திரன்.

அரசியலில் இந்தித் திணிப்பின் நிலை

ஆங்கிலத்தில்: இ. கே. இராமசாமி
(இந்து நாளிதழ் 26-1-65)

தமிழில்: செம்பியன்.

இக் குடியரசு நாள் பாராளு மன்றத்தின் (*Parliament*) முன்னாளைய, இந்நாளைய உறுப்பினர்களான இந்தி வெறியர்களின் (*Protagonists of Hindi*) வெற்றி விழாவாகும். ஏனெனில் இந் நாடு இந்தி ஆட்சிமொழி ஆவதை விரும்புகின்றதா இல்லையா என்பதுபற்றிப் பொருட்படுத்தாமல், இந்திமொழிதான் இன்றிருந்து இந்தியாவின் ஆட்சி மொழியாக இருத்தல் வேண்டும் என முயன்றனர். ஆளுமையோடு வல்லுணர்வு கொண்ட அப் பாராளு மன்ற உறுப்பினர்கள் வாழ்வில் கைக்கொண்ட பெரு முயற்சியில் வெற்றியும் பெற்று விட்டனர். பிற, இந்தி பேசாத பகுதிகளிலுள்ள மற்றக் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கட்கு உண்மையாகவே இஃது ஒரு துயர நாள்.

பல ஆண்டுகளாகவே ஒரு பகுதி சார்பாளர்களின் ஆய்வுக்குரிய, உயிர்க்கிணையான மொழிச் சிக்கல் போன்ற கருத்துகள் யாவும் மற்றொரு பகுதிச் சார்பாளர்களினால் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டேயுள்ளன. இந்தி பேசாப் பகுதிகளிலிருந்து சென்றபேராயக் கட்சிக்காரர்கள் (*Congressmen*) 'இந்திக் காட்டாட்சியின்' வருகையைக் கண்கூடாகக்கண்டவர்தாம். ஆனால், அவர்கள் போதுமான அளவு முன்கூட்டியே சரியான முறையில் எதிர்த்துப் போரிட்டு வெல்லத் தவறிவிட்டனர். அவ்வாறு அவர்கள் தகுந்த முறையில் போரிட்டு இருந்தால் இப்பொழுது அமைதியுடன் வீற்றிருக்கலாம். சில விதிவிலக்கான உயர்குடி மக்களும் அப் பேராயக் கட்சியில் இருந்தனர். அவர்கள் தி. மு. கழகத்துடனும் மற்றச் சிறந்த எதிர்க் கட்சிச் சார்பாளர்களுடனும் சேர்ந்து இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டிராத மக்களை இரண்டாம்நிலைக் குடி மக்களாகத் தாழ்த்துகின்ற நேர்மையற்ற செயலை எதிர்த்துக் குரல் கொடுத்துள்ளனர்.

இந்தி வெறியர்கள் ஆங்கிலத்தின் இடத்தில் எவ்வளவு விரைவில் கூடுமோ அவ்வளவிற்கு இந்தியைக் கொண்டு வருவதற்கு, நாட்டின் மேன்மை, நாட்டின் சிறப்பு, என்ற அடிப்படையில் நாட்டு ஒருமைப்பாட்டை உயர்த்துவதாகக் கூறி, ஓய்வின்றிப் பாராளு மன்றத்தில் தருக்கமிட்டு முயன்று வந்துள்ளனர். ஆனால் அவர்கள் தங்களுடைய நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு மேற்கொண்ட முறையான [illegible] நாட்டு

ஒருமைப்பாட்டை விரும்பினார்கள் என்பதைவிட, இந்தியைத் தான் வலிவாக விரும்பினார்கள் என்பதை வெளிப்படுத்திற்று. ஈராண்டுகட்கு முன்னர் குடியரசுத் தலைவருடைய இணைப் பாராளுமன்ற உரையின் பொழுது அவர்களுடைய முயற்சிகள் மேல் நிலையடைந்து ஒழுங்கும், பெருமிதச் சால்பும் அற்ற நிகழ்ச்சியை உருவாக்கின. அவை நாட்டினுடைய சிறப்பைக் கருதாததல்லாமல் பாராளுமன்றத்தினுடைய மேன்மையைக் கூடக் கருதவில்லை. பாராளு மன்றமே அவர்கள் மீது அத் தகைய ஒரு தீர்ப்பைக் கொண்டு வந்தது. அவர்கள், தங்கள் மொழியைப் புரிந்து கொள்ளாதவர்கள்மேல் கொண்ட வெறித் தனம் அல்லது கீழ்த்தரமான செய்கைகள் மிகவும் வியப்புக் குரியன. ஏனெனில் அவர்களும் பிற நாட்டினர் ஆட்சியில் துன்பமேற்றவர்கள்தாம். திரு. பிராங்கு அந்தோனி தம்முடைய தாய் மொழி ஆங்கிலம் என்று கூறியபொழுது அவரைத் திணற அடித்த முறையும், இந்தியறியாத அமைச்சர்கள் அவ்விந்தி வெறியர்களை மகிழ்விக்கு முகத்தான் தம்மிடம் எழுதித் தரப் பெற்ற விடைகளை அச்சங்கலந்த குழறுதலோடு இரங்கத் தக்க நிலையில் அவற்றைப் படிக்கும்பொழுது அவர்கள் செய்த களிப் பாரவாரமும், நாட்டு ஒருமைப்பாட்டிற்குத் துணை நிற்கா. பாராளுமன்றிலும் சட்ட மன்றத்திலும் அவர்களுடைய முறை யான, ஒழுங்கும் துணையும் கொண்ட இப் போராட்ட ஏற்பாட் டின் இந்தித் திணிப்பு உள்ளார்ந்த உணர்வோடு தோன்றியதா யிராமல், குருட்டுத்தனமாகத் தோன்றி ஆங்கிலத்தின் மீதுள்ள தப்பெண்ணமாகவேயுள்ளது. அவர்கள், பிற மொழியாளர்கள் தங்கள் தங்கள் தாய் மொழிகளைப் பெற்றிருக்கின்றார்கள்; ஆங் கிலத்தின் வழி பிற மொழியாளர்களுடன் தொடர்பு கொள்கின் றார்கள்; இந்தியிலிருப்பதைவிட மிகச் செப்பமுடைய சிறந்த இலக்கியங்களைப் பெற்றிருக்கின்றார்கள் என்ற பேருண்மையைப் புறக்கணிப்பதாகத் தெரிகின்றது. பாராளுமன்றம், பொருளற்ற பேரிரைச்சலைக் கொண்ட ஓரிடமாக ஆக்கப்படுவதையோ இந்தி பேசாத சார்பாளர்கள், ஊமை; செவிடு போன்று வீற்றிருப்பதையோ அவர்கள் பொருட்படுத்துவதில்லை.

இவ்விந்தி விரும்பிகளில் பெரும்பாலானவர்கள், தாங்கள் ஆங்கிலப் புலமை பெற்றிருந்தும் வெளிப்படையாகவே இந்தி தெரியாத அமைச்சர்களை இந்தியில் கேள்விகள் கேட்டு அவற் றிற்கு விடையை இந்திமொழி பெயர்ப்பாக வற்புறுத்தி வலிந்து பெற்றிருக்கின்றனர். திரு. சுப்பராயன், திரு. சான்–மத்தாய் ஆகிய இருவர்களாலும் அவ்வெறியர்கள் மூக்குடைபட்டனர். ஒருமுறை ஆங்கிலமறிந்த இந்திவெறியர்கள் மத்தாய் அவர் களை, அவருடைய கேள்வியை இந்தியில் கூறுமாறு வற் புறுத்துகையில், அவர் அமைதியாகத் திரும்பி மலையாள மொழி யில் பதிலிறுத்தார். 'இந்தி மொழி' 'ஆவினைப் புரத்தல்' இவை

இரண்டைப் பற்றியும் மிகமிகச் சூடான சொற்போரின் பொழுது ஒருவர், ''அமைச்சர் சுப்பராயன் தொடர்ந்து அமைச்சர் பதவியில் இருக்க வேண்டியிருந்தால் இந்தி கற்றுக் கொள்ளல் வேண்டும்'' எனக் கூறினர். அதற்குச் சுப்பராயன் அவர்கள் ''மதிப்புக்குரிய உறுப்பினர் இந்தியின் மேலும் ஆவின் மேலும், மிகுந்த பற்றுடையவர்போல் தோன்றுகின்றது. அவருடைய ஆ (பசு) என்றிலிருந்து இந்தி பேசத் தொடங்குகின்றதோ அன்றிலிருந்தே நானும் இந்தி பேசத் தொடங்குவேன்'' என்று பதிலிறுத்தார். பாராளு மன்றத் தலைவர் திரு. உக்கும்சிங்கு பொறுமையின் திருஉருவம். அவர் அடிக்கடி இந்திக் கேள்விகளை, இந்தியறியாத சார்பாளர்களின் நன்மையை முன்னிட்டு மொழிபெயர்த்துத் தருவார். ஆனால் இச் செயல் வரவர மிகையாகிக் கடினமானதால், அவர் ஒரேநேரத்தில் மொழிபெயர்க்கும் முறையைச் செயற்படுத்தும் முயற்சியை மேற்கொண்டார். சட்டத்தில் ஏமாற்று!

இந்திதான் முடிவில் அரசியல் மொழியாக இருத்தல் வேண்டும் என்ற திண்ணிய எண்ணத்தோடு இந்தி வெறித்தனத்தை எதிர்த்துப் போராடிய ஒரேயொரு பேராயக் கட்சிக்காரர் காலஞ் சென்ற திரு. சவகர்லால் நேருதான். ''இந்தி அரசியல் மொழியாக இருக்கும் பொழுது இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் துணை மொழியாகத் தொடர்ந்து இருக்கவேண்டும்'' என்ற அவருடைய நாட்டாண்மை வாய்ந்த உரையை, இந்தி வெறியர்களைத் தவிர மற்றெல்லோரும் போற்றினர். ஆனால், அம் மிகப் பெரிய தன்னாண்மை மிக்கவர்கூட அரசியல் பிடிப்புக்காளாகித் தம்முடைய உறுதி மொழிகளைப் பாராளு மன்றச் சட்டப் புத்தகத்தில் குறிப்பதினின்று பிறழ்ந்து விட்டார். அவ்வாறே அரசியல் மொழிபற்றிய சட்டத்தில், ஆங்கிலம் தொடர்ந்து இருத்தல்பற்றிய சொற்றொடரில் 'இருக்கலாம்' (*May*) என்ற சொல்லுக்கு மாறாக 'இருக்க வேண்டும்' (*Shall*) என்ற சொல்லை அமைக்க வேண்டும் என்ற புதுக் கருத்தையும் தள்ளிவிட்டார். வியப்புக்குரிய முறையில் ஆங்கில மொழியின் மேற்கூறிய இரு சொற்களுக்கும் இடையில் வேறுபாடு இல்லை என்று கூறப்பட்டது. பிராங்கு அந்தோனி அவர்கள் அரசியல் மொழிச் சட்டத்தைப்பற்றி விளக்கிக் கூறும் பொழுது ''இந்தி பேசாத மக்களுக்காக அழகுற அமைக்கப் பெற்ற ஏமாற்றுச் சட்டம்'' என்றதில் வியப்பில்லை. கல்வி அமைச்சர் திரு. சக்களாவைத் தவிர நேருவுக்குப் பிறகு மக்கள் அவைத் தலைவருக்கு வலப்புற முன்னணியில் வீற்றிருப்போரில் தென்னக மக்களின் இடையூறுகளைப்பற்றி அக்கறை கொள்வோர் ஒருவருமிலர். திரு. சக்களா, பல்கலைக் கழகக் கொடையின் பொறுப்பாண்மைக் குழு அறிக்கை மீது நடைபெற்ற சொற்போரில் இந்தி வெறியர்களின் கடுஞ் சொற்கள், கொடு நோக்கு

இவற்றினின்றும் தம்மைக் காத்துக்கொண்டதுமன்றித் தாம்இந்தியைத் தென்னக, மேற்கு வங்க மக்களின் தொண்டையில் வலிந்து திணிக்கமாட்டேன் என்று ஐயமறக்கூறி வெளியேறினார். இதனால் கொதிப்புற்ற இந்தி வெறியர்கள், சக்களா மீது, பலதிறப்பட்ட குற்றச் சாட்டுகளைச் சுமத்தினர். ஆனால் அவர்க்குத் துணை செய்யும்படியான கருத்துரைகள் திருவாட்டி, யசோதரா அம்மையார் (பேராயக் கட்சி) திரு. கப்பூர் சிங்கு (சுதந்திரா இவர்களிடமிருந்து கிடைத்த போதிலும், திரு. சக்களா தனியொருவராகவே அப்போரில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிகின்றது.

பாராளு மன்ற ஒழுங்கு நடவடிக்கைக் குழுவின் பரிந்துரையினால், 1963–இல் குடியரசுத் தலைவர் உரையின் பொழுது நடத்திய ஆர்ப்பாட்டத்திற்கு இந்தி வெறியர்களின்மீது நடவடிக்கை எடுக்கப்பெற்ற போதிலும், இந்திக்குத் துணை நிற்பாரில் சிலர், சென்ற ஆண்டில் குடியரசுத் தலைவர் திரு. இராதாக்கிருட்டிணன் அவர்கட்கு, இணை மன்றத் தொடக்க உரையின் பொழுது, அவருடைய பேச்சை இந்தியிலோ தெலுங்கிலோதான் நிகழ்த்த வேண்டும் என்றும், தவறினால் முன் ஆண்டைப் போன்றே செயல் முறைகள் மீண்டும் கையாளப் பெறும் என்றும் அச்சுறுத்தல் கடிதம் எழுதியுள்ளனர். இது மிகையான உறுப்பினர்களுடையே உள்ளக் கொதிப்பைத் தோற்றுவித்தது. அவர்கள் இதற்குப் பயனுடையதும், விரைவானதுமான செயல் முறையினை மேற்கொள்ளல் வேண்டும் என்று வற்புறுத்தினர். தெற்குப் பகுதியினின்று சென்ற உறுப்பினர்கள் தாங்கள் கடந்த பத்து ஆண்டுகளாகக் காலஞ்சென்ற இராசேந்தர பிரசாது அவர்கள் தொடக்க உரை நிகழ்த்திய பொழுதெல்லாம், சிறிது கூட முணு முணுப்பின்றி (மரக் கட்டைகள் போன்று) வீற்றிருந்ததைச் சுட்டிக் காட்டி, இந்தி வெறியர்களும் தென்னகத்திலிருந்து வந்த இந்தி தெரியாத ஒரு குடியரசுத் தலைவருடைய உரையைச் சற்றுப் பொறுத்துக் கொள்ளல் வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர் குடியரசுத் தலைவர் எதிர்பாராத நிலையில் கண் அறுவை மருத்துவம் பெற்றதாலும், தவிர்க்கவியலாத முறையில் அவர், ‘வரவு செலவுத் திட்டப் பட்டியல்’ கூட்டத்தில் தொடக்க உரை நிகழ்த்த இயலாமல் தங்க நேரிட்டமையாலும் அந்நெருக்கடி தவிர்க்கப் பெற்றது. துணைத் தலைவர் திரு. சாகிர் உசெயின் பேச்சை இந்தியில் படிக்க மற்றச் செயல் முறைகள் அமைதியாக நடை பெற்றன.

இவ்வாண்டு குடியரசுத் தலைவர், தம்முடைய சொற்பொழிவை ஆங்கிலத்தில் நிகழ்த்துவாராகில், இந்தி வெறியர்கள் என்ன செய்வார்கள் என்பது ஒருவர்க்கும் தெரியாது. மீண்டும்

போர்த்தீ!

மு மகிழரசன்.

பாவலன் அரற்றியறைதல்:-

பொன்றாத நற்றமிழ்க்குப் பொல்லாங்கு வந்தெய்த
இன்றும் புல்லர்கள் இந்தி திணிப்பதைநீ
ஒன்றாது சீறி உயிர்மாயத் தீ புகுந்து
சென்றாயே செந்தமிழா! ஓ!சின்னச் சாமி!
சிலசெய்தி கேளாயோ ஓ!சின்னச் சாமி!

குடியரசு நாளில் கொடுந்துயரம் எய்த
அடியெடுத்து வைத்த தறுபத்தைந் தாமாண்டு;
அடிவைத்த இந்தி அரக்கியை ஓட்ட
அடியெடுத்து முன்வைத்தார் ஓ!சின்னச் சாமி!
அஞ்சாத் தமிழ்மறவர் ஓ!சின்னச் சாமி!

செந்தமிழைக் காக்கச் செழுந்தீயில் நீபுகுந்து
வெந்து மடிந்திட்ட வித்துக்கு நீராகிச்
செந்தமிழ்ச் செல்வன் சிவலிங்கம் தீபுகுந்த
அந்தச்சொல் கேட்டாயோ! ஓ!சின்னச் சாமி!
அவலமெலாம் கேட்டாயோ! ஓ!சின்னச் சாமி!

குரங்கு நமையாளக் கோட்டை புகுந்து
தரங்கெட்ட தாட்சி; தமிழ்மொழிச்சீர் குன்றி
இரங்கு நிலையெய்த இந்தி வரவே
அரங்கனும் தீபுகுந்தான் ஓ!சின்னச் சாமி!
அதைத்திரிப்பார் ஆட்சியினர் ஓ!சின்னச் சாமி!

(முன் பக்கத் தொடர்ச்சி)

ஒருமுறை இந்தி வெறியர்கள் சிலர் குடியரசுத்தலைவர் குறைந்த பக்கல் தெலுங்கிலாவது உரை நிகழ்த்தாவிட்டால், தொல்லைகள் விளைவிப்போம் என்று அறிவித்துள்ளனர். அவர்களுடைய எண்ணத்தைப் போன்றே இந்தி அரசியல் மொழியாகத் திணிக்கப்பெற்று, முயற்சி நிறைவேறியதால் அவர்கள் மன நிறைவு கொள்ளல் வேண்டும். ஆனால் அவர்களுடைய எண்ணங்கள் யாவும் அவர்கள் சொல்வதுபோல் இருப்பதில்லை. எவ்வழியேனும் அவர்கள் கடைப்பிடிக்கும் பொன் மொழிகள் ''ஆங்கிலத்தைக் கேட்காதே! ஆங்கிலத்தைப் பேசாதே! ஆங்கிலத்தைக் கற்காதே''! என்பவைதாம். திரு. சக்களா கூறியதுபோல் ஓர் இந்தியன் மற்றொருவனுடன் பேசும் பொழுது மொழி பெயர்ப்பாளர் தேவைப்பட வேண்டிய நிலைக்குச் சூழ்நிலை அமைந்திருக்கின்றது.

எரிபுகுந்து நீமூட்டி விட்டதீ எங்கள்
குருதியிலே சூடாய்க் கொலையுணர்வு பொங்கித்
தருகின்ற தாலே தமிழினத்தை மாய்க்க
வரும்பகையை மாய்க்கின்றோம் ஓ!சின்னச் சாமி!
வளர்க்கின்றோம் போர்த்தீயை ஓ!சின்னச் சாமி!

முன்னாளே மாணவர் மாண்பினால் இந்திநூல்
விண்ணாரச் செந்தீயில் வெந்தொழிந்த காட்சியினைக்
கண்ணாரக் கண்டேன்; களிகொண்டேன்; போர்க்குரல்
திண்ணமாய்க் கேட்டேனே! ஓ!சின்னச் சாமி!
தமிழர் தலைநிமிர்ந்தார் ஓ!சின்னச் சாமி!

அடங்காத இந்தி அரக்கியை இங்கே
கொடும்பாவி கட்டிக் கொளுத்தினார் தீயில்
அடலேறு கூட்டத்தார் ஆர்த்திட்ட ஆர்ப்பில்
வடநா டதிர்ந்ததே! ஓ!சின்னச் சாமி!
வெறியர் நடுங்கினரே! ஓ!சின்னச் சாமி!

நாடாளும் மூடரே நம்தமிழ்க்குக் கேடானார்
பீடாளும் பைந்தமிழைக் காக்க முனைந்தவர்க்குக்
கோடான கோடி கொடுமைகளைச்செய்த
கேடெல்லாம் கேட்டாயோ ஓ!சின்னச் சாமி!
கெடுங்காலம் ஆள்வோர்க்கே! ஓ!சின்னச் சாமி!

குண்டால் கொலையுண்டார் என்றஃதைக் கூறவோ!
கண்ணீர்ப் புகையால் கலங்கியதைக் கூறவோ!
எண்ணத் தொலையா இடையூற்றைக் கூறவோ!
கண்டவெலாம் கூறவோ ஓ!சின்னச் சாமி!
கேட்டவெலாம் கூறவோ ஓ!சின்னச் சாமி!

சொன்முறையால் காப்பளித்துச் செய்முறையால் தீங்கிழைத்து
வன்முறையால் வந்தடக்கும் வெறிமிகுக்கும் காவலரை,
நன்முறையால் நாடாள்வர் என்றுமிக நம்பியவர்
என்முறையால் ஏற்றிருப்பர் ஓ!சின்னச் சாமி!
எதிர்க்காமல் யாரிருப்பர் ஓ!சின்னச் சாமி!

மக்கள் விழிப்பு:

அந்தோ! கொடுமைஇஃ தந்தோ! கொடுமைகாண்!
இந்தி திணித்ததுவும், ஏற்க மறுத்தஎமை
நொந்து மடியத் தடியால் நொறுக்கியதும்,
வெந்தபுணில் வெஞ்சொல்வேல் பாய்ச்சியதும் வெங்கொடுமை!

அழற் காட்சி:– (ஒருவன்)

அங்கெரியில் அண்ணல் தமிழ்ச்சின்னச் சாமியும்
செங்கொழுந்தீ புக்க சிவலிங்கச் செம்மலும்
பொங்கெரியில் பொங்கிமறம் பேசும் அரங்கனும்
தங்கிய செந்தீத் தழல்தெரியக் காண்மினோ!

போர் உணர்வு: (மற்றொருவன்)

செந்தமிழீர்! செந்தமிழீர்! மானம் செறிதமிழீர்
நந்தம் உரிமையை நாம்காப்போம் வம்மினோ;
எந்தக் கொடுமை எவர்வந் திழைத்தாலும்
இந்தித் திணிப்பை எதிர்த்தழிப்போம் வம்மினோ.
இன்பத் தமிழ்க்குயிரை ஈந்திடுவோம் வம்மினோ;

செந்தமிழ் நாட்டின் அணைப்பில் செழித்திருக்கும்
நந்தமிழை ஏய்த்து நலங்கெடுக்கும் நாட்டமுடன்
வந்த பகையைநாம் வீழ்த்துவோம் வம்மினோ
வண்டமிழர் நம்திறலைக் காட்டுவோம் வம்மினோ!

அது கேட்டு,

ஆர்த்தனர் மக்கள்; அரசிழைக்கும் அக்கொடுமை
கூர்த்தனர்; நெஞ்சம் கொதித்தனர்; சேர்ந்தினி
வந்தீமின் எல்லீரும் வாளேந்திப் போர்க்களம்;
இந்தி எதிர்த்தழிப்போம் என்று.

மறவர் சூளுரைகள்:-

அன்னைத் தமிழுக்கென் ஆவி! களம்நோக்கி
முன்வைத்த கால்களைப் பின்வைக்க மாட்டேன்நான்;

என்பிற் குருதி இருக்கும் இறுதிவரை
அன்பிற் கலந்தஎன் அன்னை இடர்தவீர்ப்பேன்;

கண்ணீர்ப் புகைக்கும் கயவர் மிரட்டலுக்கும்
குண்டு, தடியடிக்கும் நெஞ்சம் குலையேம்யாம்;

கால்முறினும் கைம்முறினும் கண்ணறினும் கையிருக்கும்
வேல்முறினும் வாள்முறினும் பின்வாங்கேன் கேட்டமின்;

முத்தமிழ் காக்க முனைந்தநம் காதலர்தோள்
புத்துணர்வு மீறத் துணைநிற்போம் தோழி!நாம்;

ஒடுங்கும் முதுமையிலும் ஒண்டமிழைக் காக்க
ஒடுங்கா உளம்கொண்டேம்; ஒன்னார்க் குடையேம்யாம்;

எல்லீரும் கேண்மின்;
ஒப்பிலா நந்தம் உயிரனைய ஒண்டமிழைக்
காக்கத்தான் சூளுரைத்தோம்; ஒன்னார் களம்எங்கே?
நோக்கிப் புறப்படுவோம் நாம்.

மக்கள் எழுச்சி:

கொஞ்சிக்கொஞ்சிக் கூறினோமே கொஞ்சமேனும்
கேட்டதா?

கெஞ்சிக்கெஞ்சிக் கேட்டகாலை கேண்மைகாண
வேட்டதா?

மிஞ்சிமிஞ்சி வந்தமந்தி பஞ்சாய்ப்போக ஓட்டுவோம்;
அஞ்சிஅஞ்சி ஓடஓட அன்னைமொழி நாட்டுவோம்!

மாற்றவர்தம் கால்பிடிப்போர் மானமுள்ள மாந்தரா?
ஏற்றமென்றும் செய்திடார்தார் எங்களுக்கு வேந்தரா?
நேற்றுரைத்த 'நா'மறந்து நெஞ்சமாறி ஓடியோர்,
ஆற்றிலோர்கால் சேற்றிலோர்கால் ஆகியோரும் பேடியர்!

நந்தமிழ்க்குக் கேடுசெய்ய நாட்டங்கொண்ட நாய்களை
சொந்தமாக எண்ணிஎண்ணிப் பல்லிளித்துப் பாங்குடன்
இந்தியாள வேண்டுமென்ற இங்கிருக்கும் புல்லரை
முந்திமுந்தி வெட்டிவெட்டி மாய்த்துவிட்டுச் செல்லுவோம்.

நரிகளைந்தும் நாயிரண்டும் பேயிரண்டும் வாய்த்தஓர்
அரியொடெல்லாம் கூடித்தம்மை ஆள்தலைவன் ஆய்ந்திடில்
நரியின்கூட்டம் மிக்கதென்றே நாட்டிவிட்ட புன்மையால்
அரியடங்கி வாழுமோ? தன் ஆண்மையற்றுப் போகுமோ?

இன்றிருப்பார் நாளையில்லை இந்த உண்மை எண்ணயே
என்றுமுள்ள தென்றமிழ்க்கோர் இன்னலெய்தி டாமலே
நன்றுகாத்தல் நம்பொறுப்பு நாமறிந்தஞ் சாமலே
பொன்றுயிர்க்கு ழன்றிடாமல் பூந்தமிழைக் காப்பமே!

ஆங்கு,
பொங்கும் தமிழ்மறவர் போர்க்குரல் மேலோங்கி
எங்கும் இசைக்கக்கேட் டின்புற்றுள் - இங்கென்
குழந்தைகட் கூறின்றிக் காண்குவல் என் றன்னை
வழங்கினுள் வெற்றிபெற வாழ்த்து! *

தென்மொழி, கடலூர்-2.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய விதழ்.
ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு.	வெளி நாடு.
தனி இதழ்	50 காசு	60 காசு	75 காசு.
ஆண்டுக் கட்டணம்.	6 உருபா.	7-25 உருபா.	9 உருபா.

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

விளம்பரம்

அட்டை நான்காம் பக்கம்.	(இரு வண்ணம்)	100 உருபா.
,, ,, ,,	(ஒரு வண்ணம்)	75 உருபா.
உள்ளே முழுப் பக்கம்.		50 உருபா.
,, அரைப் பக்கம்.		25 உருபா.

தொடர்ந்த விளம்பரங்கட்கு எழுதுங்கள்.

ஓரிதழுக்கு ஓர் உருபா முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

ஆட்சிமொழி எது?

தமிழ்க் காதலன்

இந்திமொழி வலுக்கட்டாயமாக அரசியல் சட்டத்தில் திணிக்கப்பட்டு ஆட்சி மொழியாகச் சட்டத்தின் வழியாக நிலை நிறுத்தப்பெறத் தில்லி அரசினரும், இந்தி வெறியரும் படாதபாடு படுகின்றனர். மானங்கெட்ட தமிழர் சிலரும் வீடணக் கட்சியினரும் இந்திப் பேயின் வால்பிடித்து நாயடிமையாகிப் பேயாட்டமாடியிருக்கின்றனர். அதனால்தான், சிவலிங்கம், அரங்கநாதன், சின்னச்சாமி, மாணவன் இராசேந்திரன், கீரனூர் முத்து போன்ற ஐந்து தமிழ்ப்பற்றுள்ள இளைஞர்கள் தம்முயிரைத் தமிழ் காக்கப் பலியிட்டிருக்கின்றனர். மொழி காக்கும் போரில் முன்னணியாக உயிர் ஈந்த வள்ளல் எனத் தமிழ் நாட்டு வரலாறு இப்பேராண்மை அரிமாக்களைப் போற்றி வாழ்த்தும்; வணங்கும். இம்மாமறவர்தம் கொள்கையை நிலைநாட்ட இன்றைய ஆட்சியாளர் இசையவில்லை. இந்தியைப் பரப்பச் சென்ற ஆண்டு இருபது இலக்கம் உருபாக்களைக் கொட்டியழுதிருக்கிறது நடுவணரசு. 1965-ஆம் ஆண்டு இந்தியைப் பரப்ப 1,00,00,000 உருபாக்களை நடுவணரசு கொட்டிச் செலவிடத் திட்டமிட்டிருக்கிறது. சிறுபான்மையோர் பேசும் இந்திக்கு இவ்வளவு ஊக்கமும் ஆக்கமும் தரப்படுகிறது. உயர்தனிச் செந்தமிழ் மொழிக்குச் செல்லாக் காசும் செலவழிக்கவில்லை. இந்நிலையில் நிகரமையம் (*Socialism*) என முழங்குவதில் ஒரு குறைவும் இல்லை!

தமிழ்நாட்டு ஆண்மையும், ஆற்றலும் மிக்க மாணவ அரிமாக்கள் இந்தியை எதிர்த்துப் பொங்கி எழுந்து பெரும் புரட்சி விளைவித்துள்ளனர்! பண்டைத் தமிழரின் மறமாண்பு புறநானூறாக விரிந்தது! தில்லி அரசு திகைத்து அஞ்சுமளவுக்குத் தமிழ் மாணவர் சீறி எழுந்து இந்திப்பேயை விரட்டுகின்றனர். இம் மாபெரும் புரட்சியை நசுக்க அரசினர் சூழ்ச்சித் திட்டமிட்டு முயல்கின்றனர். நாட்டை விட மொழி முதன்மையானது. மொழியைக் காக்க விழிப்போடு தமிழிளைஞர்கள் பாடுபடல் வேண்டும். மொழிபற்றி ஈமன் டிவேலரா கூறிய கருத்தைத் தமிழுலகம் என்றென்றும் மறக்கவே கூடாது. "உரிமையற்ற மொழியைத் தேர்ந்தெடுப்பதா; மொழியை விட்டு உரிமை வாழ்வைத் தேர்ந்தெடுப்பதா? என்ற நிலை அமைந்தால் நான் திண்ணமாக முன்னதையே (உரிமை இழந்து மொழியையே) தேர்ந்தெடுப்பேன்," என்றார் ஈமன்டிவேலரா, ("If asked to choose the language without freedom or the freedom without language, I shall certainly choose the former") ஆகவே, மொழியே இன்றியமையாதது; நாடும் உரிமையும்

கூட மொழிக்குப் பின்னரே மதிக்கத்தக்கன என்பதைத் தமிழர் இப்பொழுது மறக்கக் கூடாது.

இந்திய மாநிலம் பல்வகைப் பண்பாடுகளும், பல்வேறு மொழிகளும், பல மாறுதல்களும் அமைந்த நாகரிகங்களும், பல வேற்றுமைகளுடைய பழக்க வழக்க ஒழுச்கங்களும், பல இனங்களும் அமைந்த ஒரு துணைக் கண்டம் பண்டைக் காலத்தில் தமிழ்நாடு உரிமை வாழ்வில் திளைத்திருந்தது. தமிழர் உயிரினும் மேலாக உரிமையையும் மொழியையும் போற்றினர். இத்தகு நாட்டில் ஒரே மொழி பொது மொழியாகவும், ஆட்சி மொழயாகவுர் இருக்க வேண்டுமெனக் கூறுவதும், சட்டமியற்று வதும், கற்பிப்பதும் திணிப்பதும், கரவுள்ளத்தோடு பசப்பித் திணிப்பதும் கொடுமையான கயமையாகும். கொலையைவிடக் கொடிய வழுவாகும். தமிழ் நாட்டினர் இந்தியாவின் பொது மொழியாக-ஊடக மொழியாக-ஆங்கிலமே என்றும் நிலைபெற வேண்டுமென வற்புறுத்துகின்றனர். ஆயின் நடுவண் அரசு இந்தியே பொதுமொழியென மறைமுகமாகவும், நேரிடையாக வும், கள்ளமாகவும், குள்ள நரித் தன்மையோடும் பிற தாய் மொழியினர்மீது வன்மையாகத் திணிக்கின்றது. இஃது ஒரு குடியாட்சி நாட்டுக்குரிய பண்பன்று. இந்தி மொழியினர் பிற தாய்மொழி மரபினரைத் தம் அடிமைகளாக ஆக்கவே பாடுபடு கின்றனர். இதை வெளிப்படையாகச் சொல்லாமல் மறைமுக மாகச் செயல் மூலமாக மொழித்திணிப்பினுல் வலியுறுத்துகின்ற னர். சட்டத்தில் இந்தி ஆட்சிமொழி என எழுதிக் கொண்டதா லேயே அது ஆட்சி மொழியாகிவிட வேண்டுமென்பது வெறி பிடித்த கொள்கையே. அரசியல் சட்டம் என்பது மாந்தரால், மாந்தர் நலனுக்காக ஆக்கப்பட்டதே தவிர மாற்ற முடியாத கட்டளையன்று. பலமுறை மாறக் கூடியதே சட்டம்! உலகநாடு களில் அரசியல் சட்டங்கள் எவ்வளவோ முறை மாறியுள்ளன. இந்திய அரசியல் சட்டம் குறுகிய கால எல்லையில் பதினேழு முறை திருத்தப்பட்டுள்ளது அதேபோல, 'இந்தியே ஆட்சி மொழி' என்னும் பகுதியை விலக்கி என்றென்றும் ஒழித்துக்கட்ட வேண்டியதே உடனே அரசினர் செய்ய வேண்டிய முதற் கடமையாம். இம்மொழிச் சிக்கலில் திட்டவட்டமான முடிவை இப்பொழுதே செய்து தீர்க்கவேண்டும். தமிழும், தமிழ்ப் பண்பும், தமிழ் மரபும், தமிழினமும், தமிழ் நாகரிகமும் வாழ வேண்டுமானுல் இந்தி ஒழிக்கப்பட வேண்டும். தமிழறிஞர் களே! தமிழ் மாணவர்களே! தமிழகப் பெருமக்களே! தமிழ்ப் புலவர்களே! அரசியலாளர்களே! தமிழர்க்கு ஆங்கிலமும், தீந்தமிழுமே போதும். இந்தி என்னும் புன்மொழி வேண்டவே வேண்டா என்பதை உறுதியாக – இறுதியாக – அரசுக்கு அறிவித்து விடுவோம். இதுவே காலத்தால் தாய்மொழிக்குச் செய்யும் ஒப்பற்ற தொண்டு. ஆங்கிலேயன் ஆண்ட பொழுது

இவர்களுக்குமா

ஆட்சி மொழிச் சட்டம் புரியவில்லை!

(அரசினரின் ஆட்சிமொழிச் சட்டத்தைத் தென்னக மக்கள் புரிந்து கொள்ளவே இல்லை என்று தலைமையமைச்சர் சாத்திரியிலிருந்து விஜேபா வரை, தமக்குத்தாம் அரசியலறிவு மிகுதியாக உள்ளது போல் பேசிவருகின்றனர். அவர்களின் பேச்சு பொருளற்றது என்பதையும், ஏமாற்று நிறைந்தது என்பதையும் கீழ்க்கண்ட அறிஞர்கள் பற்பல இடங்களில், பற்பல வகைகளில் விளக்கிப் பேசியும், எழுதியும் வருகின்றனர். அரசியல் சட்டம் பொது மக்களுக்குத்தாம் புரியவில்லை; இவர்களுக்குமா புரியவில்லை? அப்படியானல் அவ்வாறு எவரும் புரிந்து கொள்ளாமல் குழப்பங்களை விளைவிக்கும் அச்சட்டப் பகுதியை ஏன் அகற்றுதல் கூடாது?
-ஆர்.)

"இந்தியா ஒருமொழி கொண்ட ஒரே நாடாக என்றும் இருந்ததில்லை. தனித்தனி மொழியும் தனித்தனி வரலாற்றுச் சிறப்பும் கொண்ட தேசிய இனங்கள் பல கொண்ட நாடே இந்தியா. இவை இந்தியா என்ற பெயரில்லாமலேயே தத்தம் கலை, நாகரிகங்களை உலகில் பரப்பியும், பிற நாட்டுக் கலை நாகரிகங்களோடு தொடர்பு கொண்டும் உலகறிய விளங்கின. சமயக் கருத்தாலும், பின்னர் ஆங்கிலத்தாலும், இந்தியாவில் ஓரளவு ஒருமைப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்தியைப் புகுத்தினல் இவ்வொற்றுமை அழிந்துபோம். தமிழர்க்கு இந்தி முழுக்க முழுக்க வேற்று மொழியேயாகும். தென்னட்டில் தாயின் கருவிலிருக்கும் சேய் முதல் யாருமே இந்தியை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. இந்தியால் ஒருமைப்பாட்டைப் புகுத்தல் இயலாது. கலவைச் செயற்கைமொழியான அதற்கு அத்தகுதி இல்லை. சட்டத்தைக் காட்டி இங்கு எவரையும் அஞ்ச வைக்கமுடியாது.

(முன் பக்கத் தொடர்ச்சி)

ஆங்கிலம் திணித்தான். வட நாட்டான் ஆளும்பொழுது இந்தி திணிக்கின்ருன். இரண்டுக்கும் என்ன வேற்றுமை? இனி எம் மொழியின் தாக்குதலும் தமிழ்ச் செம்மொழிக்கு நேரவிடக் கூடாது. பேரறிஞர்கள், பேராசிரியர்கள், தமிழக எதிர்க் கட்சிகள், தமிழக மாணவர் உலகம், தமிழ் மன்பதை, தமிழக ஏடுகள், இதழ்கள் எல்லாம் எதிர்க்கும் பாழ் இந்தி ஒழிக! ஒழிக! என முழங்குவோம்! தாய் மொழியைக் காப்போம்! இந்தி வெறியை ஒழிப்போம்! வீடணர்களும் அனுமன்களும் தமிழ் நாட்டிலில்லாமல் வீழ்த்துவோம். தமிழினமே ஒன்றுபடு! ஒன்றுபடு!

*

மக்களின் உண்மையான மனநிலையினைச் சற்றும் மதியாமல் ஏட்டில் யாரோ சிலர் எழுதி வைத்ததைச் சட்டமென்று கொண்டு அரசினர் நடவடிக்கை எடுப்பராயின், தென்னாடு முழுமையுமே சிறைச் சாலையாக மாறிவிடும் என எச்சரிக்கின்றேன். தமிழுக்கு மேம்பட்ட மொழியே இல்லை. தமிழிலிருந்து தான் மற்ற மொழிகள் பிறந்தன. அரசினர்க்கு மகிழ்வூட்டுதற்காக இந்தி கற்கும் அல்லது பேசும் தமிழனின் உடலில் ஓடும் இந்திக் குருதியை எடுத்து விட்டுத் தமிழ்க் குருதி பாய்ச்ச வேண்டும். இந்தியைக் கட்டாயப் படுத்தினால், மாநில உணர்ச்சி தலைதூக்கி இந்தியர் என்ற உணர்ச்சியே அற்றுப்போம்.

—கோவைத் தொழில் அறிஞர், திரு. கோ. துரைசாமி.

இந்தி பெரும்பான்மை மொழி என்று காரணம் காட்டி அதனை இந்தியாவின் ஆட்சி மொழியாக்குகின்றனர். உண்மையில் இந்தி பேசுபவரினும் இந்தி பேசாதார் எண்ணிக்கை மிகுதியாகும். தனித்தனி மொழிக் கூட்டமாக எடுத்துக் கொண்டு இந்திமொழி பேசுவார் தொகை மிகுதி என்று கணக்குக் காட்டுவது பொருத்தமற்றது. இந்தி பேசுவாரிடையேயும் ஒரு பகுதியினர் மொழி பிற பகுதியினருக்கு விளங்கவில்லை. இந்தி மொழியில் சீரிய இலக்கியங்களோ, பழ மரபுகளோ இல்லை இத்தகைய மொழியைத் திணிப்பதால் நாட்டின் ஒருமைப்பாடு சீர்குலையும். இந்தி பேசாத மக்களிடையே வெறுப்புணர்ச்சியும். பொருமையும், தாம் திக்கற்றவர்களாகி விட்டோம் என்ற உணர்ச்சியும் வளரக் கூடும். ஒருமைப்பாட்டை உண்டாக்கும் ஆற்றல் ஆங்கிலத்திற்கே உண்டு. அதுமட்டுமன்று, ஆங்கிலம் என்னும் பலகணி வாயிலாக நாம் உலகமுழுவதையுமே காணலாம் உலக நாடுகளின் அரங்கில் நமக்குப் பாதுகாப்பான இடம் அமைத்துத் தருவது ஆங்கிலமே. 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' எனும் பரந்த நோக்கம் தமிழர்க்கு இருப்பதாலேயே எதையும் நம்மேல் திணிக்கலாம் என்று நினைப்பவர் அறிவுடையவராகார். தமிழகத்தில் தமிழையே ஆட்சி மொழியாகக் கொள்வோம். ஆங்கிலம் இந்திய ஆட்சி மொழியாக இருக்கட்டும்.

—பர் பொ. தி. இராசன்.

இந்திபேசாத பகுதிகள் ஒருபுறமிருக்க, பீகார், உத்தரப் பிரதேசம் போன்ற இந்தி பேசும் பகுதிகளில் கூட, அவ்வம் மாநில அதிகாரிகள் இந்தியை வைத்துக்கொள்ள அணியமாயில்லை உத்தரப் பிரதேசத்திலேயே ஒரு பகுதியினர் பேசும் இந்தி மற்றொரு பகுதியினருக்குப் புரியாமலிருக்கிறது. குடியரசு ஆட்சியில் பொதுமக்களின் மொழியே ஆட்சி மொழியாக இருக்க முடியும். ஆதலின் மாநில நடப்புகள் அவ்வவ் வட்டார மொழிகளிலேயே இருத்தல் வேண்டும்.

—முன்னாளமைச்சர் திரு. சகசீவன்ராம்.

இந்தியை ஆட்சி மொழியாக்குவது எனும் பாராளுமன்ற முடிவே இத்தகைய இடர்ப்பாட்டு நிலையைத் தோற்றுவித்து விட்டது. இந்தி மொழி ஆட்சி மொழியானால் இந்தி மொழி வல்லாண்மை ஏற்பட்டுவிடும் என்ற தென்னாட்டு மக்களின் அச்சம் காரணமற்றதன்று. எனவே தென்னாட்டு மக்களின் எதிர்ப்புகளையும், சினத்தையும் புறக்கணிப்பதும், இவற்றால் ஒன்றும் ஏற்படாது என நினைப்பதும் தவறு. பேரிடர்ப்பாடு நேரவுள்ளது. 14 தேசிய மொழிகட்கும் ஒத்த மதிப்பளித்தல் ஒன்றே இதைச் சமாளிக்கும் வழி. இந்தி வல்லாண்மையால் இந்தி பேசா மக்களின் பண்பாடு இறுதியில் ஒழிக்கப்படும் என்பதே தென்னக மக்களின் அச்சம்.

நிகரமைக் கட்சித் தலைவர். திரு. எசு. எம். சோசி,
(சம்யுக்த சோசலிஃச்டு)

''இந்தித் திணிப்பை வன்மையாக எதிர்க்கின்றோம். பொது மொழியாக ஆங்கிலமே இருத்தல் வேண்டும். அரசியல் சட்டத்தைத் திருத்துக!''

–திருவனந்தபுரம் வழக்குரைஞர் கழகம்.

இந்தியை இணைப்பு மொழியாக்கலாம் என்ற தலைமை அமைச்சர் நோக்கத்தின் விளைவாக, பல்கலைக் கழகங்களில் இந்தி மொழியினர் அல்லா இளைஞர்கள் முற்றிலும் புதிய கல்வி முறைக்கு உள்ளாக நேரிடும். அதனாலேயே மாணவர்கள் இந்தியை எதிர்க்கின்றனர். தென்னாட்டிலுள்ள அறிவாளிகள் இரண்டாந்தரக் குடிகளாக இருத்தலை விரும்பவில்லை. தென்னாட்டு அமைச்சர்கள் கட்சிக் கருத்துடன் நில்லாமல், மனம் விட்டுப் பேசாத வரை நடுவணரசும், வடவரும் இங்குள்ள நிலையை உணர்தல் முடியாது. ஆட்சி மொழியை மாற்ற அரசியல் சட்டம் அதிகாரம் அளிக்கின்றது என்பதோ, இந்திக்கு முதலமைச்சர்களின் ஒப்புதல் பெறப்பட்டதென்பதோ, இந்திச் சிக்கலுக்கு முடிவுகட்டிவிட்டதாகிவிடாது. சிக்கலைத் தீர்க்கவும் செய்யாது. அரசியல் சட்டத்தின் 17–ஆம் பிரிவை நீக்காவிட்டாலும், அதைக் கால வரையறையின்றி நிறுத்தியாவது வைத்தல் வேண்டும். அரசியல் சட்டம் பன்முறை திருத்தப் பெற்று வந்துள்ளது. ஆதலின் இப்பொழுது 17–ஆம் பிரிவைக் கைவிடுதற்கில்லை என்று வழக்கிடல் முடியாது. சென்னையில் கையாளப்பெற்ற கடுமையான அடக்கு முறைகட்குக் காரணம், ஆளும் கட்சியினருக்குத் தி. மு. கழகத்தின் மீதுள்ள வெறுப்புணர்ச்சியும், அதன் விளைவாக எழுந்த குழப்பமுமேயாகும். கல்லூரி மாணவர்களை நடத்திய முறை வருந்தத்தக்கது. அது பேராயக் கட்சிக்கோ, அல்லது நாட்டுக்கோ நன்மையாகாது''

திரு. இராசாசி (சனவரி 28)

வேற்று நாட்டினர் ஆட்சியில்தான் கொடுங்கோன்மை இருக்குமென்றும் நம்நாட்டினர் ஆட்சியில் அவ்வாறிராதென்றும் நினைக்கின்றோம். இது தவறு. ஒரு வகை மயக்கமுமாகும். ஆட்சியாளர் தாங்கள் செய்வதனைத்தும் நன்மைக்கே என்று கூறி இம் மயக்கத்தைப் பரப்புகின்றனர். வெள்ளையர்களும் இவ்வாறுதானே கூறிக் கொண்டிருந்தனர்! வேற்று நாட்டவரே மற்றொரு நாட்டைக் கொடுமைப்படுத்துவர் என்ற தப்பெண்ணம் மக்கள் மனத்திலிருந்து அகன்றாலன்றி நம் சிக்கல்கட்கு விடை காணல் முடியாது. —திரு. கிருபளானி.

"இந்தியை ஆட்சி மொழி ஆக்குவதன் விளைவாக, நாடு இந்தி பேசப் பெறும் மண்டிலம், பேசப்பெறாத மண்டிலம் என இரண்டாகப் பிரிக்கப்படும். இஃது ஒருமைப்பாட்டுக்குத் தீங்கு விளைவிக்கும். மாநில, நடுவண் அரசுகட்கிடையில் தொடர்பு மொழியாகும் தகுதி ஆங்கிலத்தோடு இந்திக்கும் வழங்கப்பட்டிருக்கையில், தேசிய மொழிகள் பிறவற்றுக்கும் ஏன் அளிக்கப்படல் கூடாது? இந்திக்கொத்த உரிமையை நாட்டின் பிறமொழிகட்கும் வழங்கல் வேண்டும். இல்லையேல் நாடு கடுமையாகப் பிளவுண்டுபோம். இந்திக்கு உயரிடம் அளித்ததன் மூலம் பிற மொழிகள் இரண்டாந்தர மொழிகளாகத் தள்ளுண்டு போயின"
—மேற்கு வங்க எழுத்தாளர் முப்பது பெயரின் அறிக்கை.

மொழி ஒற்றுமையை உருவாக்கும் கருவி. எந்த மொழியாவது நாட்டின் ஒற்றுமையைச் சீர்குலைக்குமானால் அதைக் கைவிடுவதே நல்லது. மொழிச் சிக்கலிலிருந்து பிரிவினை உணர்ச்சி பரவியுள்ளது. இந்தியா என்றுமே அரசியல் அளவில் ஒன்றாக இருந்ததில்லை. மக்கள் ஒருவரை யொருவர் புரிந்து கொள்ள ஆங்கிலம் உதவி புரிந்தது. எந்த மொழியையும் பிறர் மீது சுமத்தலாகாது. இந்தியால் தங்கள் வாழ்க்கை வாய்ப்புகள் தடைப்படும் என்று தென்னாட்டார் அஞ்சுகின்றனர். எனவே இதில் பொருளியல் சிக்கலும் அடங்கியுள்ளது ஆதலின் இம் மொழிச் சிக்கலுக்கு இடம் தரல் கூடாது"
—நடுவணமைச்சர். திரு. சஞ்சீவி.

நடுவணரசு ஓர் இருதலைப் பூதம்! ஒரு புறம் ஆங்கிலத்தை ஆட்சி மொழியாக்கப் பார்க்கிறது. அதேபொழுது இந்தியையும் ஆட்சி மொழியாக்கப் பார்க்கிறது. இந்த இருதலைப் பூதத்தை வெட்டி வீழ்த்தல் வேண்டும். —பர். உலோகியா.

'இந்தி ஆட்சி மொழியாவதைக் கடுமையாக எதிர்க்கின்றோம். அத்திட்டத்தை உடனே கைவிடுக!"
—மதுரை மருத்துவர் கழகத் தீர்மானம்.

இந்தி ஆட்சி மொழியானால், இந்தி பேசாத மக்கள் நலன் கெடும். ஆதலின் இந்தியை எதிர்க்கின்றோம்.
—நெல்லை வழக்குரைஞர் கழகத் தீர்மானம்.